ஸ்ரீ. ரவீந்திர நாத் டாகூர்

எழுதிய

சிறு கதைத் தொகுதி

இரண்டாம் பாகம்.

சகம் ௧௮௪௯.

இந்திய பதிப்புச் சாலை

௧0, துய்ப்ளெக்ஸ் ராஜ வீதி.

புதுச்சேரி

அட்டவணை. 3699

முகவுரை.

முதல் பாகத்தை வெளியிடும்போது நமக்கு மனதில் ஒருவித சந்தேகமிருந்தது. தமிழ் நாட்டில் தக்க கதாசிரியர்கள் நூல்களை இயற்றி முன்னுக்கு வாராததின் காரணம் ஒருவேளை தமிழ் ஜனங்களுக்கே உத்தமகதைகளில் சுவையில்லையோ என்று எண்ணினேம்.

படிக்கும் தருணத்தில் மயிர் சிலர்க்கச்செய்து பிறகு மனதில் ஒருவித அச்சத்தையும் மனித சமூகத்தினிடத்தில் ஒருவித அருவருப்பும் உண்டாக்கும் வியர்த்தக் கதைகளும், யோக்கியனை ஒருவன் பேரில் வீண் சந்தேகத்தை உண்டு பண்ணி விட்டு கதைப்புத்தகத்தின் கடைசி பக்கத்தில் பரம சாதுவாக இதுவரையில் நடித்து வந்த மற்றொருவன்தான் குற்றவாளி என்று நிரூபிக்கும் துப்பறியும் பொய்க்கதைகளும் நூற்றுக்கணக்காக வருஷா வருஷம் உண்டாவதைப் பார்த்தால் நாம் எண்ணினது உண்மைதானோ வென்று பயமுற இடம் தந்தது. நாம் கொண்ட சந்தேகம் வீண் என்பதை நாம் வெளியிட்ட முதல் பாகமே நிரூபித்து விட்டது.

சிறீ

முதல் பாகத்தைப் படித்தவர்கள் இக்கதைகளில் ஸம்பவங்கள் அதிகமாக இல்லை என்று அதிருப்தி பட்டு இரண்டாம் பாகத்தை விரும்பாது சும்மாயிராமல் இரண்டாம் பாகத்தை தமக்கு அனுப்பும்படி நாம் அதை அச்சிடத் துவக்குமுன்னதாகவே பலர் நமக்கு எழுதிக் கேட்டார்கள். நம்மவர்களுக்கு ஆழ்ந்த கருத்துகளை உண்டாக்கும் கதைகளில் உள்ள அவாவைக் கண்டு நமக்கும் உற்சாகம் பிறந்தது.

இவ்விரண்டாம் பாகத்தை உயர்ந்த கடிதத்தில் அச்சடிப்பித்ததோடு சேலம் காலேஜ் பிரின்ஸிபால் அதாவது தலைமை உபாத்தியாயராகிய ஸ்ரீமான் சு. கி. யக்ஞ நாராயண அய்யர் அவர்கள் தக்க ஆராய்ச்சியுடன் அளித்த மதிப்புரையையும் இதில் சேர்த்திருக்கிறோம். நம் தமிழபிமானிகள் இதையும் படித்துப் பயனடைந்து தமிழ் இலக்கியங்களை விருத்திசெய்ய முன்வரவேண்டும் என்பது எமது முக்கிய பிரார்த்தனை.

பதிப்பாசிரியர்.

மதிப்புரை.

க

மகா கவியாகிய ஸ்ரீ ரவீந்திரநாத் டாகூரின் பெயரைக் கேள்விப்படாதவர்கள் நம் நாட்டுக் கல்விமான்களுள் வெகு சிலரேதான் இருப்பார்கள் என்பது என் நம்பிக்கை. தக்க படிப்புள்ளவர்களில் பெரும்பாலர் அவரைப்பற்றி அபிமானத்தோடும் தேசபக்தியோடும் புகழ்ந்து பேசி வந்தாலும் வெகு சிலரே அவரைப் படித்தறிந்து பின்பற்ற முயலுகிறார்கள் என்ற சந்தேகம் எனக்குண்டு. இந்த சந்தேகம் வீணானது என்று ஏற்படுமானால் அதுவே எனக்கு பெருத்த சந்தோஷத்தைத் தரும்.

ஒவ்வொரு மகான் உதிக்கும்பொழுதும் கால தேச சந்தருப்பங்கள் அதற்கு ஒத்தே இருக்கும் என்று சொல்வது வழக்கம். காலதேச சந்தருப்பங்களை அறிந்து எவ்வித மகான் அங்கு உண்டாவான் என்று சொல்வது அரிதானாலும் அவன் உதித்த பிறகு அவனுடைய வரவுக்குக் காலதேச சந்தருப்பங்கள் எப்படி உதவிபுரிந்தன என்பதை எடுத்துக் காட்டுவது சாத்தியமாகும். எனவே சென்ற நூற்

ற்றாண்டில் வங்காளத்தில் தோன்றிய அறிஞர்களின் மனப்போக்கை கவனித்தால் ஒவ்வொரு துறையிலும் அங்கு ஏற்பட்ட தேசீயக் கிளர்ச்சியின் தன்மை விளங்கும். மேற்கத்திய நாகரிகத்தின் ஓதம் முதல் முதல் வங்காளத்தில் பலிக்க ஆரம்பித்து இரண்டு நாகரிகங்களும் மோதினதின் பயனாக உத்தமமான கனிகள் அங்கு காய்த்தன. ராம் மோஹன் ராய், மகரிஷி தேவேந்திரநாத் டாகூர், கேசவ சந்திரஸேன், விவேகானந்தர் முதலியவர்கள் சமய விஷயங்களிலும், W. C. பானர்ஜி, சுரேந்திரநாத் பானர்ஜி முதலான எண்ணிறந்தவர்கள் ராஜீய விஷயங்களிலும், மைகெல் மதுஸூதன தத்தர், ஈசுரசந்திர வித்யாஸாகர், பங்கிம் சந்திர சடோபாத்தியர் முதலியவர்கள் ஸாஹித்ய விஷயங்களிலும், இன்னும் பல துறைகளில் பல மகான்களுமாகிய இவர்கள் எல்லோரும் கீழ் நாடுகளின் மனப்பான்மையும் மேல்நாடுகளின் மனப்பான்மையும் ஒன்றோடொன்று கலந்து தோய்ந்ததனால் உண்டான இனிய கனிகளாவார்கள்.

வங்காளத்தில் ஆங்கிலம் பரவுவதற்குச் செய்த முயற்சியில் எதிர்பாராத பயனாக தாய்பாஷை வளர ஆரம்பித்த விஷயத்தை தமிழைத் தாயாக போற்றும் நாம் கவனித்தல் அவசியம். வங்காளத்து வித்து

வான்கள் மேல்நாட்டு நூற்களைக் கற்ற பிறகு அவை களைப்போல தம் தாய்பாஷையிலும் ஸ்வயமாக நூல் களைச் சமைக்க நிச்சயித்தார்கள. இது நிமித்தம் அங்கு பூர்வகாலத்தில் தோன்றிய வித்தியாபதி, சண்டிதாஸர், ராமபிரஸாதர் முதலிய பெரியோர் கள் அனைவர் இருந்தாலும் அவர்களை விட புகழ் பெற்ற நூலாசிரியர்களை தற்பொழுது காணலாம். தம் நூல்களில் இவர்கள் கையாளும் விஷயங்களும் முன்போலில்லாமல் பலவகைப்பட் டிருக்கின்றன. இப்படிச்சென்ற நூறுவருஷங்களாகப் பெருகிவரும் வித்தியா பிரவாகத்தின் உச்சியில் நமது ஸ்ரீ ரவீந் திரநாத் டாகூர் தம்முடைய மேதையால் விளங்கு கிறார்.

மேல் நாட்டு விஷயங்களில் நமக்குப் பொருத் தமானவைகளை எடுத்துக் கொள்வது சுலபமாக நடைபெறவில்லை என்பதை நாம் கவனிக்க வேண்டியது அவசியம். முதல் முதலில் மேற்கத் திய விஷயங்கள் யாவும் வெகு சிரேஷ்டமானவை என்று குருட்டுத்தனமாகப் புகழ்ந்து அவைகளைப் பின்பற்றுவதும், இரண்டாவது அவைகளின் குண குணங்களைச் சோதித்து மதிப்பதும், மூன்றுவது நம்முடைய வழக்க ஒழுக்கங்களுக்கு அவைகளில் ஏற்றவைகளை எடுத்துக்கொள்வதும் மற்றவைகளை

விலக்கி விடுவதுமாகிய மூன்று படிகளையும் ஒவ்வொன்றாக எறித்தான் கடைசியில் சுதேச கலைகளின் உச்சிக்கு வரவேண்டி யிருந்தது. கேசவ சந்திரஸேனை விட விவேகானந்தரிடத்தில் ஒவ்வாத மேல்நாட்டுக் கொள்கைகளும் மற்ற மாசுகளும் இல்லாத சுத்தமான ஹிந்து மதம் எப்படி காணப்படுகிறதோ அப்படியேதான் ஸ்ரீ ரவீந்திரரிடத்தில் மைகெல் தத், தோரு தத் முதலியவர்களை விட சுத்தமான உள்நாட்டு மனோபாவங்கள் கிடைக்கின்றன. ரவீந்திரநாத் டாகூர் நம் நாட்டு ஆலமரத்தைப் போன்றவர், தாயாகிய ஜன்ம பூமியில் ஆழ வேரூன்றி நான்கு புறத்திலும் விசாலமாகக் கிளைகளைப் பரப்பி எல்லோருக்கும் நிழல் தருகிறார். அவர் நம்முடைய பழக்க வழக்கங்களுக்கு அன்னியரன்று. அவருடைய மேன்மைக்கும் இது தான் மூல காரணம். மேல்நாட்டுக் கல்விப்பயிற்சி சிறிது மில்லாதவன் கூட அவர் நூல்களைப் படித்தறியலாம்.

வெளி விஷயங்கள் பலவற்றில் இம்மகான் உழைத்து வருவது போலவே அவருடைய நூல்களும் பல துறைகளில் கலந்து நிற்கின்றன. அவருக்கு உலக கியாதி சம்பாதித்துக் கொடுத்த கீதாஞ்ஜலி நூலை தாம் பங்காளி பாஷையில் செய்துள்ள பண் நிரம்பிய கீதங்களிலிருந்து எடுத்து,

தாமே ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துத் தொகுத்தார். கவி ஒருவன் சுவானுபூதியில் ஆழ்ந்திருக்கும் நிலைமையில் ஒரு பொருளை—அது உலக சம்பந்தம் கொண்டதானாலும் சரி, ஆத்ம சம்பந்தம் கொண்டதானாலும் சரி—அழகான சொற்களால் எடுத்துக் காட்டுவது காவியமாகும். பண் நிறைந்த இக்காவியம் இயல்பாகவே சிறிதாகத்தான் இருக்கும். இதை நினைத்துத்தான் எத்கார் அலன் போ என்னும் ஆசிரியன் நீண்ட காவியம் என்பது ஒரு சொல்வழுவென்றான். இருந்தாலும் இதிஹாஸம், கீதம், நீதிச்செய்யுள், நாடகவியல், வசன இலக்கியம் ஆகிய இவைகளை எல்லாம் ஸாஹித்யத்தின் பகுதிகள் என்றே எல்லோரும் கருதுகிறார்கள். டாகூரும், கீதங்கள், நயம் மிகுந்த நாடகங்கள், திருவள்ளுவர் பேக்கன் போன்றவர்களின் வாக்குகளுக்கு இணையான நீதிமொழிகள் ஆகிய பல நூல்களைச் செய்திருக்கிறார். இவைகளுக்கு எவ்விதத்திலும் குறையாத அவருடைய மனோகரமான சிறுகதைத் தொகுதியும் அவருடைய சிறந்த நூல்களில் ஒன்றே.

உ

நான் டாகூரின் ஜீவிய சரித்திரத்தை எழுத வந்தவனல்ல. அதைப்பற்றி அனைவர் நம் நாட்டி

லும் மேனுட்டிலும் எழுதியிருக்கிறார்கள். கவிவர் என்பவனுடைய உறுப்புகளை ஒவ்வொன்ருக எப்படி விவிப்புத்சர்கள் அளந்தார்களோ அப்படி டாகூரின் கதை சொல்லும் திறமையை மாத்திரமாவது நான் நன்கறிந்து மற்றவர்களுக்கும் அதை அறிவூட்டப்-பெறவேணுகில் அதுவே எனக்குப் போதுமானது.

சிறு கதைகளுக்கும் அதாவது உபாக்கியானங்களுக்கும் பெரிய கதைகளுக்கும் விஷயம் மனித வாழ்க்கையேதான். உபாக்கியானம் என்பது பெரிய கதையின் சுருக்கமன்று கதைகளில் செய்வதைப்போல பாத்திரங்களின் குணகுணங்களை உபாக்கியானங்களில் விரித்துக் காட்டுவது அசாத்தியமாஞலும் படிப்போர் மனதில் ஆழ்ந்த எண்ணங்களைத் தோன்றச்செய்வது தான் இதனுடைய முக்கிய நோக்கம். உருவம் சிறிதாகையால் இதில் பெரிய பெரிய வர்ணனைகளுக்கு இடமில்லை. தற்கால ஆசிரியன் ஒருவன் வெகு நயத்துடன் சொல்லியது போல சிறுகதை மனதின் 'தூண்டுகோலே யன்றி (பாத்திரங்களின் சரித்திரத்தை ஒரு முடிவுக்குக் கொண்டுவந்து மனதில்) திருப்தியுண்டாக்குவதன்று'. ஆனது பற்றி பெரிய கதைகளைக்காட்டிலும் சிறியகதைகளில் படிப்பவர்கள் ஆசிரியனேடு கூட சேர்ந்துழைக்கவேண்டும்.

கஅ

சென்ற நூற்றாண்டிலிருந்த வால்டர் பட்டர் என்னும் ஆசிரியன் சொல்லியதுபோல ஒரு நூலின் குறைகுணங்களைச் சீர்தூக்கி மதிக்குமுன் அந்நூலைப் படித்த்பொழுது தன் மனதில் ஏற்பட்ட பாவங்களைத் தனித்தனி பிரித்துப் பரிசோதித்துப் பார்க்கவேண்டும். அதுதான் முதல்படி. "ஒரு பாட்டையோ அல்லது ஒரு படத்தையோ அல்லது ஒரு காவ்யத்தையோ கவனிக்கும்போது அவைகளிலுள்ள உருபடிகள் தன்னோடு யாது சம்பந்தம் கொண்டிருக்கின்றன என்பதையும், தனக்கு இன்பமாயுள்ளவைகளா என்பதையும், அவ்வின்பத்தின் தன்மையும் அளவும் யாது என்பதையும், அவைகளை கவனித்து வந்ததனால் தனக்குள் ஏதாவது மாற்றமுண்டா என்பதையும் பகுத்தறியவேண்டும்" இந்த முறையையே தழுவி நான் இக்கதைகளைப் படித்ததனால் என் மனதில் ஏற்பட்டவைகளைக் குறிப்பிடுகிறேன். அவை மற்றவர்களுக்கும் உபயோகமாகலாம்.

ந

இவ்விரண்டு பாகங்களி லடங்கிய கதைகளைப் பற்றி எழுதுவதற்குமுன் சில பொதுவான விஷயங்களைக் குறிப்பிடுகிறேன்.

டாகூர் கதைகளைப் படிப்பவர்களுக்கு அவர் ஒரு பெரிய ஞானி என்பது விளங்கும். மனோராசியம் செய்துகொண்டு வெறும் வாக்குவாதம் செய்யும் பல பண்டிதர்களைப் போலல்லாமல் இந்த ஜகத்துக்குள் அந்தர்யாமியா யிருக்கும் ஏக பொருளை அறியும் திறமை வாய்ந்தவர் இவர். பூர்வ ரிஷிகளைப் போலவே இவருக்கும் அந்த ஏக பொருள் சச்சிதானந்தமாகவே இருக்கிறது. இவ்வுண்மை அவருக்குள் தோய்ந்து கிடப்பதனுல் அவர் கதைகள் புனையும்போதும் தத்துவ விசாரணை செய்யும்போதும், கலைகளின் சுவரூபம், உலக வாழ்க்கையில் ஸ்திரீகளின் அம்சம், உலகத்தில் தீங்கின் மூலம், முதலிய அரிய பெரிய விஷயங்களைப்பற்றி வியாஸங்கள் எழுதும்போதும் அது வெகு பிரகாசமாக ஜொலிக்கிறது. 'ஏகமேவாத்விதீயம் ப்ரம்ம' என்னும் மகா வாக்கியத்தின் பேருண்மையை பகவான் சங்கராசாரியர், தம்முடையபாஷியத்திலும் சாமான்யர்களுக்கும் அர்த்தமாகும் 'பஜகோவிந்த' சுலோகங்களிலும், அவர்செய்த மற்ற நூல்களிலும் எப்படி வெள்ளிடையாகக் காட்டுகிருரோ அப்படியே டாகூரும் தம்முடைய சொந்த அனுபவத்தில் கொண்டுவந்திருக்கும் அரிய உபநிஷத்து தத்துவங்களை அவர் செய்திருக்கும் நூல்களிலெல்லாம் விளக்கியிருக்கிருர்.

அவர் நூல்களின் மற்றொரு குணம் சாமான்ய ஜனங்களின் உரிமையைப்பற்றிப் பேசுவதேயாகும் தற்காலப் போக்கும் கூட சாமான்யஜனங்கள் (demiocarcy) மேன்மை யடைய வேண்டும் என்பதையே நாடிச் செல்லுகிறது. 'பிரெஞ்சு ரெவொலூஷன்' என்று சொல்லப்படும் மகா கிளர்ச்சி பிரெஞ்சுதேசத்தில் தோன்றினது முதல் சாமான்ய ஜனங்களின் சுகதுக்கங்களே மேற்கத்திய ஸாஹித்யங்களின் இலக்ஷியங்களாகி நாளுக்குநாள் அவைகள் தம் அளவிலும், சொல் வன்மையிலும் பெருத்துக்கொண்டே வருகின்றன. வால்ட் விட்மன் என்னும் அமெரிக்கா தேசத்து கவிஞன் செய்த நூல்களில் எல்லாம் இவைகள்தான் வெகுமுக்கியம். மற்ற ஆசிரியர்களின் நூல்களுக்குள்ளும்கூட இவைகள்தெளிவாகக்காணப்படுகின்றன. நம்முடைய கவிசிரேஷ்டர் பங்காளத்தில் ஒரு செல்வக்குடும்பத்தில் பிறந்தவரே யானாலும் செல்வமற்ற தாழ்ந்த வகுப்பினர்களின் வாழ்க்கையிலுள்ள மேன்மையைக் கண்டுவிட்டு அதைப்பற்றியே அவர் எழுதலானார். வெகு காலம் வரைக்கும் பொதுவாக நூல்கள் யாவும் செல்வாக்குள்ள மேல் வகுப்பினர்களைப் பற்றியே பேசிவந்தன. ராஜாக்களும், ராணிகளுமேதான் நாடகங்களிலும்,காவியங்களிலும், கதைகளிலும் வர்ணிக்

கப் படுவதற்கு யோக்கியதையுடையவர்கள் என்று கருதப்பட்டிருந்தார்கள். ஆனால் நம் தமிழ் நாட்டில் சிறு குழந்தைகளைத் தூங்கவைப்பதற்காகச் சொல்லும் பாட்டிக்கதைகள் 'ஒரே ஒரு ஊரிலே ஒரு ஆம்படியான் பெண்டாட்டி' என்று ஆரம்பிப்பது தான் சாதாரண குடும்பங்களில் வழக்கம் என்றாலும், 'மதுராபுரி, மதுராபுரி என்று ஒரு பட்டணம் அதில் மதுரேசன் என்று ஒரு ராஜா' என்று கதைகள் சொல்ல ஆரம்பிப்பது அதைவிட சாதாரணம் என்பது தெரிந்த விஷயம். இப்படிச் செய்வதை விட்டு டாகூர், தெருக்கள் தோறும் பண்டம் விற்பவனையும் (க), ஊமைப்பெண்ணையும் (உ), ஏழைச் சிறுவனையும் (ங), நாட்டுப்புறபத்திராதிபனையுமே (ச) கதா நாயகர்களாகக் கொண்டிருக்கிறார். இது அவர் சுபாவத்திற்கு வெகு பொருத்தமானதென்றே சொல்லவேண்டும்.

"பரம ஏழைகளும், வெகு தாழ்ந்தவர்களும், மகா பாதகர்களும் இருக்குமிடமன்றோ உன் திருவடிகளைத் தாங்குமிடம்," "பூமியைப் பிளந்து உழுது பயிரிடும் உழவன் பக்கத்திலும், கற்களை

(க) காபூல்காரன் (உ) சுபா (ங) ரஜாக்காலம் (ச) பத்திராதிபர்.

யுடைத்துப் பாதை யமைப்போன் பக்கத்திலும் இருப்பான் அவன்" என்று தம்முடைய என்று மழியாத கீதங்களில் அவரே பாடியிருக்கிறார்.

சந்தடியற்று சாந்தமாயிருக்கும் தனிமையான சாந்திநிகேதனம் என்னும் தோட்டத்தில் அவர் தந்தையாகிய மகரிஷி தேவேந்திரநாத் டாகூர் பகவத்தியானம் செய்வது வழக்கம். அப்புனித பூமியை சிறு பிள்ளைகள் படித்து விளையாடிக் கொண்டு அபிவிருத்தி யடையும் பள்ளிக்கூடமாக மாற்றியதை நாம் கவனித்தால் அவர் சாமான்ய ஜனங்கள் விஷயத்தில் கொண்டுள்ள உயர்ந்த நோக்கமும், அவர்களுக்குத் தொண்டுபுரியும் தன்மையும், விவேகானந்தர் சொன்ன பிரகாரம் 'உயிருள்ள நாராயணர்களை' அவர் பூஜிக்கும் வகையும் நமக்கு நன்கு விளங்குகின்றன தம் குடும்பத்துக்குச் சேர்ந்த பூஸ்திதிகளை நிர்வகிப்பதற்காக அவர் தந்தை அவரை அனுப்பியபோது தம் குடித்தனக்காரர்களிடத்தில் வெகு அனுதாபத்தோடு அவர் நடந்துகொண்ட விஷயம் எல்லோரும் அறிந்ததே அவருடைய மனோபாவங்கள் உருக்கொண்டு நிலைபெறும் பிராயம் அதுவே யாகையால், அச்சமயத்தில் பிரகிருதி, சாமான்ய ஜனங்கள் ஆகிய இவ்விரண்டு பேராசிரியர்களிடத்திலிருந்தும் அரிய

பாடங்களை அவர் படித்துக்கொண்டார். பெரிய கதாசிரியருக்குள் ஒருத்தியாகிய ஜ்யார்ஜ் எலியட் என்னும் ஆங்கிலமாது சொன்னதாவது:

"என் பேச்சை நம்பு, மங்கலான கண்களோடு மட்டி பார்வைப் பார்த்துக்கொண்டு சர்வசாதாரணக் குரலில் பேசிவரும் மனிதனுடைய ஆத்மானுபூதியில் பதிந்து கிடக்கும் கவிதையையும் கருணை ரஸத்தையும், துக்க நிகழ்ச்சிகளையும் ஹாஸ்ய சம்பவங்களையும் காண நீயும் என்கூடக் கற்றுக்கொள்வாயாகில் சொல்லொணாத லாபம் நீ அடைவாய்" என்ருள். நம் நூலாசிரியன் இவ்வுண்மையை இயற்கையாகவே அறிந்துகொண்டு அதைப் பின்பற்றியிருக்கிருர்.

இவர் கதைகளில் மற்றொரு குணம் காணப்படுகிறது அதாவது இயற்கை விரோதமில்லாமை. கதைகளைப் படிக்கும்பொழுது அவைகள் உண்மைதான் என்னும் நம்பிக்கை நமக்குள்ளேயே உதிக்கிறது. பொதுவாக கதைகளில், அதுவும் நம் நாட்டுக்கதைகளில், அசம்பாவியங்களும் அசம்பாவிதங்களும் மண்டிக்கிடக்கின்றன. கற்பனைசெய்வதில் நம் ஜாதியாருக்குத் திறமை அதிகமாகையால் மனோவியாபாரங்களில் எல்லாம் இயற்கை விரோதமான பல பொருள்களை நாம் நிரப்பி விடுகிறோம்.

நம் கதைகளில் இப்படிப்பட்டவைகள் தான் வெகு சாதாரணமாய்க் காணப்படுகின்றன. யாராவது ஒருவன் 'அது அப்படி நடந்திருப்பது முடியாத காரியமாயிற்றே' என்று கேட்பானேயானால் 'கதைக்குக் காலுண்டோ' என்னும் மறுமொழி உடனே வந்துவிடும். இம்மாதிரியான கதைகள் தான் குழந்தைகளுக்குப் பேரானந்தம் கொடுக்கின்றன. நம் நூலாசிரியர் கூட 'ஒரே ஒரு காலத்தில் ஒரு ராஜா இருந்தான்' என்ற கதையில் குழந்தைகளுக்கு இதில் உண்டாகும் சந்தோஷத்தை விளக்கியிருக்கிறார். இருந்தாலும் அவர் கதைகள் உண்மையைத் தழுவியே இருக்கின்றன. ஆனால் அவைகள் இயற்கையின் வெறும் பிரதி பிம்பம் அல்ல; அதாவது சரித்திர உண்மைகளைப்போல குறித்த இடத்தில் குறித்த காலத்தில் நிகழ்ந்த விவரத்தைச் சொல்லி நிறுத்தி விடுவதில்லை. அவர் கதைகளின் விஷயம் 'கவிதா ஸத்தியங்கள்' என்றே சொல்லலாம்; அதாவது இவ்வுலகத்தில் நிகழ்வதற்கு வேண்டிய சடங்குகளைப் பெறாத சம்பவங்கள் என்று மெரிடித் என்னும் ஆங்கில ஆசிரியன் வெகு அழகாகச் சொல்லியவைகளேயாகும். வெகு சாதாரணமான ஒரு சம்பவத்தை உருக்கத்தோடு சொன்னால் அது மனதைக் கரைப்பதுபோல

பறக்கும் குதிரைகளும் பொன் அரண்மனைகளும் கூட செய்வதில்லை. அவருடைய கதைகள் பெரும்பாலும் நம் உணர்ச்சியோடு நேரில் கலப்பதனால் அவைகளின் உண்மை தானாகவே நமக்குள் உதிக்கிறது.

நூல்களை நுட்பமாய்ப் பரிசோதிப்பவர்களில் சிலர் கதை எழுதும்போது அதன் ஆசிரியன் இன்ன கருத்து கொண்டு செய்தான் என்பதை நிரூப்பிக்க முயலுகிறார்கள். அது விருதா சிரமம் என்று டாகூரே சொல்லியிருக்கிறார். ஏனெனில் அதைச் செய்யும்போது கைதேர்ந்த சிற்பியைப் போல ஆசிரியன் தன் மனதிலுள்ள பாவத்தை வெளியிடுகின்றானே யன்றி அதை வெளியிட்ட பின் அது என்ன நீதியைக் கற்பிக்கும் என்றாவது மற்றவர்கள் மனதில் அது எப்படி படியும் என்றாவது கவனிப்பதில்லை. "புள்ளிமானுக்குத் தெரியாது, தன்தோலில் புள்ளிகள் ஏன் இருக்கின்றன என்பது. ஆனால் அவைகளைப்பற்றிக் குறிப்புகள் எழுதுபவர்கள் சொல்வது அப்புள்ளிகள் இருப்பதனால் அம் மிருகங்களை வேட்டையாடுபவர்களுக்கு அவைகள் நன்கு புலப்படுவதில்லை என்று. இந்த யுக்தி வாதம் உண்மையாகவும் இருக்கலாம், பொய்யாகவும் இருக்கலாம், ஆனால் ஒன்று மாத்திரம்

வெளிப்படை, புள்ளிமான் மனதில் இந்த எண்ணம் சிறிதேனும் இல்லை.*" ஆசிரியன் ஒரு நூலைச் செய்யும்போது அவன் ஒரு கருத்துகொண்டிருந்தாலும் சரி, கொள்ளாதிருந்தாலும் சரி, அதை ஆராய்ச்சியுடன் படிக்கும் ஒருவனுக்கு ஆசிரியன் நூல்கள் பொதுப்படையான சில நோக்கங்களையும், தனி வழிகளைக் காட்டும் சில அறிகுறிகளையும் தழுவியே இருக்கின்றன என்பது தென்படாமல் போகாது. உதாரணமாக பிரெஞ்சு நூலாசிரியன் வொல்தேர் எழுதிய காந்தித் என்னும் புஸ்தகத்தில் வரும் டாக்டர் பாங்க்ளாஸ் என்பவனைப்போல 'நாம் வாழும் உலகம் மற்றெல்லாவற்றையும் விட மேலானது' என்று நம் ஆசிரியர் சொல்லமாட்டார். அர்த்தமில்லாத உலக நடவடிக்கைகள் வெகு காலமாக வழக்கத்திலிருக்கின்றன என்னும் காரணத்தைக் கொண்டு மாத்திரம் அவைகளை அவர் சிறிதும் பாராட்டுவதில்லை. 'புராண மித்யேவ நஸாது ஸர்வம்' (பழயன என்பதனாலேயே எல்லாம் நல்லதாகி விடாது) என்று கீர்த்திபெற்ற காளிதாஸனைப்போல இவரும் எண்ணுகிறார் போலும். பொது

---

* மாடர்ன் ரிவ்யூ செப்டெம்பர் 1918: ஒரு கதையின் பொருளும் அதன் கருத்தும். (ஸ்ரீ ரவீந்திரநாத் டாகூர்.)

ஒழுக்கம், ராஜ்ய விஷயம், மதம் முதலியவைகளின் சம்பந்தமாக ஏற்பட்டுள்ள கொப்புளங்களைக் கிள்ளுவதில் அவர் சற்றும் இரக்கம் சொள்வதில்லை. அவருடைய 'இஸ்பேட் ராஜ்யம்' 'தியாகம்' முதலியவைகளில் கிடக்கும் அர்த்தங்களை காதுள்ளவர்கள் கேட்டறியலாம்.

நீல ஆகாயம்போல் அவருடைய நுண்ணிய ஹாஸ்ய பாவம் அவர் எழுதிய நூல்களிலெல்லாம் பரவிக் கிடக்கிறது. ஹாஸ்ய ரஸம் உலக வாழ்க்கையின் ஸாரம் என்று சொல்லுவார்கள். ஸ்விப்ட் என்னும் ஆங்கில ஆசிரியனுடைய ஹாஸ்ய பாவங்கள் மனதில் கடுகடுப்பு உண்டாக்கி புண்படுத்துவதைப்போலச் செய்யாமல் டாகூரினுடைய ஹாஸ்ய பாவங்கள் மிருதுவாக இருப்பதோடு தம் நோக்கங்களைச் சாதிக்கும் தன்மையுடையன.

நம் ஆசிரியர் நல்ல கவிஞராகையால் உவமாலங்காரங்களை வெகு தாராளமாகவே கையாளுகிறார். முன் கவிஞர்களைப்போலே உத்பிரேக்ஷை, அதிசயோக்தி இவைகளை அவர் தேடுவதில்லை. டாகூரின் செய்யுள் நூல்கள், கதைகள், கடிதங்கள், அரிய உபன்னியாஸங்கள், வியாஸங்கள் இவைகளில் எதைப்படித்தாலும் மனதில் தைக்கும்படியான புதுமாதிரி உவமைகளைக் காணுமலிருக்க முடியாது.

காளிதாஸன் உவமாலங்காரத்தில் பெயர்பெற்றவன்; ஆனால் டாகூர் தம் சொல்லணிகளின் செறிவால் அவனைவிட ஒருகை மேலென்றே எனக்குப் படுகிறது.

இப்பொழுது விமரிசனை செய்யும் இரண்டு பாகங்களிலும் அடங்கியுள்ள கதைகளிலிருந்து சில உதாரணங்கள் எடுப்போம்.

குன்றுகளை மறைத்த மூடுபனியில் அவைகள், "சித்திரக்காரன் எழுதிப் பின் அழிக்க முயற்சி செய்துகொண்டிருந்த படம்போலே" தோன்றின (ஆசாபங்கம்)

"அவளுடைய சொற்கள் பொன்னிறக் கதிர்கள் மின்னும் வயல்களின்மீது காலை யிளங்காற்று வீசுவதுபோலே யிருந்தன." (ஷை)

"சிறிது சிரமத்துடன் மஞ்சத்திலேறிப் படுப்பாள். அப்போது அவளுடைய மேனி, மரத்தின் இலைகளுக்கிடையே தொளைவழியாக வந்த சந்திர கிரணம் நிழலின்மீது சோம்பிக்கிடப்பதுபோலே தோன்றும்." (மானபங்கம்)

"தோணிமீதில் மஹமதிய செம்படவர் மாலை ஜபம் செய்தனர். மேற்குவானமாகிய ஒளிகொண்ட திரைமீது அவர்களுடைய மவுனமான தொழுகை

ஒரு சித்திரம் எழுதியதைப்போலே தோன்றிற்று." (நஷ்ட பூஷணம்)

"அவியப்போகிற விளக்கைப்போலே நெஞ்சு புடைத்துக்கொண்டது." (ஷை)

"நாளிறுதியில் மண்மீது விழுந்துவிட்ட தொருமலர்போலே கிடந்தாள்." (பத்திராகிபர்)

சண்டிபுரத்து நகி "அந்நாட்டிலொரு கிருஹஸ் தன் வீட்டுக் கன்னிபோன்றது." (ஸபா)

இம்மாதிரியான உதாரணங்களை ஆயிரக்கணக் காக சுலபமாக எடுக்கலாம். நம் கவிஞரின் கண் ணோட்டம் ஆகாயத்திலிருந்து பூமிக்கும் பூமியி லிருந்து ஆகாயத்துக்குமாகத் தாவிக்கொண்டே இருக்கிறது. ஜடலோகத்திலும் சூக்ஷ்மலோகத் திலும் நிகழ்வனவைகளுக்குள் பயிற்சியற்ற சாமான் யர் கண்களில் படாத உவமைகளை அவர் எடுத்துக் காட்டும்போது அவைகளின் பொருத்தம் வெகு நன்ருக விளங்குகிறது. அவர் உவமைகளைப்பற்றி மாத்திரம் எழுதப் புகுந்தால் அது ஒரு தனிவியாஸ மாகிவிடும். வேறு பல ஆசிரியர்கள் கையாளும் உபமான உபமேயங்களுக்குள் அதிக பொருத்தமில் லாமல் அவைவெறும் 'குறுகிய வர்ணனைகளாக' முடி கின்றன. இரண்டு பெரும் கோளங்கள் ஒரு புள்ளி

யில் மாத்திரம் சந்திப்பதைப்போலத் தான் இருக்கும் இவர்கள் உவமைகளெல்லாம். ஆனல் டாகூரினுடைய உவமைகள் பூரண உவமைகள் என்றே சொல்லலாம். இங்கிலந்திலுள்ள 'மெடபிஸிகல்' (அபரோக்ஷ) கவிஞர்களைப்போல வளைந்து வளைந்து சென்று கைக்கு எட்டாத உபமானங்களை அவர் தேடுவதில்லை. அவர் கையாளுவதெல்லாம் சுலபமானவைகளும் இயற்கையானவைகளுமே. இக்கதைகளில் பல விடங்களில் காணப்படும் உவமைகளின் பொருத்தங்களையும் அவைகளின் அழகையும் தேர்ந்தறியாதவர்கள் கல்வியின்பத்தின் சுவச்சமான சுவையை இழந்து விடுகிறார்கள்.

அவர் எழுதும் கதைகளில் சிறு விசேஷம் ஒன்றுண்டு; அதாவது அவைகளின் அமைப்பு பிரத்தியேகமானது. நம்முடைய பழய புத்தகங்களில் நானுவித மிருகங்கள் பேசுவதையும் கதை சொல்லுவதையும் கேட்டிருக்கிறோம். கொஞ்சகாலத்துக்குப் பிறகு வேதாளம் விக்கிரமாதித்த ராஜனுக்கு ஒரு கதையைச்சொல்ல ஆரம்பித்து கடைசியில் ஒரு விடுகதையோடு நிறுத்துவதையும், அம்மகாராஜாவின் சிங்காதனத்திலுள்ள பதுமைகள் அதை ஏற விரும்பும் மற்றொரு அரசனுக்குக் கதைகளைச் சொல்வதையும் நாம் கேட்டிருந்தாலும்

'ஆற்றங்கரைப்படித்துறை'என்பதுபோலுள்ள கதைகளில் சொல்லும் மாதிரி வேறாகவே இருக்கிறது. 'எலும்புக்கூடு', 'க்ஷுதிதபாஷாணம்'; 'ஆசாபங்கம்,' 'நள்ளிரவிலே,' 'நஷ்டபூஷணம்' முதலிய கதைகளின் கடைசியில் அவைகள் வெறும் கனவுகளோ, அல்லது மதிமயங்கியோ மயங்காமலோ கற்பனை செய்யும் மனோராச்சியங்கள் தானோ என்று தோன்றும்படி அவர் முடித்திருக்கிறார். 'ஓ இதென்ன ஒரு பெரிய காரியமா, இது ஒரு அற்பம் தானே' என்று பிரகிருதி இரத்தினங்களைக் கொழித்து விட்டு அலட்சியமா யிருப்பதைப்போல இவரும் ராஜதோரணையில் தம்முடைய இரத்தினங்களை வெளியில் தூற்றிவிட்டு சும்மா இருக்கிறார்போலும். இதே மாதிரிதான் ஷேக்ஸ்பியரின் 'நீ வேண்டியபடி,' 'பன்னிரண்டாம் இரவு அல்லது உன்னிஷ்டம் போலவே,' முதலிய நாடகங்களின் பெயர்களைப்பற்றியும் சொல்லுகிறார்கள்.

௬

மற்ற பாஷைகளின் இலக்கியங்களைத் தமிழில் மொழிபெயர்ப்பதைப் பற்றி இங்கு சற்று சொல்வோம். மேல்நாட்டாரோடு ஏற்பட்ட சம்பந்தத்தால் வங்காளி பாஷைக்கு உண்டான நன்மையைப் பற்றி முன்னமே சொல்லியிருக்கிறோம். தமிழும்

கண்விழித்து எழுவதற்கு உள்ள அறிகுறிகளை நாம் காண்கிறோம். தமிழ் நாட்டு புத்திமான்கள் தம் பாஷையின் மூலமாகவே தம் எண்ணங்களை வெளியிடுவதில்லை. அன்றியும் தமிழர்களில் பெரும்பாலர் அன்னிய இலக்கியங்களிலுள்ள அருமையான நூல்களை அறிய முயலுவதில்லை. எல்லாம் நம் நூல்களில் இருக்கின்றன, வெளியிலிருந்து நாம் ஒன்றும் கற்றுக்கொள்ள வேண்டியதில்லை என்று சொல்லுவது போல் தேச டக்தியும் குறுகிய நோக்கமும் உடையவர்கள் கார்யமே யல்லது வேறல்ல. ஷேக்ஸ்பியர், மொலியேர் முதலானவர்கள் பெரும் நாடகாசிரியர்கள் என்று கொண்டாடுவதனால் நம் திருவள்ளுவருக்கும் கம்பருக்கும் ஒரு குறைவும் இல்லை எனெனில் நல்ல நாடகங்களை நாம் இன்னும் எழுத வேண்டியிருக்கிறது. ஸ்காட், டிகின்ஸ், தாகரே, தூமாஸ், ஹுகோ, ஜோலா முதலானோர்கள் பெரும் கதாசிரியர்கள் என்பதனால் நம் புகழேந்திக்கும் காளமேகருக்கும் இழிவு எற்பட்டுவிடாது; நாம் இன்னும் உயர்ந்த கதைகளை நம் பாஷையில் எழுத வேண்டியிருக்கிறது.

கிணற்றுத் தவளைப்போல இராமல் நம் குறைகளைத் தெரிந்து கொள்வது நம்மைத் திருத்திக் கொள்ளும்வழியில் முதல்படியாகும். வெளி இலக்

கியங்களிலிருந்து மொழிபெயர்த்து எடுத்துக் கொள்வது தாம் வளருவதற்கு ஒருவழி என்பது எல்லாரும் ஒப்புக்கொண்ட விஷயம். வெளிப் பொருள்களை உட்கொண்டு ஜீரணம்செய்து வளரு வதே உயிர்த்திருப்பதற்கு அறிகுறியாகும். புதுவழி களில் எழுதப்படும் இலக்கியங்களை பலர் விரும்பு கிறார்கள் என்பதற்கு நம் நாட்டில் பாவிக்கிடக்கும் 'ரெயினுள்ட்ஸ் நாவல்ஸ்' என்பவைகளின் மொழி பெயர்ப்பே தக்க சான்றாகும். ஆகையால் தமிழபி மானிகள் யாவரும் மற்ற இலக்கியங்களில் உள்ள மேன்மையான நூல்களை, முக்கியமாய் நம் பாரத தேசத்தின் மற்ற இலக்கியங்களி லுள்ளவைகளை மொழிபெயர்த்துத் தமிழர்களுக்குள் பரவச்செய்ய வேண்டும்.

இக்கதைகளின் தமிழ் மொழிபெயர்ப்பு எவ் வளவு செவ்வையாகச் செய்யப்பட்டிருக்கிறது என் பதை 'மாடர்ன் ரிவியூ' என்ற மாதபத்திரிகையில் இவைகளை ஆங்கிலத்தில் படித்தவர்கள் நன்குணா லாம். இதன் காரணம் பாரத தேசத்தவர்களாகிய நமக்குள் ஒரேவித நாகரிகமும் ஒழுக்கங்களும் பரவி இருப்பதே யாகும். நம் நாட்டிலுள்ள பலபாஷை களின் இலக்கியங்களும் பாரதசக்தியின் பலவகைப் பட்ட அம்சங்களேயாகும். ஆகையால் தான்

மொழிபெயர்ப்பு சுலபமாகயிருக்கிறது. கார்லைல் 'உலக வாழ்க்கையின் தட்டுமுட்டுகள் (உபகரணங்கள்)' என்று சொல்லும், ஜாதி, மதம், வாழ்க்கைப் பயனைப்பற்றிய நோக்கம் முதலியவைகளில் மொழி பெயர்ப்போன் முதனூலாசிரியனை விட வேறாக இருந்தால் அந்நூலின் பாஷையை எவ்வளவு நன்குணர்ந்திருந்தாலும் மொழிபெயர்ப்போன் சில குற்றங்களைத் தன்னையறியாமலே செய்ய நேரும். உதாரணமாக எனக்கு ஞாபகம் வரும் ஒன்றை இங்கு எடுத்துக்காட்டுகிறேன். காளிதாஸனுடைய சாகுந்தளத்தில் 'பதிதேவதா' என்பதை சம்ஸ்கிருதத்தில் நல்ல பாண்டித்தியமுள்ள ஆங்கில ஆசிரியன் மானியர் வில்லியம்ஸ் "அவள் கணவனுடைய இருதயத்தில் விளங்கும் மூர்த்தி" என்ற அர்த்தம் கொள்வதாகச் செய்திருக்கிறான். ஸ்திரீ புருஷர்களுக் கிடையே உள்ள சம்பந்தம் நம்மிலிருப்பதைப் போலன்றி மேல்நாட்டார்களுக்குள் வேறு முறைகள் அனுசரிக்கப்படுவதனால் இந்த மொழிபெயர்ப்புத் தான் சரி என்று அவர்களுக்கு இயற்கையாவே தோன்றும். ஆனால் சீதை, சாவித்திரி, தமயந்தி போன்றவர்களை வழிபட்டு நிற்கும் நமக்கு இயற்கையாகத் தோன்றும் அர்த்தம் "பதியை தெய்வம் போல வணங்கும் மங்கை" என்பதேயாம். இந்த

அர்த்தம் தான் கவியின் மனதிலும் இருந்திருக்க வேண்டுமென்று நாம் உறுதியாகச் சொல்லலாம். இப்படி அடிப்படையான பிழைகளின் காரணம் அவரவர்கள் கோட்பாடுகளின் வேற்றுமையேயாம். டாகூர் நம்மவர்களில் ஒருவர், நம்மைப்போல எண்ணுபவர். சற்றேறக்குறைய ஒரே மூலத்திலிருந்து தான் அவருடைய மனோபாவங்களும் உதிக்கின்றன. உள்ளவித்தியாஸம் எல்லாம் பாஷையிலே மாத்திரம் தான். ஆகையால் மொழிபெயர்ப்பு கஷ்டமில்லை; அதுவும் இங்கு வெகுநேர்த்தியாகவே செய்யப்பட்டிருக்கிறது.

௫

இனி கதைகளை ஒவ்வொன்ருக எடுத்து அவைகளிலுள்ள மேன்மையை கவனித்துப் பார்போம்.

ஆசாபங்கம். — இத்தொகுதியிலுள்ள கதைகளில் இது முதல்தரமானது. கதைப்பொருளின் மேன்மை, கதாநாயகர்களின் குணுகுணங்கள், தமிழ் மொழிபெயர்ப்பில்கூட விளங்கும் சொல்நயம் ஆகிய இவைகளில் இக்கதைக்கு எதுவும் இணையில்லை. இதில் ஒரு மஹமதிய ராஜகுமாரி உலகவாழ்க்கையின் மகிமை எல்லாம் ஒருங்கே கூடியிருப்பதாகத்

தான் எண்ணிய பிராமணப் போர்வீரன் ஒருவனைக் காதலிக்கிறாள். அவன் அவளை வேண்டாம் என்று தள்ளிக் கொடுமையாக நடத்தினாலும், அவள் அவனைத் தேடித்தேடி யலைந்து முப்பது வருஷங்களுக்குப் பிறகு காண்கிறாள். ஆனால் அவள் கொண்ட உயர்ந்த நோக்கத்திற்குச் சிறிதும் ஒவ்வாத ஒரு இல்வாழ்க்கையில் அமைதியுடன் அவன் காலங்கழிப்பதைக்கண்டு மனமுடைந்து விட்டாள்.

சிறுகதைகள் தூண்டுகோலேயன்றி மன அமைதி தரும் கருவியல்லவென்றும் கதை படிப்பவர்கள் ஆசிரியனோடு ஒத்துழைக்க வேண்டுமென்றும் முன்னரே சொன்னேன். ஆசிரியன் ஆங்காங்கு குறிப்பிடும் நுட்பங்களையும் சூசனைகளையும் விரிவாகச்செய்து அவைகளை நன்கறிய அக்கதைகளைப் படிப்பவர்களுக்கு சற்று திறமையும் நிட்பமும் வேண்டும். இதற்கு இரண்டு உதாரணங்களை இக்கதையிலே ஆசிரியரே காட்டியிருக்கிறார். ராஜகுமாரி கதை சொல்லிக்கொண்டிருக்கும்போதே பாபுஜியின் மனக்கண்ணில்: "வெள்ளைப் பளிங்கினால் செய்த பழைய மொகலாய ராஜமாளிகைகளின் வானளாவிய ஸ்தூபிகளையும், மிகவும் நன்றாக அலங்கரித்த குதிரைகள் வாலையாட்டிக்கொண்டு

செல்லும் காட்சியையும், சிங்காரமான அம்பாரிக ளேற்றிய யானைகளையும்......தோன்றும்படி செய் தது.'' இதேமாதிரி தன் ஹிந்து தாதி சொன்ன கதைகளைக்கேட்கும்போது "தேவச்சிலைகள், பூஜை மணியோசை, சங்குகளின் நாதம், தங்க ஸ்தூபிக ளுடைய ஆலயங்கள்'' முதலியவைகள் அவள் மன தில் "ஒரு கற்பனுலோகத்தை உண்டாக்கின.''

கார்லைல் என்னும் ஆங்கில ஆசிரியன் சொல் லியதைப்போல நாம் எல்லோரும் புத்திக்குத் தெரிந்தோ தெரியாமலோ அவதார புருஷர்களை வணங்குகிறோம். அதிலும் புருஷர்களைவிட ஸ்திரீ கள் தான் அப்படி செய்வது அதிகம். அதற்கு இக்கதையே பலமான உதாரணம் ஆனுல் அவள் தலைமகன் அவள் எதிர்பார்த்த அளவு மகிமைகொண் டிருக்கவில்லை அதனுல் அவள் மனமுடைந்து ஆசா பங்கமாயிற்று.

"ஒரு க்ஷணம் யமுனையில் விழுந்து விடலாமா என்று பலமாக எண்ணினேன்.........இவை எல் லாம் என் செவியில் மரணத்தின் மவுன இசை பாடின'' வரம்பெற்ற இவ்வாசிரியர் பயங்கரமான விஷயங்களில் ஒன்றுகிய மாணத்தைப்பற்றிப் பேசும் இடங்களில் இது ஒன்று. ஆனுல் மரணத் தின் அழகை எடுத்துக்காட்டி அதில் பயப்படக்

கூடியது ஒன்றுமில்லை என்பதை நாமாகவே நன்குணரும்படி செய்து விடுகிறார். கீதாஞ்சலி, தோட்டக்காரன் முதலிய நூல்களிலுள்ள மரணத்தைப் பற்றிப் பாடியிருக்கும் பல செய்யுள்கள் அவைகளை அக்கரையோடு படித்த மாணவர்களுக்கு ஞாபகம் வரும். ஏனெனில் இந்த விஷயத்தை அவைகளில் டாகூர் வெகு அழகாகக் கையாண்டிருக்கிறார். மேலும் இதில் அவர் மேற்கத்திய நூலாசிரியர்களின் கோட்பாட்டிலிருந்து வேறுபட்டிருப்பது சந்தோஷகரமாகவே இருக்கிறது. J. H. கஸின்ஸ் தம்முடைய "இந்திய மறுபிறப்பு" என்னும் நூலில் குசிப்பித்திருப்பதைப்போல அம் மேற்கத்திய ஆசிரியர்கள் புனர்ஜன்மத்திலும் வாழ்க்கைத் தொடர்ச்சியிலும் நம்பிக்கையற்றவர்களா யிருப்பதனால் மரணத்தை பயங்கரமான ஒருவிபத்து என்று ஒருவேளைக்கருதலாம். பேராசிரியனாகிய ஷேக்ஸ்பியரும் உள்பட அவர்கள் எல்லோரும் அதைப் பற்றி எழுதும் பொழுது படிப்பவர்கள் மனதில் திகிலையும் நிராசையையுமே உண்டாக்குகிறார்கள். மரணத்தை ஒரு நண்பனாகக்கருதி அதைச் சந்திக்கும்போது இருக்கவேண்டிய சாந்தமும் சந்தோஷமும் மேனாட்டு கிரந்தங்களைப் படித்தால் சாதாரணமாக சிறிதும் உண்டாவதில்லை. மரணத்தில் அரு

வருப்பு கொள்ளாமலிருக்கும் தன்மையை டாகூர் பெற அவர் பெரும் இடறுகளை அடைந்தார். தமக்கு வயது நாற்பது ஆவதற்கு முன் தம் அருமை மனைவியையும் தம் இருபுத்திரர்களையும் இழந்து விட்டதிலிருந்து மரணத்தின் ரகஸ்யத்தை யறிய இவர் முயன்றார். இந்த ரகஸ்யம் ஆதியிலிருந்து பரிசோதிக்கப்பட்டு வந்தாலும் என்றும் புதுமைவாய்ந்ததாகவே இருக்கிறது. பூர்வகாலத்தில் நசிகேதஸ் இந்த இனிய உண்மையை எப்படி யமனிடத்திலிருந்து அறிந்ததாகக் கடோபனிஷத்தில் சொல்லியிருக்கிறதோ அப்படியே இவரும் இதை யமனிடத்திலிருந்தே அறிந்ததைப்போலக் காண்கிறது.

ராஜகுமாரி கேசவலாலுக்குத் தண்ணீர்கொண்டு வந்து கொடுக்க அதை அவன் தள்ளிவிட்டு அவளை அடித்த விஷயத்தை பாபூஜிகேட்டபோது அவன் அப்படிச் செய்தது மிருகத்தன்மையானது என்றும் தெய்வீகத்தன்மையானது என்றும் இருவிதமாக மதிக்க ராஜகுமாரி அவ்விரண்டு மில்லை என்று தக்க காரணங்களைக்கொண்டு மறுத்த செய்தியும், ராஜகுமாரி கடைசியாகச் சொல்லிய "அவனுடைய பிராமணத் தன்மை வெறுமே ஒரு வாடிக்கைத்தானென்று நான் ஸம்சயப்பட இடமில்லாமல் போயிற்றே! அதை ஸத்யம், நித்ய ஸத்யமென்று நினைத்

தேனே" என்ற செய்தியும் நம் வாழ்க்கைக்கு அடிப்படையான கேள்விகளைப்பற்றி கவனிக்கும்படி தூண்டுகின்றன. அதுவும் பாரத தேசத்திலுள்ள பழக்க வழக்கங்களை ஒட்டியே இக்கேள்விகள் பிறக்கின்றன. இவைகளை ஆராய்வதற்கென்றே உண்டான ஸாமுதாயிக சாஸ்திர நூல்களும் தத்துவசாஸ்திர நூல்களும்கூட இவ்வளவு தெளிவுறச் செய்வதில்லை.

நஷ்ட பூஷணம்.—"பசியாலும் வியாதியாலும் வற்றி"ன முகத்தையுடைய அந்தப் பள்ளிக்கூட வாத்தியார் ஒரு விநோத புருஷன். சொற்ப சம்பளமே பெற்று வாத்தியார்த் தொழிலைச்செய்து வரும் பலர்போலே அவனும் வயிற்றுக்கில்லாமல் "ஸாயங்கால போஜனம் செய்யவேண்டிய வேளையில் காற்றுக் குடித்துக்கொண்டு உலாவினான்." இல்வாழ்க்கையில் ஸ்திரீகளுக்கென்று ஒரு இடம் அவன் தானாகவே குறித்து வைத்திருந்தான். இந்த விஷயத்தில் டாகூர் அபிப்பிராயம் அடியோடு வேறு என்பது அவர் ஸ்திரீகளைப்பற்றி செய்த உபன்னியாஸத்தில் * விளங்கும். வாத்தியார் நல்ல கற்பனு சக்தியுடையவன்: பாழடைந்த ஒருவீட்டைப்பற்றி

* Lecture on 'Woman' in Personality.

ஊர் வதந்தியைக்கொண்டு உடல் நடுங்கும் கதை யொன்று புனைந்துவிட்டான். இப்பொய்க்கதையை அவ்வீட்டுச் சொந்தக்காரனிடத்திலேயே சொல்லி யது வெகு ரஸமான பாகம். கதை கேட்டவன் வீட்டுச் சொந்தக்காரன் என்று வாத்தியாருக்குத் தெரிய வந்தபோதுகூட அவன் லஜ்ஜையடையவில்லை. 'கற்பிக்கும் தொழிலில் எனக்கு சகோதரப்பான்மை கொண்ட இவ்வெளிய வாத்தியாரின் வாயிலிருந்து பல பண்டிதப் பேச்சுகளும், பொருள்களின் பரிணும சுபாவத்தைப்பற்றி தான்கொண்ட கொள்கை, மற்றும் பல கல்வி தேர்ச்சி ஆகிய இவைகளைக்குறிப்பிடும் சொற்களும் பொழிவதினுல் அவன் தன்மை வெகு நன்ருக விளங்குகிறது.

இறந்துபோன மனைவியின் எலும்பு உருவம் கணவன்முன் வந்து நின்று அவனை அழைப்பதாக அவன் பிராந்தி கொண்டிருக்கும் காட்சியை இக் கதை படிப்போர் எவரும் மறக்க முடியாது. "(பூஷண்) கண்ணைத்திறந்தான். பிறைச் சந்திரனுடைய லேசான ஒளியில் தன் நாற்காலிக்கெதிரே, மனுஷ்யரூபம் போல் வெற்றெலும்புக்கூடு வந்து நிற்பது கண்டான்.........அவன் நாடிகளுக்குள்ளே ரத்தம் உறைந்து போய்விட்டது. தன் கண்களை மூடிக்கொள்ள முயன்ருன். அவனுல் இயலவில்லை,

அவை செத்தவன் கண்களைப்போலே திறந்து கிடந்தன." இவ்வர்ணனை மறக்கக்கூடியதன்று. பிராந்தி படிப்படியாக அதிகரிப்பதை இதில் எடுத்துக்காட்டியிருப்பதைப்போலே 'க்ஷுதிதபாஷாணம்' என்னும் மற்றொரு கதையில்தான் இருக்கிறது. மனோலோக வர்ணனையில் இவ்வாசிரியர் இணையற்றவர். குழந்தைகளின் மனம், வயதானவர்களின் மனம், நோயற்ற மனம், நோயுள்ள மனம் ஆகிய இவைகளில் எதுவானாலும் சரி இவர் வர்ணித்திருப்பதற்கு சமானமானது எதுவுமில்லை. குழந்தை மனதைப் பற்றி பேசுவதில் இவருடைய 'வளர்பிறைச் சந்திரன்' என்னும் நூலுக்கு இந்திய இலக்கியங்களில் இணையே யில்லை.

பூஷணனின் குமாஸ்தா மதுவின் நடத்தையைக்கண்டு வெகு கோபமடைந்து, தன் யஜமானனுக்கு "நீண்ட லிகிதம் ஒன்று உச்சரிப்புப் பிழைகள் மயமாக எழுதி விடுத்தான்" என்பதிலும் இதுபோல் வேறநேக மிடங்களிலுமுள்ள ஹாஸ்ய ரஸத்தை நண்பர்கள் கவனிக்க வேண்டும்.

காபூல்காரன்: — "பிரகிருதியிலேயே யுள்ள சில பொது லக்ஷணங்களால் உலகம் முழுவதும் உறவினரே" என்னும் உண்மைக்குக் 'காபூல்காரன்

என்ற கதை ஒன்றே நல்ல சான்றாகும். பெரிய தடியனான அந்தத் தெருவியாபாரி தானிருந்த ஆப் கானஸ்தான மலை சார்பைவிட்டு கட்டிடங்கள் நிறைந்த கல்கத்தாவில் தன் அற்ப உணவைச் சம்பா தித்துக்கொண்டு தான் ஊரிலே விட்டுவிட்டுவந்த தன் சிறு பெண்குழந்தையை நினைத்துக்கொண்டே இருக்கிறான். அதை மறந்து விடாதிருப்பதற்காக அழுக்குப்படிந்த ஒரு காகிதத்துண்டில் அக்குழந்தை யின் கைச்சுவடு மையினால் தீற்றப்பெற்றதை தன் இருதயத்துக்கு அருகில் வைத்துக்கொண்டு மீனு வுக்கு வாதாங் கொட்டைகளையும் பழங்களையும் கொடுத்து வந்தான். மீனுவின் தந்தை காபூல்கார னுக்கு ஸர்வ விதத்திலும் அன்னியனாக இருந்தும் இருவருக்கு மிடையில் மனுஷ்ய சுபாவம் விரிந்த அடிப்படையாக இருப்பதை எடுத்துக் காட்டியது மனுஷ்யர்கள் எல்லாரும் ஒன்று என்பதை தெளி வாக்குகிறது. இந்த தத்துவத்தைப்பற்றிச் செய்யும் சுஷ்க உபன்னியாஸங்களைவிட இக்கதை எவ்வள வோ சுலபமாக அதை விளக்கிக்காட்டுகிறது.

இப்படி மனுஷ்ய சுபாவம் ஒன்றாக இருப்பத னால் தான் காலதேச வேற்றுமைகளி லுண்டான அன்னிய இலக்கியங்களின் சுவையைக்கூட நாம் அனுபவிக்க முடிகிறது. 'குழந்தையும் தெய்வமும்

கொண்டாடுமிடத்தில்' என்றொரு தமிழ்பழமொழி யுண்டு. ரஹமூது வயதில் வித்தியாஸப்பட்டு, ஜாதியில் வேறாக இருந்தாலும் குழந்தையான மீனுவின் மனதைக்கவர அவனுக்கு சாத்தியமாயிற்று.

கல்யாணகாலத்தில் துக்கசமாசாரத்தை ஆசிரியர்கள் அநேகமாய் எடுப்பதில்லை. ஆனால் டாகூர் உண்மையைத் தழுவி பாரம்பரையாய் கொண்டாடப் பட்டுவரும் அந்த நூல் முறைமையைப் புறக் கணித்துவிட்டார். மீனுவின் கலியாண சமாசாரத் தைப்பற்றி மனம் உருகும்படி சொல்லும்போது வடமொழியில் சாகுந்தளத்தில் கண்வர் சொல்லிய, "பீட்யந்தே கிருஹிண: கதம் நுதநயா விஸ்லேஷ துக்கைர் நவை:" என்னும் பாதம் அதைப்படித்தவர் களுக்கு ஞாபகம் வராமலிராது.

குழந்தைகளின் மனோபாவங்கள் டாகூருக்கு வெகு தெளிவாகத் தெரிந்திருக்கிறது என்பது மீனு தன் தந்தையை: "அப்பா, உனக்கு அம்மா என்ன வேணும்" என்று கேட்ட சாமான்னிய கேள்வி போன்ற பாகங்களிலிருந்து நன்கு விளங்கு கிறது.

மானபங்கம்:—டாகூரின் உத்தம கதைகளில் இது ஒன்று என்று நாம் உறுதியாகச் சொல்லலாம்.

தன் கதைகளில் எவ்வித நீதியையும் எதிர்பார்க்க வேண்டாம் என்று அவரே சொல்லியிருந்தாலும் இக்கதையில் அருமையான பலவிஷயங்கள் காணக் கிடக்கின்றன. புருஷர்களே கூடிச்செய்த சட்ட திட்டங்களில் புருஷன் எதை மீறி நடந்தாலும் தண்டிக்கப்படாமல் போய்விடுவதும், ஆனால் ஸ்திரீ ஒருத்தி சிறிது தவறி நடப்பதைக்கூட சகிக்காமல் இருப்பதும் எல்லாருக்கும் தெரிந்தவிஷயம். தூர்த்தர்களான ஸ்திரீலோலர்கள் நோய்பட்ட தம் சிற்றின்ப அவாவை திருப்திசெய்துகொள்ள முயலும் போது தெய்வ நிபந்தனைக்காவது மனித நிபந்தனைக்காவது கட்டுபடுவதில்லை யானாலும் அவர்கள் தம் மனைவிமார்களை மாத்திரம் ஸாவித்திரி போலவும் அருந்ததிபோலவும் கற்புள்ளவர்களாயிருக்க வேண்டுமென்று எதிர்பார்ப்பது விந்தையே! இருந்தாலும் அது உண்மையே என்பதில் சந்தேகமில்லை! அப்படிக்கு ஸ்திரீகள் இல்லாவிட்டால் புருஷர்கள் வெறிபிடித்தவர்களைப்போலக்கோபித்துக் கொள்வார்கள். இப்படிப்பட்ட ஒருதலையான இல்லற ஏற்பாட்டிற்கு நம்ஸ்திரீகள் இணங்கியிருப்பதுஎதையும்விடவிந்தையானதே! ஸ்ரீராமபிரான் காட்டிய உன்னதபதவியிலிருந்து இல்வாழ்க்கை விஷயமுள்பட எல்லா வற்றிலும் தாழ்ந்த நிலைமைக்கு புருஷர்களாகிய நாம்

வந்து விட்டாலும், ஸ்திரீகள்மாத்திரம் ஸீதா தம யந்தி முதலியவர்களின் ஒழுக்கத்தையே நாடி நிற் கிறார்கள். இக்கதையில் ஒரு சீமாட்டி இவ்வொரு தலை ஏற்பாட்டிற்கு இணங்காமல், தனக்கு என்ன நேர்ந்தாலும் சரி என்று துணிந்துவிட்டு தன் கண வன் நெறிபிறழ்ந்ததற்காக அவன் எதிர்பாராத வண் ணம் அவனை தண்டிக்கிறாள். நம் செயல்கள் நம் குழந்தைகளைப்போலவே தான், என்றாள் ஜ்யார்ஜ் எலியட். அவைகள் நம்மிடத்திலிருந்து உண்டா கின்றன; ஆனால் பிறகு தனி உயிர்பெற்று வளர் கின்றன. இருந்தாலும் ஒரு வித்தியாஸம் மாத் திரம் உண்டு. நம் குழந்தைகளை நசுக்கிக் கொன்று விடலாம், நம் செயல்களை அப்படிச் செய்யவே முடி யாது. இவ்வுண்மையை நம் முன்னோர்கள் பல யுகங்களுக்குமுன் தெரிந்துகொண்டு கர்மம், மறு பிறப்பு என்னும் கோட்பாடுகளின் முறைமைகளை விளக்கியிருந்தாலும், கோபிநாதன் புத்திக்கு அது திடீரென்று தான் புலப்பட்டது. ஆனால் அந்த சமயத்தில் காலம் மிஞ்சிவிட்டிருந்தது.

இக்கதையைப் படிப்பவர்களும் நூல்களை எழுத விரும்புகிறவர்களும் கவனிக்கவேண்டிய விஷயம் ஒன்றுண்டு. ஸம்ஸ்கிருதத்திலும் நம் நாட்டுத் தாய் பாஷைகளிலும் நீராக்குறை ஒன்று கூறிவருகிறார்

கள். இலக்கிய வர்ணனைகளில் மிதம் என்பதாவது மறைவு என்பதாவது சிறிதும் கிடையாது. அதுவும் தேக அமைப்பைப்பற்றிப்பேச ஆரம்பித்து விட்டால் பொதுப்படையான வர்ணனைகளோடும், சூசனைகளோடும் நாம் திருப்தியடைவதில்லை; ஸ்தூலமாகவும் நேரில் அறியக்கூடியதாகவும் இருக்கவேண்டும் என்கிறோம். ஒருஸ்திரீயைவர்ணிக்கும்போது அவள் முகம் சந்திரன்போலவும், தாமரைப்பூப்போலவும், அவள் நெற்றி பிறைச்சந்திரன்போலவும் அவள் மூக்கு குமிழம்பூப்போலவும் இருக்கின்றன என்று அர்த்தமின்றி கிளிப்பிள்ளையைப்போல சொன்னதையே சொல்வது வெகு சாதாரணம். தேகத்தில் ஒவ்வொரு பாகத்திற்கும் ஒவ்வொரு அங்கத்திற்கும் இணையாகச் சொல்வதற்கு ஏற்கனவே பொருள்கள் குறிப்பிடப்பட் டிருக்கின்றன. ஒரு ஸ்திரீயின் இதழ், வாய், கண், மூக்கு, பல், காது முதலியவைகளைக் குறிப்பிடவேண்டுமானல்:

முருக்கு மாம்பலு மென்காவியும் குமிழும் முல்லையும் வள்ளையும்,

என்று சொல்லிவிட்டால் போதும். ஸம்ஸ்கிருதத்தில் காடு ஒன்றை வர்ணிக்க, தாலம், தமாலம், ஹிந்தாலம் முதலிய விருக்ஷங்களை ஆசிரியன்

கண்டிருந்தாலும் காணுதிருந்தாலும் அடுக்கடுக் காய்ச் சொல்லிவிடுவான். ஒருஸ்திரீயை வர்ணிக் கும்போது எவ்வளவோ செய்யுள்கள் சொற்ப சூசனைகளைக் காட்டி விட்டிராமல் வெளிப்படையாக விரித்துரைப்பதனுல் அவைகள் உத்தமமான யாப் பின் அழகுவாய்ந்தவைகளாயிருந்தாலும் சுவையற்று மனதில் ஜிகுப்ஸை உண்டாக்குகின்றன. சிற்றின் பங்களையே மனிதர் நாடிநின்ற காலங்களில் காளி தாஸன் குமாரசம்பவத்தில்,

> அந்யோந்யமுத்பீடயந்த்யுத்பலாக்ஷ்யா:
> ஸ்தனத்வயம் சாருததா ப்ரவ்ருத்தம்,
> மத்யே யதா ஸ்யாம முகஸ்ய தஸ்ய
> ம்ருணுள ஸூத்ராந்தர மப்யலப்தம்.

என்று பார்வதியின் ஸ்தனங்களை வர்ணிக்கும் இச்செய்யுள்கள் இன்பமாக இருக்கலாம், மற்றபடி வாக்குசுத்தம் விரும்பும் இந்நாளில் அவைகளின் மேல் நமக்கு எவ்வளவுதான் அபிமான மிருந்தா லும் படிக்கும்போது மனதில் ஜிகுப்ஸைதான் உண் டாகிறது.

டாகூர் மானபங்கத்தின் முதல் பகுதியில் செய்துள்ள இணையற்ற ஸ்திரீ அழகின் வர்ண னையை இக்கதைகளை வாசிப்போர் கவனித்துப்

பார்த்து அனுபவிக்க வேண்டுமென்று விரும்புகிறேன். அதில் தான் எவ்வளவு நிறைவு, எவ்வளவு சூசனைகள் இருக்கின்றன! அதோடு எவ்வளவு வாக்கு சுத்தமும், வரம்புகடவாமையும் காண்கின்றன. நுண்ணறிவோடு படிக்கும் ஒருவனுக்கு இந்த வர்ணனையில் தாமரை மொட்டு, சந்திரன், வாழை மரம், யானைத்துதிக்கை முதலியவைகள் இல்லாததனால் கிரிபாலாவின் அப்பிராகிருதமான அழகு அவன் மனதைக் கவர்வதில் சற்றும் சக்தி குறைந்தில்லை. இப்பெரிய ஆசிரியர் வழிகாட்டிருக்கின்றார்: மற்றவர்கள் அவ்வளவுபெருமை வாய்ந்தவர்களாக இல்லாவிட்டாலும் அவரைப் பின்பற்றக்கூடும் என்றே நம்புகிறேன்.

படிப்போர் கவனத்தை தற்காலத்தில் எதிரில் நடந்தேறும் விஷயங்களிலிருந்து இழுத்து சாசுவதமானவைகளில் செல்லச் செய்வதில் அவருக்குள்ள சக்தி குறிப்பிடத்தக்கது. "வீட்டில் யாரும் துயில் கலையவில்லை. நிலா அமைதியாக வீசிற்று. இரவின் மோனம் குலையவில்லை. இத்தனை சாந்திக்கிடையே கூட மனிதர் திரும்ப சொஸ்தமாக இடமில்லாதபடி நெஞ்சுடைந்து போதல் ஸாத்ய மாகிறது." ஜ்யார்ஜ் எலியட்டின் ஜீவசரித்திரம் எழுதியவனும் அவள் மதிப்பாசிரியனுமான லெஸ்லி ஸ்டீ

பன் அவளுக்கிருந்த இந்த சக்தியை குறிப்பாக எடுத்துக்காட்டி யிருக்கிறான்.

நள்ளிரவிலே: — ஸ்திரீகளைப்பற்றி டாகூர் செய்த உபன்னியாஸத்திலே "புருஷனைவிட ஸ்திரீகளுக்குக் கற்பு, நாணம், பற்று, நிவேதனம் முதலிய சாது குணங்கள் சிலமடங்கு அதிகம்" என்று சொல்லியிருக்கிறார். ஸ்திரீகளிடத்தில் புருஷன் செலுத்தும் காதலில் மிருகத்தன்மை அதிகமாக இருத்தலால் கால வித்தியாஸம் ஏற்படும்போது அவன் காதல் உரமற்றதாகி விடுகிறது. மனைவி நோயினாலோ வேறெந்த காரணத்தாலோ புருஷனுடைய இன்ப நுகர்ச்சிக்கு பயன்படாவிட்டால், இதுவரை அவளிடத்தில் கொண்ட காதலானது புனிதமான அன்பு என்று குழந்தைத் தனமாய்த் தான் எண்ணிக்கொண்டிருந்த தெல்லாம் போய், அதிலடங்கியிருந்த மிருகத்தன்மை வெளியாகி விடுகிறது. ஸ்திரீயோ வென்றால் அப்படிக்கல்ல, தக்ஷிணபாபுவின் மனைவியைப்போல புருஷனுடைய சுகத்திற்காக தன் உயிரையுங்கூட விட்டுவிடுகிறாள். "மனசாக்ஷி நம்மை எல்லாம் பயங்கொள்ளிகளாக்கி விடுகிறது" என்பது ஷேக்ஸ்பியர் உரை. தக்ஷிணபாபுவின் குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கிறது. எந்த சிறு ஒலியும் அவனுக்கு வாரிஎடுத்துப் போடு

கிறது. காலஞ்சென்ற அவன் மனைவியின் சிரிப்பு அவன் காதில் கேட்பதாக எண்ணுகிறான். அவளிடத்தில் என்றுமழியா காதல்கொண்டிருப்பதாக அவன் சொல்லி வரும்போதே அவனுக்கும் விளங்காமல் அவனுள் அடங்கியிருந்த கபடத்தன்மையை அவள் அறிந்திருந்ததாக இச்சிரிப்புத்தான் அவனுக்குக் குறிப்பிட்டது. "அவள் யார்? ஒகே? ஒகே? ஒகே?" என்று அவள் தன்னைக் கேட்கும் சத்தம் தன்காதில் விழுவதாக அவன் பிரமிக்கிறான்.

இங்கு கதையின் அமைப்பையும் கவனிக்க வேண்டும். மனசாக்ஷியினால் பீடிக்கப்படுபவனே இக்கதையை நேரில் சொல்லுகிறான். இதைச் செய்ய அவனுக்கு நள்ளிரவின் மறைவு வேண்டியிருக்கிறது. பட்டம்பகலில் தன்கோழைத் தனத்தைக் காட்ட வெட்கத்தால் அஞ்சுகிறான்.

கா

பத்திராதிபர்:—ஆங்கில கவிஞனை வொர்ட்ஸ்வொர்த் "மற்ற பாக்கியங்களை எல்லாம்விட குழந்தைதான்......வருங்காலத்தில் நம்பிக்கையையும் முன்யோசனையுள்ள எண்ணங்களையும் (நம்முன்) உதிக்கச் செய்கிறது" என்றான். ஆங்கில கதாசிரியையாகிய ஜ்யார்ஜ் எலியட் தன்னுடைய ஸைலாஸ் மார்னர் என்னும் கதைக்கு விருது வாக்கியமாக

மேற்சொல்லிய வாக்கியத்தையே கொண்டிருக்கிறாள். பத்திராதிபர் கதையில் தாயற்றகுழந்தையை கவனியாமல்ஸாரமற்றபிரதாபத்தை ஒருவன் நாடிச் செல்கிறான். குழந்தை புத்திசாலி, தன் சுய காரியத்தையும் தன் தந்தையின் சுகத்துக்கு வேண்டியவைகளையும் தானாகவே செய்து கொள்ளுகிறாள். அவன் தான் ஒரு உயர்ந்த ஹாஸ்ய நாடகம் எழுதுவதை யறியாமல் பிச்சைகேட்க வீட்டுக்கு வருபவர்களைக் கண்டு, சீறுவான். பிறகு பத்திரிகைக்கு வியாஸங்கள் எழுதுவதிலேயே முழுகிக்கிடந்து தன் குழந்தையை கவனிக்க அவனுக்கு நேரமே இல்லை. கையிக்குக் கிட்டாத வியர்த்தமான பிரதாபத்தைத் தேடியலையும் இவனைத் தன் குழந்தை தான் மீட்கிறது. நோயால் வருந்தும் அக்குழந்தைக்கு தந்தையின் அன்பும் ஆதரவும் வேண்டியிருக்கிறது. இதைப் பத்திராதிபர் அறிந்தபோது தான் அவனுக்குத் தன் நிலைமை விளங்குகிறது. இலக்கியத்தில் புகழ்பெற ஆசையில்லா விட்டாலும் மோக்ஷத்திற்காகவோ, யோக சக்திக் காகவோ மற்றெதற்காகவோ 'உலகைத் துறக்க' எண்ணும் நம்முள் பலருக்கு இக்கதையில் நல்ல புத்திமதி கிடைக்கும்.

ஸுபா:—இது ஒருவசன காவியம். இக்கதையில் சம்பவங்களே கிடையாது. ஒரு ஊமைப்

பெண்ணை ஒருவன் அறியாமல் மணந்து கொள்கிறான். உண்மையை அறிந்ததும் வேறொருத்தியை மறுபடி விவாகம் செய்து கொள்ளுகிறான். கதை என்னமோ இவ்வளவுதான்; கதாநாயகியாகிய ஸுபாஷிணியின் போரில் நூலாசிரியர் தன் கவிதா சக்தி முழுவதையும் தாராளமாக உபயோகப்படுத்தியிருப்பதுபோலக் காண்கிறது. பிரகிருதி தேவி அவளைத் தன் செல்வக்குழந்தையாக வளர்க்கிறாள். சில அவயவங்கள் ஊனமாயிருப்பதையே காரணமாகக்கொண்டு அந்த தேவி தன் வனப்பை அறிந்து கொள்வதற்கும், தன்னோடு ஏகிபாவத்தை அநுபவிப்பதற்கும் வேண்டிய நட்ப உணர்ச்சியை ஏராளமாகக் கொடுத்து அவள் ஊனத்தை அதிகமாகவே பரிகரித்திருக்கிறாள். ஆங்கில இலக்கியப் பழக்கமுள்ளவர்களுக்கு மனிதனுக்கும் பிரகிருதிக்கும் இடையிலுள்ள சம்பந்தத்தைப்பற்றி வொர்ட்ஸ்வொர்த் என்று மழியாத தன் நூல்களில் சொல்லியது ஞாபகத்திற்கு வரும்: "வெய்யிலிலும், மழையிலும் அவள் மூன்று வருஷம் வளர்ந்தாள். இதைவிட அழகான புஷ்பம் பூமியில் முளைத்ததே இல்லை; இக்குழந்தையை நானே எடுத்துக்கொள்வேன்; அவள் என்னுடையவளே தான், அவளை என் செல்வச்சீமாட்டியாக்குவேன், என்றாள் மகாபிரகிருதி."

மகா பிரகிருதியின் இப்படிப்பட்ட செல்வச்சீமாட்டி தான் ஸுபாவும்.

ஸுபா தன் நண்பர்களாகிய பசுக்களிடத்தில் தான் போகவிடை பெறுவது வெகு உருக்கமாக இருக்கிறது. சகுந்தலை தன் மான்குட்டி, கொடிகள், விருக்ஷங்கள், மற்றுமுள்ள நண்பர்கள் ஆகிய இவர்களிடத்தில் விடைபெறுவதை இது ஞாபகமூட்டாது விடுவதில்லை.

“கம்பீரமான பௌர்ணிமை இரவொன்றில் அவள் தன் பள்ளியறைக் கதவை மெல்லத் திறந்து பயத்துடன் வெளியே நோக்கினாள். அந்தப் பௌர்ணிமையில் உறங்கிக்கிடந்த உலகத்தினிடையே தான் தனியாக விழித்திருப்பவளாய், ப்ரகிருதிதேவியும் ஸுபாவைப்போலேயிருந்தாள்... ஆசை ததும்பிய அந்த ஊமையான ப்ரகிருதியின் கரையோரத்தில் ஆசை ததும்பிய அந்த ஊமைப் பெண் நின்றாள்.” இதுதான் உண்மையான கவிதாரஸம்.

நாடகக்காலம்:—டாகூரவ்வளவு சொல்வன்மையில்லாதவர்கள் பொருட்செறிவு போதாதென்று கைவிடப்பட்டவைகளை வைத்துக்கொண்டே அழகான ஒருகதை புனையும் சக்தி அவருக்கு உண்டு என்று முன்னொரு இடத்தில் குறிப்பிட்டிருக்

கிறேன். எளிய பாடிக்கின் கதை அதை விளக்கிக் காட்டுகிறது. இக்கதை ஒரு சிக்குமில்லாததானாலும் மனதை உருக்கும் சோக ரஸம் பொருந்தியது. மற்ற கதைகளைப்போலல்லாமல் இதில் ஆசிரியரே கதையில் பொதிந்து கிடக்கும் நீதியை எடுத்துக் காட்டுகிறார். "பதின்மூன்று அல்லது பதினான்கு வயதுள்ள சிறுவனைப்போலே கஷ்டமான பாரம் இந்த பூமியில் வேறுகிடையாது ....

......ஆதலால் அவனுடைய தோற்றத்திலும் சாயலிலும், உடையவனை இழந்து தெருக்களில் அலையும் ஒரு நாயின் களை ஏற்படுகிறது." இந்த நீதியைத் தான் கதை விளக்குகிறது. இந்த விஷயத்தில் இது 'ஸமாப்தி' என்னும் கதைக்கு எதிர்த்தட்டாக இருக்கிறது. சிறுவர்களும் சிறுமிகளும் தம் இளமைப்பருவம் மாறி முதிர்ச்சிபெறும் தருணத்தில் மூத்தோர்களால் பிரியத்தோடு நடத்தப்படும் பாக்கியத்தைப்பெற்று அப்பருவத்தைக்கடந்துவிட்டால், பிறகு சுகமாகவாழ்கிறார்கள். இல்லாவிட்டால்பெருந் துயரம் அனுபவிப்பதோடு ஆயுளும் சீக்கிரத்திலேயே ஒருவேளை முடிவுபெறும். இந்த விசாலமான உலகில் இவ்விருவித சம்பவங்களையும் காணலாம். டாகூர் பிரகிருதியின் பிரதிபிம்பத்தை எடுத்துக்காட்டுபவர்போல பக்ஷபாதமின்றி இரண்டையும்

விளக்குகிறார். மருண்மயின் புருஷன் புத்திசாலித் தனமாய் அவளைத் தன்னிடம் வைத்துக்கொண்டான் அதனால் அவளும் நல்வழிபற்றி சுகமாகவாழ்ந்தாள். அப்படிச்செய்யாமல் பாடிக்கின் சுபாவத்தை அவன் தாயே அறியவில்லை, அவன்மாமியும் அவனை கொடுமையாகவே நடத்தினாள். அதனால் அவனும் அல்பாயுசுவுடையவனானன்.

பையன் வெகு கஷ்டப்பட்டு தன் வீட்டுக்குப் போக யத்தனிக்கையில் போலீஸ்காரன் பிடித்துத் திருப்பி அழைத்து வந்ததையும், அவன் தன்வீட்டை நினைத்துக்கொண்டே உயிர் விட்டதையும் கண்டு அனுதாபத்தோடு கண்ணீர் விடுவது பெரும்பாக்கியமேயாம். பையனுடைய தாய் அவனருகில் வந்தும் அவன் அவளை அறியாமல் போனது சோகரஸத்தை அதிகப்படுத்துகிறது. உயிர் வாழ்க்கை முற்றுமே வேடிக்கையான ஒரு திருவிழா அல்ல. அதில் சுகமும் துக்கமும் கலந்தே இருக்கும் அவைகள் இரண்டையும் எடுத்துக்காட்டுவது இலக்கியத்தின் நோக்கம். அரிஸ்தோதல் சொல்லியது, சோகரஸமுள்ள நாடகம் பயத்தையும் அனுதாபத்தையும் கொண்டு நெஞ்சைப் புனிதப்படுத்துகிறது என்று. சோகமான முடிவுகொண்ட நாடகங்கள் கூடாது என்னும் நம்முடைய இலக்கிய வழக்கத்தைவிட்டு மேற்கூறிய

உண்மையை இன்னும் நாம் ஒப்புக்கொண்டில்லை. நம் நூலாசிரியர்களுக்கு உலகம் புலப்படாமலில்லை. நூல்களில் துக்க சம்பவங்களை விஸ்தாரமாக வர்ணித்திருக்கிறார்கள். ஆனால் முடிவில் தெய்வீக உதவிபெற்று எல்லாக்கெடுதியும் நேர்மையாக்கப் பட்டு எல்லாரும் சுகமாகவே போய்விடுகிறார்கள். இவ்வழக்கத்துக்கு மாறாக எடுத்துக்காட்ட ஒரு நூலும் கிடையாது. நல்லதங்காள் சரித்திரம் மாத்திரம் தன்னம் தனியாக இவ்வழக்கத்தைத் தழுவாதிருக்கிறது.

ஸஞ்சித பாஷாணம்: — இறந்தகாலத்தின் ஒருபகுதியை நமக்கு உயிர்ப்பித்துக் காட்டக்கூடிய சக்தி மகான்களுக்கேயுள்ளது. கடந்துபோன சம்பவங்களை மறைக்கும் ஒரு திரையைத் தூக்கி டாகூர் மஹாமதிய அரசர் வாழ்க்கையைப் பிரகாசமாக வர்ணிக்கிறார். பிரமைகொண்டு நிற்கும் மனிதனுடைய மனதை அவர் செவ்வையாகத் தெரிந்து கொண்டிருக்கிறார் என்று முன்னமே சொல்லியிருக்கிறேன். "நான் யார்? உன்னை எப்படிக் காப்பாற்றக்கூடும்? நீரில் விழுந்த எந்த அழகி, அவள்—மோகமே உருவெடுத்து வந்தது போன்றவள் யார், இந்தக் கனவின் பெருஞ் சுழற்சியினின்றும் நான் கரைசேர்க்க வேண்டியவள் எவள்?" முதலி

யன இக்கதையில் வெகு அழகான பாகங்கள். இவைகள் அபரோக்ஷமான ஒரு கட்டழகியின் உயிர்வாழ்க்கையைக் குறிப்பிடுகின்றன. சித்து விளையாடுபவர்களையும், தியஸாபிகல் சங்கத்தாரையும் கண்ணுக்குப்புலப்படாத சூக்ஷ்ம உலகத்தைப்பற்றி வேறு கருத்துகொண்டவர்களையும் இதில் மறைவாக ஏளனம்செய்ய விருப்பமோ இல்லையோ என்பது ஆசிரியருக்கே வெளிச்சம்.

ஸமாப்தி: — இக்கதையில் ஒரு சிறுபெண் பெரியவளானதும் தன் குழந்தைப்பருவத்தில் துஷ்டப்பயல்களைப்போல நடந்துகொண்டதனால் அவள் பயனற்றவளாய் விடுவாள் என்று எல்லாரும் எண்ணியதற்கு மாறாக ஒரு கண்ணியமான ஸ்திரீயானதை விளக்குகிறது. காலம் சென்ற இங்கிலந்து ராணியாகிய விக்டோரியாவைக்குறித்து ஒருகதைக் கேட்டிருக்கிறேன். அவளுக்கு மகுடாபிஷேகமான சிறிது காலத்துக்கெல்லாம் மந்திரிகள் ஏதோ முக்கியமான ராஜ்ய விஷயமாக வெகுநேரம் அவளோடு கலந்து ஆலோசனை செய்தார்கள். ஆலோசனைமுடிந்து கூட்டம் கலைந்ததும் சபையோர்கள் பார்த்துக்கொண்டிருக்கையிலேயே அவள் தன் தனி அறைக்கு ஓடினாள். வயதில் சிறுபெண்ணேயானாலும் பெரிய ராஜ்யத்திற்கு ராணியாக விளங்

கிய அவள் அவசரத்தோடு ஓடியதை மந்திரிகள் கவனித்தார்கள். அவர்களில் ஒருவன் "இப்படிப் பட்ட பெண் எதற்கு உதவுவாள்" என்றான். கான் டர்பெரி மதாசாரியனோ அல்லது புத்திமானை வேறெந்த பெரியவனோ இதற்கு பதிலாக: "இவளி டத்திலிருந்து பெரும் செயல்களை எதிர்பார்க்கலாம். இப்பொழுதோ இவள் சிறுபெண். ஆகையால் பெண் ஒருத்தி நடந்துகொள்ளவேண்டிய மாதிரி நடக்கிறாள். அதேமாதிரி அவள் ஒருஸ்திரீயாக வளர்ந்தபிறகு ஸ்திரீயைப்போலவே நடந்துகொண்டு நம்மையும் நன்றாக ஆளுவாள் என்றே எனக்கு உறுதியாகப் படுகிறது" என்று சொன்னதாகக் கேள்வி. இந்த புத்திமான் சொன்னது பூரண மாகவே நடந்தேறிற்று என்பதைச் சரித்திரமே காட்டி யிருக்கிறது. அப்படியே மருண்மயியின் குழந்தைப்பருவமும் யௌவனமும் சுபாவமாகவே நல்ல ஸ்திரீயின் நிலைமைக்கு அவளைக்கொண்டு வந்துவிட்டன. ராகாலோடு விளையாடுவது தான் தனக்குப் பிரியம் என்று சொல்லிக்கொண்டும், தன் மாமியார், இவள் தாய்வீட்டுக்குத் தொலைய மாட்டாளா என்று எண்ணும்படி நடந்துகொண்டு மிருந்த இப்பெண் தானாகவே தன் மாமியாரிடத்

திற்கு வந்து ஸாஷ்டாங்கமாக நமஸ்கரித்து விட்டு பிறகு அவள் இஷ்டப்படியே நடந்துகொண்டாள்.

நான் படித்தவைகளுக்குள் இக்கதையின் முடிவு மிகவும் அழகு பொருந்தியதாகவே இருக்கிறது. அபூர்வன் தன் சகோதரிவீட்டில் படுக்கையறைக்குள் போய் இருட்டில் கட்டிலைத் தேடிபிடித்துப் படுக்கப்போகையில் "மெல்லிய இரண்டுகைகள் பொன் வளையல்கள் குலுங்க அவனைத் தழுவின, இரண்டு இதழ்கள் கண்ணீரோடு கலந்து அவனை மூச்சுத் திணறும்படி முத்தமிட்டன."

தான் மணப்பதற்காக ஒருபெண்ணை பரிசோதிக்க அவள் தந்தை வீட்டுக்கு அபூர்வன் போன போது அவனை அங்கு வரவேற்ற மாதிரியும்; அவள் படித்த புத்தகங்களைப்பற்றி அவன் கேட்டபோது அவள் பூண்ட மவுனமும், பின்பு ஒரே மூச்சில் தன் பாடசாலைப் புத்தகங்கள் அனைத்தின் பெயரை ஒப்புவித்ததும்; அபூர்வன் தாய், தன்மனதுக்கு ஒவ்வாத ஒரு மனைவியைத் தன்மகன் தேடினதால் பி. ஏ. பட்டதாரிகளிடத்தில் அவள் மதிப்பிழந்ததும்; அபூர்வன் (அமெரிக்கா ஐக்கிய மாகாணங்களின் ஏற்றுமதி இறக்குமதிச் சரக்கு ஜாப்தாவையும், அமாஜோன், வோல்கா நதிகளின் மேலுள்ள நகரங்

களையும் ஒன்றுவிடாமல் சொல்லக்கூடியவனாக விருந்தாலும், தான் கடந்துசெல்லும் கிராமங்களின் பெயரைச் சொல்லமுடியாமல் அண்டை அயலிலுள்ளவைகள் தெரியாததனால் தப்புப்பெயர்களைச் சொல்லியதும்; இவைகளும் மற்றுமுள்ள பலவேடிக்கை விஷயங்களும் படிப்பவர்கள் கவனமாய் அனுபவிக்க வேண்டியவைகள்.

இக்கதைகளைப்பற்றி இன்னும் எவ்வளவோ எழுதலாம்; ஆனால் இங்கு இடமில்லை. குரு செய்ய வேண்டியதெல்லாம் பொருள்களின் உண்மையை மறைக்கும் திரையைத் துளைப்பதுதான்; பின்பு ஒவ்வொரு சிஷ்யனும் அத்துளைவழியாகத் தன் பார்வைக்கு எவ்வளவு எட்டுகிறதோ அவ்வளவுதான் காண்கிறான். இம்மகான் செய்வதும் அப்படியே தான். அவர் நமக்குக் கதைகளைக் கொடுத்து விட்டார்; இனி நாம் அவைகளைப் படித்து நம்மால் எவ்வளவு பயனடையக் கூடுமோ அவ்வளவு பயனையும் அடையவேண்டும்.

சுசீந்திரம். கி. லக்ஷ்மீநாராயணன்.

பத்திராதிபர்.

என் மனைவி உயிரோடிருக்கும் வரை என் குழந்தையாகிய "ப்ராபா"வை நான் அதிகம் கவனிப்பதில்லை. ப்ராபாவைக் காட்டிலும் அதன் தாய் விஷயத்திலே என் சிந்தை அதிகமாகச் சலித்துக்கொண்டிருந்தது.

அக்காலத்தில் குழந்தையை எப்போதேனும் கொஞ்சம் இலேசாகக் கொஞ்சுவேன். அதன் கொச்சை மொழிகளைக் கேட்பேன். அது சிரிப்பதையும் ஆடுவதையும் பார்ப்பேன். என் மனதுக்கு ரப்யப் படும் வரை கொஞ்சுவேன். சற்றே விரஸப்பட ஆரம்பித்தால் உடனே குழந்தையைத் தாய் வசம் கொடுத்து விடுவேன்.

கடைசியாக, என் மனைவி அகால மரண மடைந்த பின் குழந்தை தாயின் கைகளினின்றும் எனது தோள்களுக்கு வந்தது. அதை நான் ஹ்ருதயத்தில் வைத்துப் போஷிக்கலானேன்.

தாயில்லாக் குழந்தையை இரட்டிப்பு கவனத்துடன் வளர்ப்பது கடமையென்று நான் சிந்தனை செய்தது அதிகமா? பெண்டாட்டியிழந்த அப்பனை அதிக ஜாக்ரதையுடன் காப்பாற்றுதல் தன் கடமையென்று அந்தக் குழந்தை பட்ட கவலை அதிகமா? என்பதைக் கூறுதல் எளிதன்று. ஆனால் ஆறுவயதானது முதல் ப்ரபா வீட்டுத்தலைமையை வஹிக்கத் தொடங்கி விட்டன ளென்பது மாத்திரம் திண்ணம். இந்தச் சிறு குழந்தை தனது பிதாவுக்குத் தன்னைத் தனிக் காப்பாளியாக நியமித்துக்கொண்டன ளென்பது தெளிவுறப் புலப்பட்டது.

நான் மனதில் நகைத்துக்கொண்டு, அவள் பொறுப்பில் என்னை முழுதுமே ஒப்படைத்து

விட்டேன். நான் எவ்வளவு தொழிலின்றி, உதவியின்றிப் போனேனே, அவ்வளவு அவளுக்கு ஸந்தோஷம் அதிகமாயிற்று. எப்போதேனும் என் துணியை, அல்லது குடையை எடுத்துவர நான்போனால், அவள் முகத்தில் கோபம்தோன்றலாயிற்று. அவளுடைய அதிகாரத்தை நான் அபஹரிப்பதாக நினைக்கலானாள்.

அவள் இதுவரை வைத்திருந்த பொம்மைகளில் அப்பனைப்போல் நல்ல பொம்மை பார்த்ததில்லை. எனவே இதை ஊட்டி, உடுத்துப் பாயில் படுக்க வைப்பதில் அவளுக்கு அளவிறந்த திருப்தி! அவளுக்குக் கணக்கும் முதல் வாசகப் புஸ்தகமும் கற்பிக்கும் ஸமயங்களிலே தான் பிதாவின் அதிகாரத்தைச் செலுத்த எனக்குச் சற்றே இடம் வாய்த்தது.

இவளுக்குத்தகுந்த வரன்கண்டு பிடித்து சரியான சீதனம்கொடுக்கப் பணத்துக்கென்ன செய்வோமென்ற யோசனை என்னை இடைக்கிடையே வந்து தொல்லைப் படுத்தும். அவ

ளுக்கோ நான் சரியானபடி கல்வி கற்பித்திருந்தேன். அப்படியிருக்க அவளை ஒரு மூடனுக்கு வாழ்க்கைப் படுத்த நேரிட்டால் என்ன செய்வது ?

பணம் ஸம்பாதிக்க வேண்டுமென்று தீர்மானம் செய்துகொண்டேன். எனக்கு வயது அதிகமாய் விட்டபடியால், ஸர்க்கார் உத்யோகத்தை எதிர்பார்க்க இடமில்லை. வேறு வியாபார ஸ்தலங்களில் உத்யோகம் பெறுவதற்கும் தக்க சிபாரிசு கிடையாது. நெடுந்தூரம் யோசனை செய்து பார்த்துக் கடைசியாகப் புஸ்தகங்கள் எழுதலாமென்ற முடிவுக்கு வந்தேன்.

ஒரு மூங்கில் குழாயில் தொளைகள் செய்தால், பிறகு அதில் எண்ணெய் வைக்க முடியாது; தண்ணீர் வைக்க முடியாது. அதற்கு தாரண சக்தி தீர்ந்துபோய் விட்டது. அந்த நிலையில் அதில் ஊதினால் செலவின்றி ஸங்கீத ஸ்வரங்கள் உண்டாக்கலாம்.

பய னுள்ள பதார்த்த மில்லாத மனிதனை அலங்கார பதார்த்த மாக்கலாம். மற்ற துறைகளில் பொருள் செய்யத் தெரியாதவன் இலக்கியம் செய்யலாம். இந்த யோசனையால் மனந்தேறி, நான் ஒரு ஹாஸ்ய நாடகம் எழுதினேன். அது நன்றாக இருக்கிறதென்று ஜனங்கள் சொன்னார்கள். அதை ஒரு நாடகசாலையில் ஆடவும் செய்தனர்.

கொஞ்சம் கீர்த்தியின் ருசி கண்டவுடனே, அதை மேன்மேலும் தொடராதுவிட எனக்கு மனம் வரவில்லை. தீர்மானத்தின் வேகத்தால், மரணவேதனைப் பட்டுக்கொண்டு ஹாஸ்ய நாடகங்கள் நாளுக்கு நாள் மேன்மேலும் எழுதிக் கொட்ட லானேன்.

ப்ரபா புன்னகை செய்து கொண்டு, என்னிடம் மெதுவாக: — "அப்பா, உனக்குக் குளிக்க நேரமாய் விட்டது" என்று சொல்ல வருவாள்.

நான் அவள்மேல் சீறிவிழுந்து:—"ஓடிப் போ, ஓடிப் போ! நான் எத்தனை முயற்சியி

விருக்கிறேன், தெரிய வில்லையா? என்னை ஹிம்ஸை பண்ணாதே" என்பேன்.

அந்த அநாதைக்குழந்தை சத்தங்காட்டாமல் போய்விடும். திடீரென்று தன் ஒளி அவியப்பெற்ற விளக்கின் முகம்போலே அவள் முகம் சோபையிழந்துபோம். வீட்டு வேலைக்காரிகளைக் கண்டால் துரத்துவேன், வேலைக்காரரை அடிப்பேன். என்வீட்டு வாயிலில் பிச்சைக்காரர்வந்து பாடினால், நான் தடியை எடுத்துக்கொண்டுபோய் ஓட்டுவேன். என்னுடைய அறை வீதிப்பக்கத்தில் இருந்தது. வழிப்போக்கர்வந்து அங்கே நின்றுகொண்டு பாதை விசாரிப்பார்கள். நான் அவர்களைச் சுடுகாட்டுக்குப்போ, அதுதான் உனக்குப்பாதை என்று கடிந்து பேசுவேன்.

நான் அல்லோல கல்லோலமாக ஹாஸ்ய நாடகம் எழுதுகிறே னென்பதை யாருமே பொருட்டாக்கவில்லை!

ஆனால் இதிலெல்லாம் உற்சாகமும், கீர்த்தியும் கிடைத்த அளவுக்குப் பணம் கிடைக்க

வில்லை. அதை நான் அதிக கஷ்டமாக பாவிக்க வில்லை. இருந்தாலும், மாப்பிள்ளைமா ரெல்லாரும் ஹாஸ்யநாடகங்கள் எழுதாத பிதாக்களையுடைய மற்றப்பெண்களைநோக்கிச்சென்று கொண்டிருந்தனர்.

அந்த ஸமயத்தில் எனக்கோர் அதிர்ஷ்டம் வாய்த்தது. ஜாஹிர்க்ராம் என்ற க்ராமத்து ஜமீந்தார் ஒரு வர்த்தமானப்பத்திரிகை ஆரம்பித்தார். என்னை அதற்குப் பத்திராதிபராகும்படி வேண்டிக்கொண்டார். நான் உடன்பட்டேன்.

எடுத்தவுடனே சிலநாள், நான் மிகவும் ஆவேசத்துடனும் அழகுடனும் எழுதினேன். அதனால் நான் தெருவழியே போகும்போது ஜனங்கள் என்னை விரலால் சுட்டிக்காட்டத் தலைப்பட்டனர். என் தலையைச் சூழ முதல்தரமான ஒளியின் மண்டலம் வீசுவதாக பாவனை செய்யலானேன்.

ஜாஹிர்க்ராமத்துக்கு ஸமீபத்தில் ஆஹிர் க்ராம் என்ற மற்றொருகிராமம். இந்த இரண்டூர்

ஜமீந்தார்களுக் கிடையே ஓயாமல் போட்டிப் பும் சண்டையும். அடிக்கடி அவர்களுக்குள்ளே பரஸ்பரம் தடியடி ப்ரயோகங்கள் நடந்து வந் தன. பின்பு நியாயாதிபதி இருவரையும் ஜாமீ னில் கட்டுப்படுத்தினது காரணமாக ஒரு பக் கத்துத் தடிக்காரர் ஸ்தானத்தை நான் வஹிக் கும்படியாயிற்று. அந்த கவுரவத்துக்கு ஹானி வாராத படியே நான் வேலை செய்ததாக அனை வரும் கூறினர்.

என் லிகிதங்களுடைய வேகத்தையும், ஜ்வாலையையும் கண்டு ஆஹிர்க்ராம் சலை கவிழ் ந்துவிட்டது. அந்த ஜமீந்தாருடைய நெடுங் காலத்து வமிசத்தையும், குலத்தையும் எனது எழுத்து மையினால் களங்கப் படுத்தினேன்.

இந்தநாட்களில் எனக்கு என்னைப்பற்றி மிகுந்த திருப்தி ஏற்படலாயிற்று. என் உடம்பு கூடக் கொஞ்சம் புஷ்டி யாயிற்று. வெற்றி கொண்ட மேதாவிக் கிருக்கவேண்டிய பளபளப்பு என் முகத்தில் வீசலாயிற்று. ஆஹிர்க்ராமத்தின் பூர்வசரித்திரத்தைப்பற்றி

மர்மத்திலே தைக்கும்படி நான் வசை எழுத, அதைப்படித்து ஜாஹிர்க்ராமத்தார் அத்தனை பேரும் வெள்ளரிப்பழம் வெடிப்பதுபோலே விலாவெடிக்கும்படி சிரிப்பதைக்கண்டு எனது ஆச்சர்யமான வசைத் திறமையை எண்ணி நானே மனம் பூரிப்பதுண்டு. மிகவும் ஸௌக்ய மாக இருந்தேன்.

இறுதியில், ஆஹிர் க்ராமத்தாரும் ஒரு பத்திரிகை தொடங்கி விட்டார்கள். அந்தப் பத்திரிகை இலக்கிய நாகரிகத்தின் லவலேச மும் இல்லாமல், வெறுமே பச்சை பச்சையாக எழுதிற்று. அதன் பாஷை கலப்பில்லாத நாட்டுப்புறம். ஒவ்வோ ரெழுத்தும் முகத்தின் முன்னே வந்து அலறுவதுபோ லிருக்கும். இரண்டு கிராமத்துஜனங்களும் அதன் அர்த்தத்தை வெகு சுலபமாகக் கண்டனர்.

நானோ மர்யாதையை எண்ணி வசனத்தை இஷ்டப்படிவிட ஸாத்யமில்லாது போனேன். எனது வசைகள் ஆழ்ந்த மறைபொருளாக

இருக்கும். ஆதலால் சத்துரு, மித்திரர்களின் புத்தியில் நன்கு விளங்காமலும் போவதுண்டு.

எனவே, இந்த வசவு யுத்தத்தில் நான் நிச்சயமான வெற்றியடைந்த ஸமயங்களில் கூட, என் ஜயம் படிப்பவர்களுக்குப் புலப்படவேஹேது வில்லை. கடைசியாக, நிராசைகொண்டு, நான் "இலக்கியத்தில் நாகரிக நெறி" என்பதாக ஒரு உபந்யாஸம் எழுதினேன். அது பெரும் பிழையாக முடிந்தது. ஏனென்றால், மெய்யாகவே ஹாஸ்யமான விஷயங்களைக்காட்டிலும் கம்பீர உபந்யாஸங்களே சில ஸமயங்களில் அதிக நகைப்புக் கிடம் தருகின்றன. எனவே பிற மனிதரின் யோக்யதையை விருத்திசெய்யக் கருதி நான்செய்த யத்தனம் நான் விரும்பியதற்கு நேர்மாறான பயனை விளைத்தது.

என்னுடைய யஜமான் என்னை முன் போலே கணிப்பதில்லை. எனக்கு வழக்கமாக நடந்துவந்த கவுரவம் சுருங்கலாயிற்று; குறைந்த ஸத்துடைய தாயிற்று.

வீதியில் பிறர் தமது வேலையை விட்டு என்னிடம் வந்து ஒரு வார்த்தை கேட்டுப் போகும் பெருமையை நாடுவது நின்று போயிற்று. என்னிடம் பிறர் சிறுபிள்ளைத் தனமான விளையாட்டு வைத்துக் கொள்ளும் ஸ்திதிக்கு வந்து விட்டது.

நகைப் புடன் எனது பிடரியைத் தட்டிக்கொடுப்பதும், எனக்கு வேடிக்கைப் பெயர்கள் சூட்டுவது மாயினர்.

இதனிடையே எனது நண்பர்கள் முன்பு எனக்குக் கீர்த்தி விளைவித்த ஹாஸ்ய நாடகங்களை மறந்தே போயினர். எரிந்து, கடைசிவரை கருகிப் போன தீக் குச்சி போலாய் விட்டேன்.

என் மனம் மிகவும் சோர்ந்து போய் விட்டது. கூடிய வரை மண்டையை உடைத்துப் பார்த்தாலும் ஒரு வரி கூட எழுத முடியவில்லை. எனக்கு உயிர் வாழ்க்கையிலேயே விரஸம் உண் டாய் விட்டது.

ப்ரபா என்னைக் கண்டு பயப் படலானாள். கூப்பிட்டாலொழிய அருகே வரத் துணியாள். ஹாஸ்யங்களெழுதும் புலமை சான்றதொரு தந்தையை விட ஒரு ஸாதாரண பொம்மை நல்ல துணையென்று தெரிந்து கொண்டாள்.

ஒரு நாள் அந்த ஆஹிர்க்ராம் பத்திரிகை என் யஜமானை விட்டு என்னையே தாக்கி யிருந்தது கண்டேன். என்னைக் குறித்துச் சில இழிவான அபவாதங்கள் எழுதப் பட்டிருந்தன. எனது நண்பரும் பரிசயக் காரரும் ஒவ்வொருவராக வந்து என்னிடம் அதிலுள்ள காரமான பகுதிகளை வாசித்துக் காட்டிக் குலுங்க நகைத்துப் போயினர். விஷயத்தை ஏற்றுக் கொள்ள இட மில்லாவிட்டாலும் எதிரி எழுதுகிற மாதிரி மிகவும் திற மென்பதை மறுக்க இட மில்லை யென்று சிலர் கூறினர். ஒரே பகலில், சுமார் இருபது பேர் வந்து அதே கதையை மீட்டு மீட்டும் சொன்னார்கள். சந்த மாறுதலாகச் சில பேதங்கள் லேசாக வரும். அவ்வளவு தான்.

என் வீட்டுக் கெதிரே சிறு தோட்டம் உண்டு. புண் பட்ட மன துடன் நான் மாலை யில் அங்கே உலாவிக் கொண் டிருந்தேன். பக்ஷிகள் கூடுகளுக்கு மீண்டு வந்து அந்த க்ஷணத்தி லேயே ஸாயங் கால சாந்தியில் லய மடைந்தன. அதைக் கண்டு நான் பக்ஷி ஜாதி யில் பத்திராதிபர்களும், இலக்கிய நாகரிகத் தைப் பற்றின விவாதங்களு மில்லை யென்று தெரிந்து கொண்டேன்.

எப்படி மாறுத்தரம் எழுதுவே மென்ற ஒரே கவலையில் மூழ்கிக் கிடந்தேன். மரியா தையில் இருக்கிற கஷ்டம் யா தெனில் அது ஸகல வித ஜனங்களுக்கும் அர்த்த மாக வில்லை. எதிரி தாக்கிய மாதிரி பாஷையி லேயே உத்தர மெழுத வேண்டு மென்று தீர் மானம் செய்து கொண்டேன். தோல்வி யொத் துக் கொண்ட தாக ஏற்படவே கூடா தென்று நிச்சயித்தேன்.

இங்ஙனம் நான் முடிவு செய்த போது, மாலை யிருளை ஊடுருவி நன்கு பழகிய மெல்

லிய குர லொன்று வந்தது. அடுத்த க்ஷணத்தில் சூடான மெல்லிய கர மொன்று என் உள்ளங்கையைத் தீண்டிற்று. நான் மனம் சிதறிப் போ யிருந்த படியால் அந்தக் குரலும் ஸ்பசர்மும் பழமை யாக இருந்தும், உணரா திருந்து விட்டேன்.

அவை நீங்கிச் சென்ற பின் மறு கணத்தில் அந்தக் குரல் என் செவியில் தொனிக்கலாயிற்று. ஸ்பர்சத்தின் நினைவு வந்தது. என் குழந்தை மெது வாகப் பக்கத்தில் வந்து "அப்பா" என்று என் காதில் சொல்ல, அதற்கு நான் உத்தரம் கொடாத படியால், அவள் என் வலக் கையை உயர்த்தித் தன் நெற்றியிலே ஒற்றிக் கொண்டு மறு படி மவுனமாக வீட்டுக் குள்ளே போய் விட்டா ளென்பது தெரிய லாயிற்று.

ப்ரபா நெடுங் கால மாக என்னை அப் படி அழைத்த தில்லை. அத்தனை நிர்ப்பய மாக வந்து கொஞ்சுவதும் கிடையாது. ஆதலால் அன்று அவள் தீண்டிய அன்பின் ஸ்பர்சத்

திலே என் ஹ்ருதயம் அவளையெண்ணி தாஹ முற லாயிற்று. சிறிது நேரத்துக் கப்பால் வீட்டுக்குள் புகுந்தேன். ப்ரபா ஒரு படுக் கையின் மீது படுத் திருந்தாள். அவ ளுடைய கண்கள் பாதி குவிந் திருந்தன. அவள் கஷ் டப் படுவது போ லிருந்தது. நா ளிறுதியில் மண் மீது வீழ்ந்து விட்ட தொரு மலர் போலே கிடந்தாள்.

நெற்றியைத் தொட்டுப் பார்த்தேன் ஜ்வ ரம் அடித்தது; மூச்சு சூடாக வந்தது; நாடி சரி யில்லை. பத்திரிகைக்குக் கார மான உத் தரம் கொடுக்க வேண்டு மென்று யோசனை செய்து கொண் டிருந்த தந்தை யிடம் அவள், ஜ்வரத்தின் ஆரம்பச் சின்னங்கள் தோன்றின வுடனே நெஞ்சில் தாஹத் துடன் ஓடி வந்து பிதாவின் அன்பையும் கொஞ்சுதலையும் வேண் டினு ளென்பதை அறிந்து கொண்டேன்.

அவளுடைய பக்கத்தில் உட்கார்ந் தேன். ஒரு சொல் லுரையாமல் குழந்தை என் கை யைத் தனது ஜ்வரச் சூடு கொண்ட அகங்கை

களி னிடையே பற்றி நெற்றியில் வைத்துக் கொண்டு சலன மின்றிக் கிடந்தாள். ஜாஹிர்க் ராம் பத்திரிகையில் என் கையி லிருந்த பிரதி களை யெல்லாம் எரித்தேன். தூஷணைக்கு மாறுத்தரம் எழுத வில்லை. இதில் தோல்வி அங்கீகாரம் செய்து கொண்ட போது எனக் குண்டான மகிழ்ச்சி அதற்கு முன் எப்போ தும் கண்ட தில்லை.

முன்பு தா யிறந்த போது குழந்தையை ஹ்ருதயத்தாலே தழுவினேன். இப்போது மாற்றுந் தாய் ஸ்தானத்தில் வந் திருந்த பத் திரிகைக்கு தஹனம் நடத்தி விட்டு, மறு படி ஒரு முறை எனது குழந்தையை நெஞ்சிலே குடி யேற்றினேன்.

"பத்திராதிபர்" என்ற கதை

முற்றிற்று.

ஸுபா.

குழந்தை (ஸுபாவு) க்கு ஸுபாஷிணி (நன்குமொழிவாள்) என்று பெயர் வைத்த போது அது உண்மையாக இருக்குமென்பது யாருக்குத் தெரியும்? இதற்கு மூத்த பெண்ணிரண்டுக்கும் ஸுகேசினி யென்றும் ஸுஹாஸினி என்றும் பெயர். எதுகை, மோனையைக் கருதிப் பிதா கடைக்குட்டிக்கு ஸுபாஷிணி என்று நாமகரணம் செய்தான். இப்போது அவளை எல்லாரும் சுருக்கமாக ஸுபா என்று கூப்பிடுகிறார்கள்.

தக்க விருந்துகள் செலவுகளுடன் மூத்த பெண்களிருவருக்கும் விவாகம் நடைபெற்றது. கடைசிப்பெண் தான் கலியாணமாகாமல் தாய்

தந்தையரின் மனதிலே பேசொணுத் துயர்ச் சுமையாக நின்றுள்.

வாய் பேசாதவர்களுக்கும் உள்ள வுணர்ச்சி சற்றிருக்கலா மென்பதைப் பலர் கருதுவதில்லை. ஆதலால் அவளுடைய முன்னிலையிலேயே அவளுடைய எதிர்காலத்தைப் பற்றித் தமக்குள்ள கவலைகளைப் பலர் வெளியிட்டுரைக்க லாயினர். ஆதலால் குழந்தைப் பிராய முதலாகவே அவள் மனதில் தான் பிதா வீட்டில் ஒரு தேவ சாபமாக வந்து பிறந்து விட்டதாக எண்ண லானுள். இதனுல் அவள் பிற ஜனங்களின் கண்ணுக்குப் புலப் படாமல் எப்போதும் தன்னை மறைத்துக் கொள்ள முயல்வாளாயினள்.

எல்லாருமே தன்னை மறந்து விட்டால் தனக்கு ஆறுதல் விளையுமென் றெண்ணினுள். ஆனுல் நோவொன்றை மறக்க யாரால் இயலும்? அது போல் இவள் தாய் தந்தையரின் நினைப்பில் எப்போதும் அகலாது நின்றுள்.

விசேஷமாகத் தாயே இக் குழந்தையைத் தனது சொந்த பாவம்போ லெண்ணி வருந்தினுள். ஒரு தாய் தன் மகளேத் தன்னிலொரு பகுதியாக பாவனே செய்வதனுல் மகளிடம் ஒருன மிருந்தால் அது தனக்கே ஊனமென்று கருதுகிறுள்.

வாணீகண்டன் (குழந்தையின் பிதா) தான் ஒருவாறு மற்றப் பெண்களேக் காட்டிலும் சற்றே இப்பெண்ணிடம் அதிக அன்பு செலுத்துவதுபோலே தோன்றிற்று. தாயோ இவளேத் தன் கர்ப்பத்துக்கொரு பங்கமாகக் கருதி இவளிடம் மிகுந்த அஸூயை காண்பித்தாள்.

வாக்கில்லே ஸுபாவுக்கு; ஆனல் நீண்ட இமைகளுடைய இரண்டு கரிய பெரிய விழிகளிருந்தன. உள்ளத்தில் யா தாயினு மோர் எழுச்சி தோன்று மிடத் தெல்லாம் அவளிதழ்கள் மெல்லிய தளைகளேப் போலே துடித்தன.

உள்ளக் கருத்தை நாம் மொழிகளால் வெளியிடுமிடத்தே அச்செய்கை பெரும்பா

னும் புதிய தொன்று புனைவதுபோலும், ஒரு வித மொழி பெயர்ப்புப் போலும் சமைகிறது. சிலவேளை அதில் குறிப்புமாறிப் போகிறது பன்முறை சொற்றிறம் போதாமையால் அதில் பிழை நேர்கிறது. ஆனால் கரிய விழிகளோ எதனையும் மொழி பெயர்க்க வேண்டியதில்லை. அவற்றிலே சித்தம் இயற்கைப்படி சாயை வீசுகிறது. விழிகளில் மனோபாவம் ஸஹஜமாகவே விரிகிறது; குவிகிறது; மிக்க ஒளியுடன் தழலுகிறது; மெதுவாக இறந்து செல்லுகிறது; அல்லது சிலவேளை அஸ்தமிக்கும் சந்திரன் போலே வெறித்து நோக்குகிறது; சிலவேளை விரைவுகொண்ட, சாந்தியற்ற மின்னல்போலே திசை வெளிகளில் மின்னிச் செல்லுகிறது.

ஜன்மமுதல் முகக்குறி தவிர வேறு பாஷை பேசி யறியாதவருடைய விழிகளில் ஒரு பாஷையுண்டு. அஃது அநந்த விஸ்தார முடையது; அளவற்ற ஆழமுடையது; தெளிந்த வானைப்போன்ற தொன்று; உதய, அஸ்தமய, ஸூர்யனுடைய அடங்கிய ஒளி, நிழல் ஸ்தா

னங்களைப் போன்றது. இந்த ஊமை மனுஷ்ய ஜந்துவிடம் அகண்டமான ப்ரக்ருதியின் தனிமையான மஹிமைபோன்றதொரு மஹிமை விளங்கிற்று. இதுபற்றியே ஸாதாரண மாதிரியான மற்றப் பிள்ளைகளும் பெண்களும் இவளிடம் ஒருவாறு பயங்கொண்டிருந்தனர். இவளுடன் அவர்கள் விளையாடுவதில்லை. அவள் நண்பகலின் தனிமைபோன்றிருந்தாள்; மௌனமாக; ஒரு துணையின்றி.

அந்த க்ராமத்துக்குச் சண்டிபுரம் என்று பெயர். அவ்வூர் நதி வங்காளத்துச் சிறிய வாய்க்கால்களிலொன்று; அந்நாட்டிலொரு க்ருஹஸ்தன் வீட்டுக் கன்னிபோன்றது. நெடுந்தொலை சென்ற பிறகு தான் இது சற்றே விரிவாகிறது. இந்த மெல்லிய ஊக்கமுடைய நதிப் பெண் தன் இரு கரைகளின் வரம்பு மீறுமல் தன் கடமைகளைச் செலுத்தி வந்தாள்.

இருகரை மருங்கிலுமுள்ள கிராமங்களின் எல்லாப் பொருள்களுடனும் இவள் (நதிப் பெண்) ஏதேனுமொரு வகை உறவு பூண்டிருந்

தாள். இருபுறமும் ஜனவாஸங்க ளிருந்தன. உயர்ந்த கரைகளின்மீது மரங்கள் நெருங்கிய நிழல் விரித்தன. கிராமத்தின் காப்புத் தெய்வம்போன்ற அந் நதிப்பெண், கீழே, தன்னை மறந்து, எண்ணிறந்த நற்செயல்கள் புரிபவளாய், உள்ளத்தில் மகிழ்ச்சி யோங்கக் குதித்தோடிச் சென்றனள்.

கரையோரந் தான் வாணீகண்டன் வீடு அதைச் சுற்றி மூங்கில் வேலியும், பெரிய ஓலை வேய்ந்த கூரையும், பசுத்தோழுவும், நெல்லுக் குத்தும் கொட்டமும், வைக்கோற் போரும், புளியமர நிழலும் மாவும் பலாவும் வாழையுங் கூடிய தோட்டமும், பக்கத்தில் தோணிகளில் யாத்திரை செய்வோரின் மனதைக் கவர்ந்தன. இந்தக் குடும்பச் செழுமையி னிடையே, ஊமைப்பெண்ணை யாரேனும் கவனித்தார்களோ இல்லையோ எனக்குத் தெரியாது.

ஆனல் அவள் வேலையின்றி அவகாசப் பட்டபோ தெல்லாம் இந்த நதிக்கரையின்மேல் வந்துட்கார்ந்து கொள்வது வழக்கம்.

அவள் பேசாவிடினும் இயற்கை அக் குறையைப் போதியபடி பூர்த்திசெய்தது. நதியின் களகளப்பும், மனிதரின்சத்தமும், வண்டுகளின் ரீங்காரமும், பக்ஷிகளின் பாட்டொலியும், இலைகளின் சலசலப்பும் ஒன்று கூடிச் சூழ்ந்துள்ள சலனத்துடனும் சுழற்சியுடனும் இரைச்சலுடனுங் கலந்து, கடலின் திரண்ட அலைகளைப் போலே அந்தப் பெண்ணுடைய ஹ்ருதயமாகிய நித்ய மௌனக்கரையின் மீது வந்து மோதின. இயற்கையின் இப் பலவகைப் பட்ட ஒலிகளும், பல வகைப் பட்ட இயக்கங்களும், இவையே, ஒருவித ஊமைப்பாஷைதான்; இஃது ஸூபாவின் நீண்ட இமைகளுடைய பெரிய கண்களில் தோன்றியபாஷையை ஸர்வ லோக விஸ்தார மாக்கியது போன்றது. சிள் வண்டுகளின் ஓசை நிரம்பிய புற்றரை முதலாக, ஒலிகளின் எல்லையைக் கடந்த நக்ஷத்ர வெளிகள் வரை எங்கும் குறிகளும், சமிக்ஞைகளும், ஸங்கீதமும், அழுகையும் பெருமூச்சுந் தானிருக்கின்றன. நண்பகற் பொழு

தில் செம்படவர் தம் வீடுகளுக்கு உணவுக்காகச் சென்று விடுவர்; க்ருஹஸ்தர் உறங்கி விடுவார்கள். தோணி அசையாமல் கரையிலே கட்டிக் கிடக்கும்; உயிர்க் குலந் ததும்பிய உலகம் தன் கார்யத்தின் நடு மத்தியில் அஃது திடீரென்று நிறுத்தி விட்டு பயங்கர மானதொரு தனிமைக் கோலம் பூண் டிருக்கும்; அப் படிப் பட்ட நேரத்தில், அங்கே, அகன்ற ஜ்வாலா மய மான வானத்தின் கீழே, எதிரெதிராக ஒரூமைப் பெண்ணும் ஊமை ப்ரக்ருதியுமிருந்தனர்; ப்ரக்ருதி நெடிது விரிந்த வெயிலிடை யிருந்தாள்; பெண் ஒரு சிறிய மரத்து நிழலி லிருந்தாள்.

ஸுபாவுக்கு அந்தரங்க நண்பரின் தொகுதி யொன் றில்லை யென்று கொள்ளலாகாது. தொழுவி லிருந்த ஸர்வசி, பாங்குளி என்ற இரண்டு பசுக்களும் அவளுக்குத் தோழிகள். அவை அப் பெண் ணுடைய வாயால் தமது பெயர்களைச் சொல்லிக் கேட்ட தில்லை. எனினும் அவளுடைய அடி யோசை அவற்றுக்குத் தெரி

யும். அவ் வோசையி லிருந்த துக்க மய மான இசையின் பொருளை அவை பாறையைக் காட்டிலும் எளி தாக உணர்ந்து கொண்டன. ஸுபா கொஞ்சுவதை யும், கடித்து கொள்வதை யும், கெஞ்சுவதையும் அவை மனிதரிலும் நன் ருக அறிந்து கொண்டன.

தொழுவுக் குள் புகுந்த வுட னே ஸுபா தன் இரண்டு கைகளால் ஸர்வசியின் கழுத்தைச் சூழக் கட்டிக் கொண்டு அதன் கன்னத்துடன் தன் கன்னத்தை உராய்வாள். அப் போது பாங்குளி தெளிந்த, ப்ரேமை ததும்பிய நோக் குடன் அவளை நோக்கி அவ ளங்கங்களைச் சுவைக்கும். ஒவ் வொரு நாளும் மூன்று வேளை தவருமல் தொழுவுக்கு வருவது அப் பெண் ணுடைய வழக்கம். தவிரவும், ஒழுங் குக்கு மேலே அதிக முறைகள் வந்து பார்ப்ப து முண்டு. வீட்டில் தன்னை யாரேனும் கோ பித்த நாட்களில் அவள் தன் ஊமைத் தோழிக ளிடம் நேரத் தப்பி வருவாள். துன்பப் பொ றை யும், சோக மய மான சாந்தியும் நிரம்பிய

அவள் பார்வையி னின் றும் அவ ளுடைய நெஞ்சுப் புண்ணை அவை ஒரு வித மான மிருக ஞானத்தா லே உணர்ந்து கொண்டன. அப் போது அவை அவளை நெருங்கி வந்து மெல்ல, மெல்ல அவள் கைகளில் கொம்பைத் தேய்த் துத் தம் ஊமைக் கவலையால் அவளை ஸமாதா னப் படுத்த முயலும்.

இவற்றைத் தவிர, அவளுக்கு ஒரு வெள் ளாட்டுக் குட்டி யும் ஒரு பூனைக் குட்டி யும் ஸ்நேஹ முண்டு. ஆனால் இவற் றுடன் ஸுபா அத்தனை ஸமான மாகப் பழகுவ தில்லை. எனி னும் அவ ளிடம் அவை போதிய வரை பற்று தல் காண்பித்தன. இரவும் பக லும், ஒத்த வேளை யும் ஒவ்வாத வேளை யும், அந்தப் பூனைக் குட்டி மெது வாக வந்து ஸுபாவின் சூ டான மடி மீ துட்கார்ந்து கொண்டு ஸுக மாக நித்திரை செய்ய ஏற்பாடு பண் ணும். அவள் தன் மெல்லிய விரல்களால் கழுத்தை யும் முதுகை யும் தடவிக் கொடுத்தால், தனக் குத் தூக்கம் வரும் விஷயத்தில் விசேஷ ஸௌ

கர்யங்க ளுண் டென்ற தன் எண்ணத்தையும் சயிக்கினைகளால் உணர்த்தும்.

உயர்ந்த ஜாதி ஜீவன்களி லும் ஸுபா ஒரு ஸ்நேஹிதன் கண்டு பிடித்து வைத் திருந் தாள். ஆனால் அவனுக்கும் அவளுக்கு மிருந்த பரஸ்பர ஸம்பந்தத்தை வகுத்துணர்த லரி தாம். ஏ னெனில் அவன் பாஷை பேசும் ஜந்து; அவ்விருவருக்கு மிடை யே பொது மொழி கிடையாது.

அவன் கோஸ்வாமிகளின் வீட்டுக் கடை சிப் பிள்ளை. அவன் பெயர் ப்ரதாப கோஸ் வாமி. இந்தப் பயல் முழுச் சோம்பேறி. இவன் ஏ தேனும் தொழில் செய்து குடும்பத் துக்குப் பயன் படுவா னென்ற நம்பிக்கை யை இவனுடைய தாய் தந்தையர் பல முயற்சி கள் செய்து பார்த்து நெடுங் காலத்துக்கு முன் னுக வே கை விட்டு விட்டனர். ஆனால் சோம் பேறிக்கு ஒரு அனுகூல முண்டு. பந்துக்க ளெல்லாரும் அவ னிடம் அதிருப்தி கொண்

டிருப்பி னும் பந்துக்க ளெல்லாதார் அவ னிடம் மிக்க பிரியஞ் செலுத்துகின்றனர். அவன் யா தொரு தொழி லுட னும் கட்டுப் படாம விருப்பதால் ஒரு வித மான பொது உடைமை போ லாகிறான். ஒரு பட்டணத்தில் எந்தக் குடும்பத்துக்கும் சொந்த மில்லாத பொதுத் தோட்டங்கள் இருத்தல் அவசிய மா வது போல், ஒரு கிராமத்தில் பொதுவுக்கு சொந்த மான சில சோம்பேறிகள் இருப்ப தவசியம். ஒரு கார்யத்தில், ஒரு தொழிலில், ஒரு விருந் தில், ஒரு வேடிக்கையில் ஆள் வேண்டி யிருந் தால் இந்தச் சோம்பேறிகள் தயா ராகப் பக்கத் தி லிருப்பார்கள்.

ப்ரதாபனுக்குத் தூண்டிலைக் கொண்டு போய் மீன் பிடிப்பதே மிகப் பிரிய மான பொழுது போக்கு. இந்த வேலையில் நெடும் பொழுதை மிக எளி தாகக் கழித்து விட லாம். ஆதலால் அடிக் கடி மாலே வேளையில் அவன் நதி யோரத்தில் இத் தொழில் செய்து கொண் டிருப்பது காண லாம். அந்த ஸமயங்களிலே

தான் ஸுபாவுக்கும் அவனுக்கும் அடிக் கடி ஸந்தி நேரும். என்ன தொழில் செய்யும் பொழுதிலும் பக்கத்திலே ஒரு ஆளிருந்தால் மட்டுமே ப்ரதாபனுடைய மனம் ஆறுதல் பெற்றிருக்கும். மீன் பிடிக்கும் ஸமயத்தில் பக்கததிலுள்ள ஆள் பேச்சில்லாமலிருப்பது விசேஷ ஸௌகர்யம். இது கொண்டே ப்ரதாபன் ஸுபாவின் ப்ரயோஜனத்தை மிகவும் நன்கு மதிக்கலானான். இக் காரணம் பற்றியே மற்றவர்களெல்லாரும் ஸுபாவை ஸுபா வென்று சொல்ல, இவன் சற்றே அதிகக் கொஞ்சுதலாக ஸுபாவை "ஸு" என்று கூப்பிடுவான்.

ஸுபா புளிய மரத் தடியில் உட்கார்ந்திருப்பாள். சற்றுத் தொலையிலே ப்ரதாபன் தன்னுடைய தூண்டிலைத் தரையில் வைத்து விட்டுத் தண்ணீரைப் பார்த்துக் கொண்டிருப்பான். தினந் தோறும் அவள் ப்ரதாபனுக்குச் செலுத்த வேண்டிய காணிக்கை ஒரு வெற்றிலை. அதை அவள் கையாலே சுருளாக்கிக்

கொண்டு வருவாள். நெடு நேரம் வெறு மே உட்கார்ந்து பார்த்துக் கொண் டிருப்பதில் அலுத்துப்போன ஸமயங்களில் அவ ளுடைய மனதில்: 'ப்ரதாபனுக்கு யா தேனும் விசேஷ உதவி செய்ய வேண்டும்; ஏதேனும் தொழி லில் அவனுக்குத் துணை புரிய வேண்டும்; தா னும் இந்த மண் மேல் நிஷ்ப்ரயோஜன மான பொரு ளில்லை யென்பதை எங்ஙன மேனும் அவனுக்குத் தெரிவிக்க வேண்டும்' என்ற பெரிய தொரு விருப்பம் விளையக் கூடு மென்று நினைக்கிறேன். ஆனல் எவ்வித உதவிக்கும்வழி யில்லை. எனவே சில முறை அவள் தன் அந்த ரங்க உள்ளத்தி லே ஈசனை எண்ணித் தனக்கு அற்புத சக்திகள் வேண்டு மென்று ப்ரார்த் தனை புரிவாள். ப்ரதாபன் கண்டு ஆச்சர்யத் துடன்:— "ஆஹா! நம் முடைய ஸுபிக்கு இவ் வளவு சக்திக ளிருப்ப தாக நான் எதிர் பார்த்த தே யில்லை!" என்று சொல்லி வியக் கும் படி யான அற்புதச் செய்கை யொன்றை அவன் முன் னே நடத்திக் காட்ட வேண்டு

மென்று விரும்புவாள். ஸுபா எண்ணு வாள் :— "ஐயோ ஒரு நாக கன்னிகையாக நாம் பிறந் திருந்தோ மாளுல்! மெது வாகக் கள்ளத்தன மாகத் தண்ணீரி னின் றெழுந்து வந்து படித்துறை மேலே ஒரு நாகரத்நத்தை வைத்துப் போக லாம். ப்ரதாபன் மீன் பிடிக் கும் நீசத் தொழிலை விட்டு விட்டு அந்த ரத் நத்தை வந் தெடுப்பான். அது அவனை ஜலத் துள்ளே இறக்கிச் செல்லும். பாதாளத்துக்கு வந்து சேர்வான்.

அங் கே வெள்ளி யாமனையில் ஒரு பொற் கட்டிலின் மீது — யாரைக் காண்பான்? நம் முடைய "ஸுபவை"; வாணீ கண்ட னுடைய ஊமை மகளை: இப் போது அந்த ஆழ்ந்த ஒலி யற்ற பாதாளத்தின் தனி ராணி யாய் விட்ட "ஸுபவைக்" காண்பான்—ஆஹா, அங்ஙனம் நடந் திருக்கக் கூடாதா? அது அத்தனை அஸாத் யமா? எதுவும் அஸாத்ய மில்லை.

எனி னும் யதார்த்தத்தில் அவள் அங் ஙனம் நிர்ஜன மாகிய பாதாள ராஜ்யத்து ராஜ

குலத்தில் பிறக்க வில்லையே! வாணீ கண்டன் வீட்டிலன்றோ பிறந்தாள்? ஆதலால் கோஸ்வாமிகளின் குடும்பத்தில் பிறந்த ப்ரதாபனுக்கு அவள் எவ்வகையிலும் ஆச்சர்யம் விளைவித்தல் இயலவில்லை.

ஸுபா பிராயமேறி வந்தனள். நாளடையில் அவளுக்கு ஸ்த்ரீ போதம் ஏற்படலாயிற்று. பௌர்ணிமையைக் கண்டு பொங்கி யெழுகின்ற ஒரு கடலைப் போலே அவளுள்ளத்தில் ஒரு புதிய, வர்ணிக்க முடியாத போத சக்தி நிரம்பி வரலாயிற்று. அவள் தன்னைத் தானே நோக்கி வினவினாள். எனினும் (தன்னகத்தே பிறந்திருக்கும் புது நிலையின் பொருளை) அவள் நேரே அறிதல் இயலவில்லை.

கம்பீரமான பௌர்ணிமை யிரவொன்றில் அவள் தன் பள்ளியறைக் கதவை மெல்லத் திறந்து பயத்துடன் வெளியே நோக்கினாள். அந்தப் பௌர்ணிமையில் உறங்கிக் கிடந்த உலகத்தினிடையே தான் தனியாக

விழித் திருப்பவ ளாய், ப்ரக்ருதி தேவியும் ஸுபாவைப் போலே யிருந்தாள். யௌவனத்தின் ரஹஸ்யத்தையும் ஆநந்தத்தை யும் சோகத்தையும் ஊடுருவி அனந்த அநந்தத் தனி வெளியின் இறுதி யெல்லைகள் வரை பரவிய தாய், ஒரே மோனம் — ஒற்றைத் தனிச் சொல்லேனும் பேசத் திறனில்லாமை— திகழ்ந்தது.

ஆசை ததும்பிய அந்த ஊமையான ப்ரக்ருதியின் கரை யோரத்தில் ஆசை ததும்பிய அந்த ஊமைப் பெண் நின்றாள்.

விவாக மாகாத பெண் ணுடைய பாரத்தை ஸஹிக்க மாட்டாமல் தாய் தந்தையர் கவலைப் பட லாயினர். ஊரார் பழி தூற்றத் தொடங்கி விட்டார்கள். இவர்களுடைய குடும்பத்தை ஜாதி பஹிஷ்காரம் செய்யப் போவ தாகவும் வதந்தி உலாவிற்று. வாணீ கண்டன் சிறிது பொருளாளி. இரண்டு வேளை அன்னத்துக்குத் தட்டில்லை. ஆதலால் அவனுக்கு விரோதிகள் பலர் இருந்தனர்.

புருஷனுக்கும் பெண்டாட்டிக் கும் நெடு நேரம் ஸம்பாஷணை நடந்தது. சிறிது காலம் வாணிகண்டன் வெளி ப்ரதேசங்களுக்குச் சென்றிருந்தான். கடைசியாக அவன் திரும்பி வந்து:— "வாருங்கள், கல்கத்தாவுக்குப் போவோம்" என்றான்.

ப்ரயாணத்துக் குரிய ஏற்பாடுகளெல்லாம் முடிவு பெற்றன. மூடு பனியால் மறைவு பட்டதொரு காலைப் பொழுது போலே ஸுபாவின் அந்தக்கரண முழுமையும் கண்ணீர் மேகத்தால் நிரம்புற்றிருந்தது. சில தினங்களாகவே அவள் மனதில் அவ்யக்தமான திகிலொன் றேற்பட லாயிற்று. தாய் தந்தையர் சென்ற விட மெல்லாம் அவர்களின் பின்னே ஊமையான மிருக மொன்றைப் போலே சுற்றிக் கொண்டு வந்தாள். அவர்களுடைய முகங்களை நோக்கிப் பாக்கப் பாக்க விழித்தாள். அவர்களுடைய கருத்தை அறிந்து கொள்ள முயன்றாள். அவர்கள் அறிவிக்க வில்லை.

இதனிடையே ஒரு நாள் மாலையில் ப்ரதாபன் தூண்டிலை நீரில் வீசி விட்டுப் புன்னகையுடன் (ஸுபாவைநோக்கி):—"ஸு, உனக்கு மாப்பிள்ளை பார்த்தாய் விட்டது மெய்தானா? கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிறாயா? ஜாக்ரதை! எங்களை யெல்லாம் மறந்து விடாதே" என்றான். அப்பால் மறுபடியும் மீன் பிடிக்கத் தொடங்கிவிட்டான்.

நெஞ்சில் அம்பு பட்ட மானென்று வேடனை நோக்கித் தன்னுள்ளே :— "உனக்கு நான் என்ன பிழை செய்தேன்?" என்று சொல்லி விழிப்பது மாதிரி யாக ஸுபா ப்ரதாபனை நோக்கி விழித்தாள்.

அன்று அவள் மாத் தடியில் அதிக நேரம் உட்கார வில்லை. (எழுந்து வீட்டுக்கு வந்து விட்டாள்.) வாணீ கண்டன் அப் போது தான் தூங்கி யெழுந்து தன் படுக்கை யறையில் ஹுக்கா பிடித்துக்கொண் டிருந்தான். ஸுபா வந்து அவன் காலில் விழுந்து அவன் முகத்தை

நோக்கி அழலானாள். கடைசியாக வாணீ கண்டன் அவளை ஸமாதானப் படுத்த முயன்ற போது அந்த மனிதனுடைய வற்றிய கன்னங் களின்மீதுங் கண்ணீர் பொழியலாயிற்று.

அடுத்த நாள் கல்கத்தாவுக்குப் புறப்படுவ தாகத் தீர்மானஞ் செய்யப் பட்டது. ஸுபா தன் குழந்தைப் பிராயத்துத் தோழிக ளிடம் விடை பெற்றுக் கொள்ளும் பொருட்டாகப் பசுத்தொழுவுக்குப் போயிருந்தாள். தன் கைக ளால் அவற்றுக் குணவூட்டினாள். அவற்றின் கழுத்தை ஆலிங்கனம் செய்து கொண்டு தன் விழிகளில் இயன்ற வரை பாஷையை நிரப்பிக் கொண்டு அவற்றின் விழிகளை உற்று நோக்கி னாள். அவளுடைய இரண்டு கண்களி னின் றுங் கண்ணீர் பொழிய லாயிற்று.

சுக்ல பக்ஷம், துவாதசி, இரவு. பள்ளி யறையி னின்று வெளி யுற்று ஸுபா நதிக் கரையில் தனக்கு நெடு நாட் பழக்க மான புற்

றையின் மீது வந்து குப்புறப் படுத்துக் கொண்டாள்; மனுஷ்ய ஜாதியின் பெரிய ஊமைத் தாயாகிய பூமியைக் கைகளால் தழுவி "அம்மா, என்னைப் போக விடாதே! என்னைப் போல் உன் கைகளை நீட்டி என்னைப்பற்றிக் கொள்" என வேண்டுவாள் போன்றாள்.

ஒரு நாள் கல்கத்தாவில் ஒரு வீட்டில் ஸுபாவின் தாய் ஸுபாவுக்கு விசேஷ மான அலங்காரம் பண்ணினாள். அவளுடைய கூந் தலை வாரிப் பின்னிப் பிடரி முடி யிட்டு அதைத் தங்க வர்ண நாடாவினால் கட்டினாள். அவ ளுடைய இயற்கை யழகுகளை இயன்றவரை மறைப்பாள் போல் மேனி முழுதையும் ஆபர ணங்களால் மறைத்தாள்.

ஸுபா கண்ணீர் சிந்தினாள். கண் வீங்கி அழகு கெட்டுப் போ மென்று ஸுபாவின் தாய் அவளை அழா திருக்கும் படி வைதாள். எனினும் வசையினால் கண்ணீர் கட்டுப் படுமா?

பெண்ணைப் பார்க்கும் பொருட்டாக மாப்பிள்ளை தன் தோழனுடன் வந்தான். பெண்ணுடைய தாய் தந்தையரின் மனதில் கவலையும் பயமும் குழப்பமும் நிரம்பி யிருந்தன. தாய் மகளைத் தனியே அழைத்துத் திட்டியும் வைதும் பயமுறுத்தியும் அவளுடைய கண்ணீரின் ப்ரவாஹத்தை இருமடங் காக்கிப் பரிசோதனை செய்யவந்த மாப்பிள்ளையின் முன்னே விடுத்தாள்.

பரிசோதகன் அவளை நெடுநேரம் பார்வையிட்டுக் "குற்றமில்லை"—அத்தனை மோசமில்லை — என்றான்.

அப்பால் அவள் அழத் தொடங்கியதினின்றும் அப் பெண் மெல்லிய ஹ்ருதயமுடையவளென்றும், தய் தந்தையரின் பிரிவைக் கருதி இன்று இங்ஙனம் வருத்தப் படும் ஹ்ருதயம் பிற்காலத்தில் தனக்கும் நன்கு பயன் படக் கூடு மென்றுந் தீர்மானஞ் செய்து கொண்டான். சிப்பி முத்துக்களைப்

போல் அவளுடைய கண்ணீர் அவளுடைய விலையை அதிகப் படுத்திற்றே யன்றி அவளுடைய கருத்தை வெளியிட்டுக் காட்டவில்லை.

பஞ்சாங்கத்தைப் பார்த்து ஒரு நல்ல முஹூர்த்தத்தில் விவாகச் சடங்கு நிறைவேறிற்று. ஊமைப் பெண்ணை மாப்பிள்ளையிடம் விட்டு விட்டுத் தாய் தந்தையர் தம்மூருக்குச் சென்று விட்டனர்.

மாப் பிள்ளைக்கு மேற்குப் பக்கங்களில் (ஹிந்து ஸ்தானத்தில்) உத்யோகம். விவாஹம் முடிந்த பின் சீக்கிர மாகவே அவளை அங்கழைத்துக் கொண்டு போனான்.

ஒருவாரம் கழியு முன்னமே மணப்பெண் ஊமை யென்பது ஸகலருக்குந் தெரிந்து விட்டது. முந்தியே இதனை யாரு மறியாதது அவளுடைய பிழை யன்று. அவள் யாரையும் வஞ்சிக்க வில்லை. அவளுடைய இரு விழிகள் அனைத்தையுங் கூறத்தான் செய்தன. ஆனால் யாரும் அவற்றின் குறிப்பைக் கண்டு கொள்ள வில்லை. அவள் தன்னைச் சூழ நோக்கினாள்;

அவளுடன் ஸம்பாஷணை செய்வார் யாருமில்லை. அவளுடன் குழந்தைப் பிராயத்துப் பழக்கமுடையோராய் ஊமைப்பேச்சுத் தெரிந்தவர்களின் முகத்தை அங்குகாண வில்லை.

அந்தப் பெண்ணுடைய நித்ய மூங்கையான உள்ளத்தில் அநந்தமான, சொல்லற்ற சோகமொன்று கூவிக்கொண்டிருந்தது.

ஆனால் அந்தர்யாமியான ஈசனைத் தவிர வேறு யார் செவிக்கும் அந்தக் குரல் புலப்படவில்லை.

ஸுபாவின் புருஷன் மறுபடி இரண்டாந் தாரம் விவாகம் பண்ணிக் கொண்டான். இம்முறை அவன் பரீக்ஷையில் தன்னுடைய கண், காது இரண்டு புலன்களையும் உபயோகித்து வாக்குத் திறமுடைய மனைவியொருத்தியைக் கொண்டுவந்தான்.

"ஸுபா" என்ற கதை

முற்றிற்று.

ரஜாக் காலம்.

திடீரென்று *பாடிக் சக்ரவர்த்தியின் மனதில் ஒரு புதிய யோசனை பாய்ந்தது. ஆற்றோரத்தில் கூடி நின்ற சிறுவர்களுக்குள்ளே அவன் தலைவன். அங்கு (கரையில்) ஒரு பிரமாண்டமான ஆச்சா மரக் கட்டை பாய்மரமாக்கும் பொருட்டாகப் போட்டுக் கிடந்தது. அந்தக் கட்டையைப் பிள்ளைகளெல்லாருங் கூடி உருட்டி (ஆற்றுக்குள்) தள்ளவேண்டுமென்று (பாடிக் சக்ரவர்த்தி சொல்ல, அங்ஙனமே) தீர்மானம் செய்யப் பட்டது.

மரத்துக் குடையவன் வந்து அவஸர ஸமயத்தில் மரத்தைக் காணாதவனாய் எத்தனை

* "பாடிக்" என்ற பெயரை Fatik என்றும் மாக்கன் என்பதை Makhan என்றும் உச்சரிக்கவும்.

வியப்பும் சினமும் கஷ்டமும் அடைவா னென்பதைப் பிள்ளைகள் எண்ணமிட்டுப் பார்த்தனர். உடனே (பாடிக் சொல்லிய) வார்த்தையை ஸம்பூர்ணமாக ஆமோதிக்கலாயினர்.

எல்லாரும் இடுப்பில் வேஷ்டிகளைக் கச்சை கட்டிக் கொண்டு, வேலை தொடங்கப் போகும் தருணத்தில் பாடிக் சக்ரவர்த்தியின் தம்பியாகிய மாக்கன் லால் போய் அந்தக் கட்டையின்மீது அழுத்தமாக உட்கார்ந்து கொண்டான். இவனுக்கு (விளையாட்டில்) இத்தனை பெரிய அசிரத்தை யிருந்ததைக்கண்டு பிள்ளைகள் வருத்தப் பட்டனர்.

அவனருகே போய் ஒரு சிறுவன் நின்று மிகவும் தியக்கத் துடன் சற்றே மாக்கன் லாலை அசைத்துப்பார்த்தான். ஆனால் மாக்கன் சலிக்கவில்லை. பிஞ்சிலே பழுத்த மாக்கன் பண்டிதர் உலகத்தில் ஸர்வ வித மான விளையாட்டுக் களும் சற்றேனும் ஸாரமில்லாதன என்

றெண்ணி மௌன மாக யோசனை செய்து கொண் டிருந்தான்.

பாடிக் அப்போது கோபக் குறிகளுடன் வந்து:— "பா ரடா, அடே, உதைப்பேன்; எழுந்து போ." என்றான்.

அப் போது மாக்கன் ஸாவகாச மாகத் திரும் பித் தன் ஆஸனத்தில் முன்னைக் காட்டி லும் அதிக ஸ்திரமாக அமர்ந்து கொண்டான். இவ்வித நிலையில், பாடிக் பொது ஜனங் களின் முன்பு தன் "ராஜ" (தலைமைப்) பதவி யைக் காப் பாற்றும் வண்ணம் கீழ்ப் படித லற்ற தம்பி யின் கன்னத்தில் உடனே அறைதல் கடமையாக நேர்ந்தது. ஆனாலும் அவ னுக்குத் துணிவு பிறக்க வில்லை. என வே தான் விரும்பினால் அவனைத் தக்க படி தண்டிக்க முடியு மென்றும் ஆனால் அங்ஙனம் செய்யத் தனக் கிஷ்ட மில்லை யென் றும் காண் பிக்கக் கூடிய முகத் தோற்றந் தரித்துக் கொண்டான். இத னிடையே அவன் மன

தில் முந்தியதைக் காட்டிலும் அதிக வேடிக்கையாக நல்ல விளையாட்டொன்று தென்படலாயிற்று. "மாக்கனையுஞ் சேர்த்துக் கட்டையை உருட்டுவோம்" என்று ப்ரேரேபணை செய்தான்.

மாக்கனும் இதில் தனக்கொரு மஹிமையுண்டென்று நினைத்தான். ஆயினும் மண்ணுலகத்து மற்ற மஹிமைகளைப் போலவே இதிலும் விபத்துக் கலந்திருப்பதை மாக்கன் கருதவில்லை; மற்றவர்களும் எண்ணவில்லை.

பிள்ளைகள் மறுபடியும் இடுப்புக்களை வரிந்து கட்டிக் கொண்டு தள்ளத் தொடங்கினர்:—"தள்ளடா, தள்ளு, ஐலேலோ, பலே, பிள்ளைகளா! ஏலேலோ."

ஒரு புரட்டுப் புரட்டு முன்னாகவே சடேலென்று தன் பெருந் தன்மை, மஹிமை, வேதாந்தம், இவற்றின் ஸஹிதமாக மாக்கன் மண் மீது சரிந்தான்.

விளையாட்டின் ஆரம்பத்திலேயே இங்ஙனம் எதிர் பாராத பயனொன்று கிடைத்தது பற்றிப் பிள்ளைகள் ஆநந்த பரவச மெய்தினர். ஆனால் பாடிக் மனம் சற்றே ஸங்கடப் பட்டது. மாக்கன் லாலோ உடனே தரையி னின்றெழுந்து பாடிக் மேலே பாய்ந்து அவனைக் கண் மூடித் தனமாகக் குத்த லானான்.

பிறகு மாக்கன் மூக்கையும் மூஞ்சியையும் சொரிந்து கொண்டு அழுதபடியே தன் வீட்டுக்குச் சென்றான். விளையாட்டுக் கலைந்து போய் விட்டது.

பாடிக் சில நாணற் புற்களைப் பிடுங்கிப் பாதி யளவு நீரில் முழுகி யிருந்த ஒரு தோணி மீதேறி யுட்கார்ந்து கொண்டு மவுன மாக ஒரு புல்லைக் கடித்துத் தின்று கொண் டிருந்தான்.

அந்த வேளையில் அங்கு வெளி யூர்த் தோணி யொன்று வந்து படித் துறைக் கருகே நின்றது. அதி னின்றும் நடுப் பிராய

முடையவ ராய் மீசை மயிர் காயும் தலை மயிர் பழமு மான ஒரு கனவான் வெளிப் பட்டார். அவர் அச் சிறுவனை நோக்கி "சக்ரவர்த்தி களின் வீடெங்கே?" என்று கேட்டார்.

நாணலின் தாளைத் தின்றபடியே அச் சிறு வன்:—"அதோ, அந்தப் பக்கம்" என்றான், ஆனால் அவன் எந்தப் பக்கங் குறிப் பிட்டா னென்பதைக் கண்டு பிடிக்க முடிய வில்லை.

அந்த கனவான் "எங் கே?" என்று மறுபடி கேட்டார். "எனக்குத் தெரியாது" என்று சொல்லி விட்டுச் சிறுவன் முன் போல வே நாணல் துண்டைக் கறிக்க லானான். சக்ர வர்த்தி களின் வீட்டைக் காட்டும் படி வேறு யாரை யேனும் கேட்கலா மென்ற கருத் துடன் அந்தப் பெரியவர் போய் விட்டார்.

சிறிது நேரத்துக் கெல்லாம் (சக்ரவர்த்தி களின்) வீட்டு வேலையா ளாகிய "பாகா" (வ்யாக்ரன்) என்பவன் வந்து:—

"தம்பி பாடிக், உன்னை அம்மா கூப்பிடுகிருர்கள்" என்ருன். "வர மாட்டேன்" என்ருன் பாடிக்.

வேலைக்கார வ்யாக்ரன் பாடிக்கை வாரியெடுத்து பாலாத்கார மாகத் தூக்கிச் சென்ருன். பாடிக் நிஷ்ப்ர யோஜன மான கோபத்துடன் கைகளையும் கால்களையும் உதறலானுன்.

இங்ஙனம் பாடிக்கைக் கண்ட வுடன் தாய், தழுலுகின்ற சினைத் துடனே, "அடே நீ மறு படியும் மாக்கனை அடித்தாயா?" என்று கூவினுள்.

"இல்லை" என்ருன் பாடிக் சக்ரவர்த்தி.

"பொய்யுங் கூடச் சொல்கிருயா?" என்ருள் தாய்.

"அடிக்க வே யில்லை. மாக்கனை யே கேள்" என்று பாடிக் சொன்னுன்.

மாக்கனைத் தாய் கேட்டாள். அவன் முன்பு குற்றஞ் சாற்றியதை உறுதி யாகப்

பற்றிக் கொண்டு:— "ஆம் என்னை அடித்தான்" என்றான்.

பாடிக் இதற்கு மேலே ஸஹிக்க முடியாதவனான். ஒரே பாய்ச்சலாக மாக்கன் மேலே பாய்ந்து:— "ஹாம்! பொய் சொல்லுகிறாயா?" என்று கூறி அவன் கன்னத்தில் கணீரென்று ஒரு அறை யறைந்தான்.

தாய் மாக்கன் பக்கஞ் சேர்ந்து கொண்டு பாடிக்கை உக்ரத்துடன் ஒரு குலுக்குக் குலுக்கி அவன் முதுகின் மீது இரண்டு, மூன்று பலமான அடிகளடித்தாள். பாடிக் அவனைத் தள்ளினான்.

அப்போது தாய் "ஹா! என் மேல் கை யோங்கத் துணிந்தாயா?" என்று கர்ஜனை செய்தாள்.

ஒஷ்டி ஸந்தர்ப்பத்தில், முன்னே கூறப்பட்ட, பாதி மயிர் காய் பாதி மயிர் பழமான, (அதாவது மீசை மயிர் கருமையும் தலை மயிர் வெண்மையுமாகிய) மனிதர் அந்த வீட்டுக்

குள் வந்து நுழைந்து:— “அட, நீங்க ளெல்லாம் இங் கென்ன நடத்திக் கொண்டிருக்கிறீர்கள்?” என்றார்.

பாடிக்கின் தாய் வியப்பி லும் மகிழ்ச்சியி லும் மூழ்கியவ ளாய்:— “அம்மா மேவா! அண்ணனன்றோ வந்து விட்டார்!” என்று கூவி வந்தவரின் பாதங்களில் ஸாஷ்டாங்கமாக நமஸ் கரித்தாள்.

நெடுங்காலத்துக்கு முன்பே இத் தமையன் வியாபாரத்துக்காக வங்காளத்தி னின்று வெளியேறி மேற்கே (ஹிந்தி தேசத்துக்குப்) போய்விட்டார். அவர் போனதற் கப்பால் பாடிக்கின் தாயாருக்கு அவ்விரண்டு பிள்ளைகளும் பிறந்து அப்பிள்ளைகளுக்கும் பிராயம் ஏறிப்போய்விட்டது. அவளுடைய கணவனும் இறந்துபோய் விட்டான். இதனிடையே அவள் ஒருமுறை கூடத் தமையனை ஸந்திக்கவில்லை. நெடுங்காலத்துக் கப்பால் அத் தமையனாகிய விசுவம்பர பாபு இப்போது வங்காளத்துக்கு மீண்டவர் தனது தங்கையைப்பார்க்க வந்தனர்

சில தினங்கள் விருந்துக்களிலே கழிந்தன. கடைசியாக, விசுவம்பரபாபு புறப்படுவதற்கு ஓரிரண்டு தினங்களின் முன்னே, அவர் தங்கையிடம் பிள்ளைகளின் படிப்பையும் அபிவிருத்தியையும் பற்றி விசாரணை செய்தார். அதற்கு மறுமொழியாகத் தாய் பாடிக்கின் அடங்காத் தன்மை, கலககுணம், படிப்பில் அசிரத்தை இவற்றையும் மாக்கனுடைய சாந்தம், பொறுமை, கல்வி யபிமானம், ஊக்கம் இவற்றையும் பற்றி விஸ்தாரமாகப் பேசினாள்.

"பாடிக் என் வாணாளைக் கொள்ளை கொண்டு போகிறான்" என்று அவள் முறையிட்டாள். இதைக்கேட்டு விசுவம்பர பாபு "அப்படியானால் நான் அவனைக் கல்கத்தாவுக்குக் கூட்டிக்கொண்டுபோய், எனது நேரான மேற்பார்வையின் கீழே கல்விப் பயிற்சி செய்விக்கிறேன்" என்றார். கணவனை யிழந்தவளாகிய அந்த ஸ்த்ரீ இவ்வார்த்தையை எளிதில் அங்கீகாரம் செய்து கொண்டனள்.

அவள் பிள்ளையைநோக்கி: — "என்ன, பாடிக், மாமாவுடன் கல்கத்தாவுக்குப் போகிருயா?" என்று கேட்டாள்.

களியினுலே தாவிக்குதித்துப் "போகிறேன்" என்ருன் பாடிக்.

ஒருநா ளில்லாவிட்டால் ஒருநாள் பாடிக் மாக்கனை நதியில் அமிழ்த்திக் கொல்வான், அல்லது மண்டையை உடைப்பான், அல்லது வேறு யாதாயினும் ஆபத்து விளைப்பானென்ற பயத்தை எப்போதும் மனதில் கொண்டவளாகிய தாய் பாடிக்கை வெளியே அனுப்புவதில் தான் யாதோ ராக்ஷேபமுங் கொள்ளாதிருப்பினும், பாடிக் தான் வெளியேறுவதில் இத்தனை உத்ஸாஹங் காட்டுவதைப் பார்த்துச் சற்றே வருத்தப்பட்டாள்.

பாடிக் தன் மாமாவிடம் ஓயாமல்:—"எப்போது புறப்படப் போகிறீர்" என்று கேட்டு அவரைச் சலிப்புறச் செய்தான். இந்த ஆனந்தத்தில் அவனுக்கு இரவில் தூக்கங் கூட வரவில்லை.

கடைசியாகப் புறப்படுந் தறுவாயில், அவன் தன் களிப்பு மிகுதியால் உதாரம் மேலிட்டுத் தன்னுடைய மீன் தூண்டிலையும் காற்றாடியையும், வேறு சில ஸாமான்களையும் மாக்கன் எடுத்துக்கொண்டு தலைமுறை தலைமுறையாக அனுபவித்து வரும் ஸ்வதந்த்ரம் கொடுத்துவிட்டான்.

கல்கத்தாவில் மாமா வீட்டுக்கு வந்தவுடனே அவனுக்கு முதலாவது நேர்ந்தது மாமியின் பரிசயம். ஆனால் அந்தமாமி தன் குடும்பத்துக்கு இஃதோ ரநாவசியமான சேர்க்கை உண்டானதி விருந்து மிகுந்த உள்ளப் பூரிப்புக் கொண்டாளென்று சொல்ல இடமில்லை. அவளுக்கு சொந்தக் குழந்தைகள் மூன்று. அவர்களுடன் தனது சொந்தச் சட்டங்களின்படி வாழத்தக்க வண்ணமாக அவள் குடும்ப நிர்மாணம் சமைத்து வைத்திருந்தாள்.

அதனிடையே முன்பின் தெரியாத, கல்விப் பயிற்சியற்ற, பதின்மூன்று வயதுடைய

நாட்டுப்புறத்துச் சிறுவனொருவன் வந்து சலந் தநினின்றும் ஒருவிதமான ப்ரளயம் நேரு மென்ற அச்சம் அவளுக்குண்டாயிற்று. விசு வம்பர பாபுவுக்குப் பிராயம் குறைவில்லை யெனி னும் லௌகிக புத்தி அவனுக்கு ஒரு தான்ய அளவுகூட ஏற்படவில்லை.

மேலும், பதின்மூன்று அல்லது பதி னான்கு வயதுள்ள சிறுவனைப் போலே கஷ்ட மான பாரம் இந்த பூமியில் வேறு கிடையாது. அவன் அலங்காரப் பொருளுமல்லன்; பய னுடையப் பொருளுமல்லன். அவன் ப்ரீதியினை விப்பதில்லை. அவனுடைய ஸஹவாஸத்தில் இன்பமில்லை. அவன் இதழ்களில் மிஞ்சியுள்ள மழலை மொழிகள் வெறும் போலிகளாம். அவன் சொல்லும் மேதையுடைய சொற்கள் அதிக ப்ரஸங்கித் தனமாகக் கருதப்படும். அவன் எந்த வார்த்தை சொன்னாலும் அது மமதையுள்ள வாயாடித் தன்மையாகக் கணிக் கப்படும். திடீரென்று அவன் தன் ஆடை களின் அளவு போதாதபடி உயர்கிறான். இது

வும் அவனுடைய விரஸத்துக்கிடமான மமதை யாலாகிய தென்று ஜனங்கள் கருதுகிறார்கள். திடீரென்று அவனுடைய குழந்தைப் பிராயத் தின் அழகெல்லாம் மறைந்து போகிறது. அவ னுடைய தொண்டையின் இனிமை போய் விடு கிறது. இதற்காக ஜனங்கள் உள்ளூர அவ னிடம் அருவருப்புக் கொள்ளுகிறார்கள். யௌ வன தசையிலும் குழந்தைப் பிராயத்திலும் பல குறைவுகள் க்ஷமிக்கத் தக்கனவாம். ஆனால் இந்த வயஸில் இயற்கைப்படி, இன்றியமை யாததாக, நேரும் மாறுதல்கூட ஸஹிக்க முடி யாத தாகிறது.

தான் உலகத்தில் எந்த ஸ்தானத்துக்கும் பொருந்தவில்லை யென்பது அச் சிறுவனுக்கே தெரிகிறது. அதுபற்றி அவன் எப்போதும் லஜ்ஜைப்பட்டவனாகவும், தான் உயிர்த்திருப்ப தற்கே மன்னிப்புக் கேட்பான் போலவும் காணப் படுகிறான். எனினும் இந்தப் பிராயத் திலே தான் மனுஷ்ய ஹ்ருதயம் ப்ரீதியை வேண்டி அபரிமிதமான ஆவ லெய்துகிறது.

இந்தப் பிராயத்தில் யாரேனும் ஒரு நல்ல ஆத்மாவின் ப்ரீதியேனும் ஸ்நேஹமேனும் கிடைத்தால் அந்த ஆத்மாவுக்குத் தன்னை நிவேதனம் செய்து விடுகிறான். ஆனால் அவனிடம் யாரும் அன்பு செலுத்தத் துணிவதில்லை. அது ஒரு விதமான கழி யிரக்கமாய் விடுமென்று ஜனங்கள் கருதுகின்றனர்.

ஆதலால் அவனுடைய தோற்றத்திலும் சாயலிலும், உடையவனை இழந்து தெருக்களில் அலையும் ஒரு நாயின் களை ஏற்படுகிறது.

ஆகவே, அந்த நிலையில், தாயிருக்கும் வீடு தவிர மற்ற எவ்விதமான, அறிமுக மற்ற, இடமும் அச்சிறுவனுக்கு நரகம் போலாகிறது. ஸ்நேஹ லேசமேயின்றி இங்ஙனம் தன்னைச் சூழ்ந்திருக்கும் விரோதம் அவனை அடிதோறும் முள்ளைப்போலே புண்படுத்துகிறது. பெரும்பாலும் இந்தப் பிராயத்திலேதான் ஒருவன் ஸ்த்ரீயை யாதோ மேல்மண்டல மொன்றிலிருந் திறங்கிவந்த அபூர்வ ஜந்துவாகக் கரு

தத் தொடங்குகிறான். எனவே அவனுக்கு ஸ்த்ரீகளின் அசிரத்தை மிகவுந் துன்பந் தருகிறது.

மாமியின் அன்பற்ற விழிகளிலே தான் ஒரு கெட்ட க்ரஹம்போல் புலப்படுவதைக் கருதும்போதெல்லாம், அவனுக்கு அஃதே அனைத்திலும் பெரிய துக்கமாயிற்று. எப்போதேனும் மாமி தனக்கொரு வேலையிட்டால் அவன் மகிழ்ச்சி மேலிட்டால் அவள் கேட்டதினும் அதிகமாக வேலை செய்வான். கடைசியில் உள்ளம் மட்டிப் போகும்படியாகப் "போதும்; போதும்; அதில் கை வைக்காதே. உன் வேலையைப்பார். போய்ச் சற்றே வாசி." என்று அவள் சொல்லும்போது தன் அறிவுப் பயிற்சி விஷயத்தில் அவள் காட்டும் அதிக சிரத்தை அவனுக்கு மிகக் கொடுமையாகவும் அநீதியாகவும் தோன்றும்.

வீட்டுக்குள்ளே இங்ஙனம் புறக்கணிப்பு; வெளியேயும் அவன் பயமின்றி மூச்சுவிடத்

தக்க இடமே கிடையாது. இங்ஙனம் அடைபட்ட நிலையில் அவன் எப்போதும் தன் கிராமத்தைப்பற்றியே சிந்திப்பானுன்.

உஸ்ஸென்று தனது காற்ருடியைப் பறக்கவிட்டுக்கொண்டு அவன் சுற்றிய புல் தரைவெளியும்; யாதொரு நோக்கமுமின்றி அவன் வீணுகத் திரிந்து உச்ச ஸ்தாயிலே ராக ஆலாபனங்கள் செய்துகொண் டுலாவிய ஆற்றங்கரையும்; பகலில் நினைத்த பொழுதெல்லாம் தன் இஷ்டப்படிபோய்க் குதித்து நீந்தி விளையாடிய குறுகிய வாய்க்காலும்; அவன் கூட்டத்தாரும்; தோழரும்; துஷ்டத்தனமும்; விடுதலையும்; எல்லாவற்றைக் காட்டிலும் அக்கொடிய, நீதியில்லாத்தாயும்;—இவையே இரவும் பகலும் அவனேழை யுள்ளத்தைக் கவர்ந்து நின்றன.

அந்த மெலிவான, அழகற்ற, நெடிய, நாணமும் அச்சமு மிகுந்த, சிறுவனுடைய ஹ்ருதயத்தில் ம்ருகப்ரேமை போலே ஒரு தன்னையறியாத ப்ரேமை — அருகே செல்ல

வேண்டுமென்ற ஒரு விழியற்ற விருப்பம், — பார்க்க முடியாமை பற்றி ஒரு சொல்லற் கரிய தாபம்—ஆத்மாவுக்குள்ளே 'அம்மா', 'அம்மா' என்றெழும் ஒரு நாதம்—செவ்வந்திப் பொழுதில் தாய்ப்பசுவையிழந்து கூவும் கன்றின் ஒலி போன்ற நாதம் — எப்போதும் எழுந்தபடியாகவே யிருந்தது.

பள்ளிக் கூடத்திலோ எல்லாப் பிள்ளைகளைக் காட்டிலும் இவனுக்குத் தான் அதிக மந்தபுத்தி; கவனக் குறைவு. ஏதாவது கேட்டால் மறுமொழி சொல்லுவதில்லை; வெறித்து விழிப்பான்; அல்லது கொட்டாவி விடுவான். வாத்தியார் அடித்தால் சுமையின் கீழே முதுகு நோகும் கழுதையைப் போல் மவுனமாகப் பொறுத்துக்கொண்டிருப்பான். பிள்ளைகளுக்கு விளையாட்டு மணி அடிக்கும் போது அவன் போய் ஒரு ஜன்னலோரத்தில் நின்றுகொண்டு தூரத்து வீடுகளின் கூரைகளை நோக்குவான். அந்த நடுப்பகல் வெயிலில் யாதேனு மொரு வீட்டு மெத்தையின்மேல் ஒரு சிறுவனேனும்

சிறுமியேனும் விளையாடிக்கொண் டிருக்கக் கண்டால் அவன் மனந் தன்வச மழிந்துபோய் விடும்.

ஒருநாள் மிகவும் துணிவுடன் மனதை உறுதிசெய்துகொண்டு அவன் தன் மாமனிடம் போய்: — "மாமா, அம்மா ஊருக்கு நான் எப்போது போவது?" என்று கேட்டான்.

"ரஜாக்காலம் வரும்வரை காத்துக்கொண் டிரு." என்று மாமன் சொன்னான்.

பூஜா * விடுமுறைக் காலம் கார்த்திகை மாஸம் வரும். அது இன்னும் எவ்வளவோ எட்டி நிற்கிறது.

* பங்காளத்தில் நவராத்திரி பண்டிகையின் ஆரம்பத்திலிருந்து தீபாவளிக்கடுத்த அமாவாசைவரை தேவீ பூஜை நடைபெறுகிறது. இது அவர்களுக்கு ஓர் நீண்ட விடுமுறைக்காலமாகும். தமிழ் ஐப்பசி மாதம் பங்காளிகளுடைய கார்த்திகை மாதத்திற்கு ஒத்திருக்கிறது. ஆகையால்தான் தென்னாட்டில் ஐப்பசி மாதத்தில் நடைபெறும் இப் பண்டிகைகளை கார்த்திகையில் நடைபெறுவதாக மேலே கூறப்பட்டிருக்கிறது.

ஒருநாள் பாடிக் தனது புஸ்தகங்களை இழந்துவிட்டான். ஏற்கெனவே அவனுக்குப் பாடம் ஸரியாகவராது. அதனுடன் புஸ்தகங்களையும் போக்கடித்தான்; — பாடிக் ஹதமாய் விட்டான். வாத்தியார் அவனை நாள்தோறும் தமது சக்திக் கெட்டியவரை அடிக்கவும் வைய வுந் தொடங்கினர். அவனுடைய மாமன் பிள்ளைகள் அவனுடனே உறவு கொண்டாட வெட்கமுற லாயினர்;—பள்ளிக்கூடத்தில் அவனுடைய நிலைமை அத்தனை இழிவாய்விட்டது. அவனுக்கு ஒவ்வொருமுறை அவமானம் நேருமிடத்தும் மற்றப் பிள்ளைகளைக் காட்டிலும் அதிகமாக இந்தப் பிள்ளைகளே வலியச்செய்வது போலே மகிழ்ச்சி பூண்டனர்.

நிலைமை பொறுக்க முடியாததாய் விட்டது. பாடிக் தன் மாமியிடம் பெரிய குற்றவாளிபோல் வந்து நின்றுகொண்டு : — "என் புஸ்தகங்கள் கெட்டுப் போய் விட்டன." என்றான்.

மாமியின் இதழ்களில் இரண்டோரத்திலும் வெளுப்புக்கோடுகள் விழுந்தன. "நேர்த்தியான வேலை செய்தாய்; போ. உனக்கு மாஸம் ஐந்துமுறை புஸ்தகம் வாங்கிக்கொடுக்க யாராலேமுடியும்?" என்று சொன்னாள்.

மேலே பேச்சில்லாமல் பாடிக் திரும்பி விட்டான். தான் பிறருடைய பணத்தைச் செலவிட நேர்ந்ததே யென்ற எண்ணத்தால் அவனுக்குத் தாய்மீது சினம் மிகுதிப்பட்டது. அவமான உணர்ச்சியும், வறுமை யுணர்ச்சியும் அவனைப் புழுதியோடு புழுதியாக மட்டப் படுத்துவன போன்றன.

அன்று அவன் பள்ளிக்கூடத்தி லிருந்து மீண்டவுடனே அவனுக்குத் தலைநோவும் மெய்ந் நடுக்கமுந் தோன்றின. ஜ்வரம் வரப் போகிற தென்று தெரிந்து கொண்டான். தனக்கு நோய் வருதல் மாமிக்கு மிகுந்த உபத்ரவ மென்பதை எண்ணினன். அவள் தன் நோவை எத்தனை அநாவசியமான,

தீபவரவாகிய ஹிம்ஸை யென்று நினைப்பாளென்பதை யோசித்தான். இந்த விநோதமான, பயனில்லாச் சிறுவன் தான் நோய்கொண்டிருக்கையிலே தனது தாயைத் தவிர வேறு யாரிடமும் கைங்கர்யங்க ளெதிர் பார்த்தல் வெட்கமென்று கருதினான்.

மறுநாட் காலையில் பாடிக்கைக் காணவில்லை. அக்கம் பக்கத்து வீடுகளிலெல்லாம் தேடிப்பார்த்தனர். அவனுடைய ரேகையைக் கூடக் காணவில்லை.

மேலும் முந்திய இரவு முதலாகவே ஆவணி மழை கனமாகப் பொழிந்துகொண்டிருந்தபடியால், தெருக்களில் அங்கு மிங்கு மோடி நனைந்து மீண்டதைத்தவிர இந்தச் சோதனைகளில் வேறுபயன் கிடைக்கவில்லை. கடைசியாக அவன் ஓரிடத்திலும் அகப்படவில்லையென்று தீர்ந்தபின்பு விச்வம்பர பாபு போலீஸாருக்குத் தெரிவித்தார்.

அன்று பகல் முழுதுங் கழிந்தது. மாலையில் ஒரு வண்டிவந்து விசுவம்பர பாபு வீட்டு

வாயிலுக் கெதிரே நின்றது. அப்போதும் மழை விடாமல் பலமாகவே பொழிந்துகொண்டிருந்தது. அவன் உடம்பெல்லாம் சேறு போர்த் திருந்தது. முகமும் விழிகளும் செவந்திருந்தன. உடப்பு இலைபோல் நடுங்கிற்று.

அவனைக் கண்டவுடன் மாமி:—"ஊரார் குழந்தைகளுக்காக நாம் இன்னுமேன் கஷ்டத்தைத் தேடிக்கொள்ள வேண்டும்? அவனை ஊருக் கனுப்பிவிடும்." என்றாள்.

உண்மையில் அன்று பகல்முழுதும் அவள் கவலையினால் உணவின்றிக் கழித்தாள். தன் சொந்த மக்களைக்கூட மிகவும் சிடுசிடுத்துக் கொண்டிருந்தாள்.

இவள் சொல்லைக் கேட்டவுடனே பாடிக் சக்ரவர்த்தி வாய்விட்டுக் கோவென் றழுது கொண்டு:—"நான் என் தாய் வீட்டுக்குப் போகும் வழியில் என்னை படக்கிக் கொண்டு வந்து விட்டார்கள்." என்றான்.

இவனுடைய ஜ்வரம் பயங்கரமாக மிகுதிப்பட்டது. இரவு முழுமையும் ஸந்நிபாதம்—

(ஜன்னி). விசுவம்பரபாபு ஒரு வைத்யரை அழைத்து வந்தார். பாடிக் ஒரு முறை தன் ரக்த வர்ணமுள்ள விழிகளைப் பாக்கத்திறந்து வெறிகொண்ட நோக்குடன் உத்தரத்தையும் பாய்க்கட்டைகளையும் நோக்கினன்.

அப்பால்:,—"மாமா, ரஜாக்காலம் வந்து விட்டதா?" என்று கேட்டான். விசுவம்பர பாபு தன் கண்களைக் கைத்துணியால் துடைக்துக்கொண்டு, பாடிக்கின் வற்றிய, தபிக்கிற கையைத் தன் கையாலே அன்புடன் பற்றிக் கொண்டு மிகவும் நெருக்கமாக உட்கார்ந்தார்.

பாடிக் மறுபடி ஜன்னியில் புலம்பத் தொடங்கி விட்டான். "அம்மா, என்னை அடிக்காதே, அம்மா, என்னை நம்பு; நான் ஒரு பிழையும் செய்யவில்லை." என்றான்.

மறுநாள், சிறிது நேரம் அவனுக்கு ப்ரக்ஞை திரும்பி வந்தது. அறையைச் சுற்றி ஆவலுடன் எதையோ எதிர் பார்ப்பவன் போலே நோக்கினன்.

பின்பு நிராசை யுடையவனுய்ப் படுக்கை மீது திரும்பிச் சுவரைநோக்கி மவுனமாகப் படுத்துக் கொண்டான். அவன் மனதிலுள்ளதைத் தெரிந்துகொண்டு, விசுவம்பர பாபு:— "பாடிக், உன் மாதாவை வரச்சொல்லி ஆளனுப்பி யிருக்கிறேன்" என்று அவனுடைய காதோரமாகச் சாய்ந்து மெதுவான குரலில் சொன்னர்.

மறுநாளுங் கழிந்துபோயிற்று. வைத்யர் மிகவும் வருத்தமும் கவலையுமுடைய விழிகளுடன் நோயாளியின் ஸ்திதி மிகவும் கெட்டிருக்கிறதென்று சொன்னர்.

விசுவம்பரபாபு, கட்டிலின்மேலே, பக்கத்தில் மங்கலாக எரியும் விளக்கொன்றை வைத்துக்கொண்டு, ஒவ்வொரு க்ஷணமும் பாடிக்கின் பையனுடைய தாயார் வரவை எதிர்பார்த்தவராய் வீற்றிருந்தார்.

பாடிக் நீராவிக் கப்பல்களில் லஸ்கர்கள் பாடுகிற ராகத்தில்:— "ஒரு பாகத்துக்கு

மேலே ஆழம். இரண்டு பாகத்துக்கும் மேலே ஆழம்; மே...லே...லே—லே" என்று பாடத் தொடங்கினன். கல்கத்தாவுக்கு வரும்போது அவன் சிறிது தொலை ஸ்டீமரில் யாத்திரை செய்தான். அந்த ஸ்டீமரில் லஸ்கர்கள் ஒரு கயிற்றைத் தண்ணீருள்விட்டு ஆழம் பார்த்த படியே அந்த அளவுகளை உரத்தகுரலில் பாட்டுப்போலே ஒதிக்கொண்டும் வந்தனர். அவர்களை அபிநயித்து பாடிக் துக்கக் குரலில் பாடினன். அந்தச் சிறுவன் கயிற்றல் எங்குந் துழாவினன். ஆனல் அவன் யாத்திரை தொடங்கிய 'கரையற்ற கடலின் ஆழத்தை அவன் எங்குமே காணவில்லை.

திடுக்கென்று பாடிக்கின் தாய் அறைக்குள் புயற்காற்றுப்போலே பாய்ந்தோடி வந்து கூவி யழத்தொடங்கினள். விசுவம்பர பாபு மிகுந்த யத்தனத்தால் அவளைச் சற்றே ஆற்றினர். அவள் படுக்கையின்மீது குப்புற விழுந்தாள்.

"பாடிக்! ஓ! பாடிக், என் ஆசை, ஆசை, ஆசைக் குழந்தாய்!" என்று கூவினாள்.

ஸஹஜமான குரலுடன் பாடிக்:—"இம்" என்றான்.

தாய் மறுபடி "ஓ, என் பாடிக், என் உயிர்ச் செல்வமே" என்று விம்மினாள்.

அப்போது பாடிக் மிகவும் மெல்லத் திரும்பி யாரையுமே நோக்காமல் மெல்லிய குரலில்:—"அம்மா, எனக்கு ரஜா கிடைத்து விட்டது. வீட்டுக்குப் புறப்படுகிறேன்" என்றான்.

"ரஜாக்காலம்" என்ற கதை

முற்றிற்று.

"க்ஷுதித பாஷாணம்"

அல்லது

பசிகொண்ட கற்கள்.

என் உறவினனும் நானும் நவராத்திரிக்காக ஊர் சென்று கல்கத்தாவுக்குத் திரும்பி வந்துகொண்டிருக்கையில் ரயிலில் அந்தமனுஷ்யனைச் சந்தித்தோம். அவன் நடை உடை பாவனைகளிலிருந்து அவனை ஒரு மேல்நாட்டு மகம்மதியன் எனக் கொண்டோம். ஆனால் அவன் பேச்சைக் கேட்டபோது மாத்திரம் ஒருவித சந்தேகம் உதித்தது. எல்லாம் ஆக்கி வைக்கும் கடவுளும் தான்செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் அவன் அபிப்பிராயத்தைக் கேட்டுக்கொண்டேதான் செய்தான் என்று

கருதலாப்படி அவன் எந்த விஷயத்தைப்பற்றியும் தெளிவாகவும் தீர்மானமாகவும் பேசினன். நாங்கள் கேள்விப்படாத மறைந்து நின்ற சக்திகள் வேலெசெய்து வருகின்றன, ருஷ்யர்கள் நம் நாட்டை நெருங்கிவிட்டார்கள், ஆங்கிலர்கள் ஆழ்ந்த அறியக்கூடாததான தந்திரங்கள் கைக்கொண்டுள்ளார்கள், சுதேசத் தலைவர்களுள் குழப்பம் தலைக்கேறி விட்டது என்ற இதுமுதலான செய்திகளை நாங்கள் அறியாததால் மிகவும் விசுவாசத்துடன்கேட்டு நின்றோம். புதிதாக வந்துசேர்ந்த எங்கள் நண்பனே கள்ளச்சிரிப்பு சிரித்துக்கொண்டே * There happen more things in heaven and earth, Horatio, than are reported in your newspapers. என்றான். இதற்கு முன் நாங்கள் வீட்டைவிட்டு வெளிக்கிளம்பியவர்கள் இல்லையாதலால், அவன் நடத்தை எங்களை நாவெழாதபடி பிரமிக்கச் செய்தது. எவ்வளவு அற்ப

* ஹொரேஷியோ! உங்கள் பத்திரிகைகளில் வெளிப்படாத சம்பவங்கள் பல விண்ணிலும் மண்ணிலும் நடந்தேறுகின்றன.

மான சம்பவமாய் இருந்தாலும் சரி, அவன் அதற்கேற்ற சாஸ்திரீகமான ஆதாரங்கள் எடுத்துக் காட்டுவான், அதன் சம்பந்த வேதவாக்கியங்களுக்கு வியாக்கியானம் செய்வான். அல்லது எதாவதொரு பாரசீகக் கவியின் சில அடிகளைப்பாடிக் காட்டுவான். சாஸ்திரம் வேதம் பாரசீக பாஷை முதலியன நாங்கள் அறியமாட்டோமாதலால் அவன்மீது நாங்கள் கொண்டிருந்த நன்மதிப்பு ஏறிக்கொண்டே வந்தது. "தியசாபிகல்" சங்கத்தைச் சேர்ந்தவனான என் உறவினனும் ஏதோவொரு வசீகர சக்தியாலோ அல்லது வேறு மாந்திரீக சக்தியாலோ ஒளியுருவத்தாலோ அல்லது அதுபோன்ற வேறு எதனாலோ அசாதாரணமானதொரு சக்தியினால் அறிவூட்டப்பட்டவன் இவன் என முற்றிலும் நம்பிவிட்டான். பக்தி பரவசமான மனத்துடன் அந்த அசாதாரணமான மனிதனது வாயிலிருந்துவந்த ஒவ்வொரு சிறுவசனத்தையும் கவனத்துடன் கேட்டான். ரகசியமாக அவன் சம்பாஷணையைப்பற்றி சில குறிப்பு

களையும் வரைந்துகொண்டான். அந்த அசாதாரணமான மனுஷ்யன் இதைக்கண்டு சிறிது சந்தோஷங் கொண்டான் என்றே நான் நினைக்கிறேன்.

நாங்கள் வண்டி மாறவேண்டிய இடத்திற்கு வந்ததும், நாங்கள் ஏறவேண்டிய வண்டித்தொடரை எதிர்பார்த்து "காத்திருக்கும் அறை"யில் கூடினோம். அப்பொழுது இரவு பத்துமணி ஆய்விட்டதாலும், வழியில் ஏதோ சரியில்லாததால் வண்டிவர வெகுநேரமாகும் என்று நாங்கள் கேள்வியுற்றதாலும், மேஜையின்மீது என் மெத்தையைவிரித்து சுகமாக ஒரு தூக்கம் போடலாம் எனப் படுக்கப் போனேன். அப்பொழுது அந்த அசாதாரணமான மனுஷ்யன் மெள்ளத் தன் கதையை ஆரம்பித்தான். அன்றிரவு நான் நித்திரை பெறவில்லை.

"இராஜ்ய நிர்வஹ விஷயங்களில் இரண்டொரு கேள்விகளைப்பற்றி எங்களுள் நேர்ந்த அபிப்பிராய பேதத்தினால் ஜூனகாடில் நான்

கொண்டிருந்த வேலையை விட்டுவிட்டு, ஐதரா பாத் நைஜாம் அவர்களது சர்க்காரில் அலுவல் பார்க்க அமர்ந்ததும், அவர்கள் என்னைத் தக்க தோர் இளைஞன் எனக்கண்டு "பரீச்" நகரத் தில் பஞ்சுவரி வசூலிக்கும் தண்டலதிகாரியாக நியமித்தார்கள்.

பரீச் என்பது ஒரு அழகியவூர். தனித்து நின்ற குன்றுகளின் கீழ்ப்புறத்தே தோப்பு களின் வழியாக தேர்ச்சிபெற்ற ஒரு ஆடற் சிறுமிபோலே கற்கள் செறிந்தவழியே கலகல வென்று பேசிக்கொண்டும், கூழாங்கற்கள்மீது மழலை மொழிந்துகொண்டும் * சுஸ்தா நதி அங்கு ஓடும். ஆற்றிற்குமேலே நூற்றுக்கணக் கான படிக்கட்டுகள். அதன்மேல் ஆற்றங் கரையோரத்திலே, குன்றுகளின் அடியிலே தனித்து நிற்கும் ஓர் சலவைக் கல்லாலாகிய மாளிகை. அதைச் சுற்றிலும் மனுஷ்யவாசமே

---

* சுஸ்தா என்பது 'ஸ்வச்ச தோயா' என்னும் சமு ஸ்கிருதத்தின் திரிபு.

இல்லை. ஊரும், பரீச்சின் பருத்திப் பண்ட சாலையும் தூரத்தி லிருந்தன.

சுமார் இருநூற்றைம்பது வருடங்களுக்குமுன் "இரண்டாவது மகம்மது ஷா" இந்தத் தனிமையான மாளிகையைத் தனது இன்பத்திற்காகவும் பெருமைக்காகவும் கட்டினான். அவன் காலத்தில் இம் மாளிகையில் யந்த்ரதாரைகளின் வழியாகப் பனிநீர் பொழிந்துகொண் டிருந்தது. பனிநீரால் குளிர்ந்த அறைகளின் சலவைக்கல் தரையிலே பாரசீக யுவதிகள் ஸ்நாநஞ் செய்வதற்காகக் கூந்தலை யவிழ்த்துக்கொண்டும், தொட்டியிலுள்ள தெளிவான தண்ணீரில் தம்மெல்லிய ஆபரணங்களற்ற பாதங்களை அலைத்துக்கொண்டும் உட்கார்ந்து, வீணையின் இன் இசையோடு இழைந்த குரலில் சில 'கஜல்' களைப் பாடுவர்.

அந்த யந்த்ரதாரைகள் இனிப் பனிநீர் பொழிந்து நில்லா. பாடல்களும் ஓய்ந்து விட்டன. பனிக்கட்டிபோன்ற வெண்ணிறம் பொருந்திய பாதங்களும் அந்தக் குளிர்ந்த சலவைக்

கற்களின்மீது அணிநடை கொள்ளமாட்டா. இப்பொழுது அந்த மாளிகை இனியார் தோள் துறந்து தனியில் தவிக்கும் எம்போன்ற தண்டலதிகாரிகளுக்கு உற்றதொரு இருப்பிடமாக ஆயிற்று. என் கச்சேரியிலிருந்த கிழ குமாஸ்தாவான கரீம்கான் என்பவன் என்னை அங்கே வசிக்கவேண்டாமென்று வெகுவாக எச்சரிக்கைசெய்தான். அவன் சொன்னான், "உங்களுக் கிஷ்டமானால் பகற்பொழுதை எல்லாம் அங்கு கழியுங்கள். இராவுமாத்திரம் அங்கே தங்கவேண்டாம்" என்று. நான் அதை கவனிக்கவே இல்லை. பரிகாசமாகச் சிரித்தேன். வேலைக்காரர்கள் பொழுது போம்வரை அங்கே உழைத்துவிட்டு இரவு வீட்டிற்குச் செல்வதாகச் சொன்னார்கள். அதற்கு நான் சம்மதித்தேன். இருண்டபின் கள்வர்கள்கூட அதன் சமீபம் வருவதில்லை. அந்தவீடு அவ்வளவு கெட்டபெயர் பெற்றிருந்தது.

முதலில் மனுஷ்ய சஞ்சாரமற்ற அந்த மாளிகையின் தனிமை கனவில் தோன்றும்

ஒரு கொடிய உருவம்போல என்மனத்தைத் தகர்த்தது. பகல் முழுவதும் வெளியே தங்கி, மெய்சோர நெடுநேரம் உழைத்து, இரவில் களைப்புற்று வீட்டிற்குத் திரும்புவேன். வந்ததும் மெத்தையில் படுத்துத் தூங்கி விடுவேன்.

ஒருவார காலம் செல்லுமுன் அந்த இடம் என் மனத்தின்மீது ஏதோ ஒருவிதமான வசிகர சக்தியைச் செலுத்த ஆரம்பித்தது. அது எப்படி என்று சொல்லவாவது, ஜனங்களை அதில் நம்பிக்கை கொள்ளும்படி செய்யவாவது என்னல் முடியாது. ஆனல் அந்த வீடு முழுவதும் ஓர் உயிர்ப் பிராணிபோலே மெள்ளத் தன் ஜாடராக்னியால் என்னை ஜீரணித்துக்கொண்டே இருப்பதாக எனக்குப்பட்டது.

ஒருவேளை இந்த வியாபாரம் நான் அந்த வீட்டில் கால்வைத்தது முதலாகவே ஆரம்பித்திருக்கலாம். ஆனல் நான் அதை உணர்ந்த தினம் மாத்திரம் நன்ருக என் நினைவில் இருக்கிறது.

அப்பொழுது கோடையாரம்பம். வியாபாரம் ஒய்ந்திருந்ததால் எனக்கு வேலை இல்லை. சூர்யாஸ்தமனத்துக்குச் சற்று முந்தி படிக்கட்டுகளின் கீழே ஜலத்தின் ஓரத்திலே ஒரு கைவைத்த நாற்காலியிலே நான் உட்கார்ந்து கொண்டிருந்தேன். சுஸ்தா நதி வற்றி ஜலங் குறைந்திருந்தது. எதிர்ப்புறத்திலே அகன்ற மணல் தரை அந்திக்கால ஒளிகொண்டு பொன்னிறஞ் செய்தது. இந்தக் கரையிலே தெளிந்த ஓடையிலிருந்த கூழாங்கற்கள் வைரங்கள்போல் மின்னின. மெள்ளத் தவழ்ந்ததொரு பூங்காற்று பக்கத்துக் குன்றுகளில் வளர்ந்த நறுமணப் புதர்களினின்றும் எழுந்த தாங்கவொண்ணாத வாசனையைச் சுமந்து வந்தது.

குன்றுகளினிடை கதிரவன் மறையவே பகலரங்கத்தில் கருப்புத்திரை விழுந்ததுபோலாயிற்று. நடுவிலிருந்த குன்றங்கள் அந்திப் பொழுதில் ஒளியும் இருளும் ஒன்றாகக் கலக்கும் நேரத்தைக் குறைத்துவிட்டன. சவாரி செய்ய வெளியே போகலாம் என்று நினைத்து

எழ இருந்தேன், பின்னல் படிக்கட்டுகளின் வழியே வரும் ஒரு காலடி சப்தம் காதிற் பட்டது. திரும்பிப் பார்த்தேன். ஒருவரும் அங்கில்லை.

ஒருமாயையின் கூத்து இது என்று கருதி என் ஆசனத்திலே நான் அமர, அநேகர் படிக் கட்டுகளின் வழியே வேகமாக இறங்கிவருவது போன்றதொரு அரவம் கேட்டேன். பீதி யோடுங்கூடிய அப்ராக்ருதமான மனக்களிப்பு ஒன்று என்னுள் பொங்கி என் மெய்யகங் கொண்டது. என்முன் யாதொரு உருவமும் தோன்ருவிடினும், அக்கோடை மாலையிலே சுஸ்தா நதியில் நீராடிச்செல்ல படிகளின் வழியே இறங்கிவரும் நகைசப்தம் கூடிய மக ளிர் கூட்டம் ஒன்று என்முன்னே நிற்பதாக எனக்குப்பட்டது. பிரகிருதி தேவியின் மௌ னத்தைக் கலைக்க அந்த பரந்த நிலத்திடையா வது, ஆற்றிலாவது, மாளிகையிலாவது சப்தம் என்பதே இல்லை. ஆனல், என்னை கவனியா மலே ஆற்றைநோக்கி ஒருவரை யொருவர்

விளையாட்டாகத் தொடர்ந்து, ஒரு நூறு கற்களின்வழியே பாய்ந்து செல்லும் தனியருவி ததும்பி வீழும் நாதம்போல உல்லாசமாகச் சிரித்துச்செல்லும் யுவதிகளின் இனிய நகைப்புச்சத்தம் மாத்திரம் என் செவி வீழ்ந்தது. அவர்கள் என் கண்களிற் படாதது போலவே நானும் அவர்கள் கண்களுக்குப் புலனாகாதிருந்தேன் போலவும். நதி முழு மௌனம் உற்றிருந்தது. ஆனால் அதன் அசைவற்ற தெளிந்த ஆழமற்ற நீர்நிலை வளைகள் ஒலிக்கும் பல கைகளால் திடீரென்று அலைக்கப்பட்டதாயும் அந்தச்சிறுமிகள் நகைத்துக் கொண்டே ஒருவரை யொருவர் தண்ணீரால் மோதிக்கொண்டிருப்பதாயும், அவ்வழகிய நீச்சல்காரரின் பாதங்கள் முத்தம் பொழிவதுபோல மெல்லிய அலைகளை யெழுப்பிச் செல்வதாயும் என் மனதிற்பட்டது.

என் இதயத்திலே ஒருவித ஆவேசம் உண்டாயிற்று. அது பயத்தினா லென்றாவது அல்லது சந்தோஷத்தினாலென்றாவது எதனால்

உண்டாயிற்று என்று என்றால் சொல்லமுடியாது. அவர்களை நன்றாகக் காணவிரும்பினேன். ஆனால் ஒன்றும் என்கண்ணுக்குத் தோன்றவில்லை. சற்று கவனமாக மட்டும் நான் காது கொடுத்துக் கேட்டால் அவர்கள் சொல்லியவற்றையெல்லாம் நான் கிரஹித்துக் கொள்ளக்கூடும் என்று கருதினேன். ஆனால் எவ்வளவோ ஜாக்கிரதையாக செவிசாய்த்துப் பார்த்தும் தோப்பின் இடையிருந்த புட்களின் அரவமன்றி வேறொரு சப்தமும் எனக்குக் கேட்கவில்லை. என்முன் சென்ற இருநூற்றைம்பது வருடகாலமும் ஒரு கருப்புத்திரையாக மாறி மறைத்து நின்றாற்போ லிருந்தது. அதன் உட்புறம் வீற்றிருந்த சபையார் யாவரும் இருளால் முற்றிலும் சூழப்பட்டிருந்த போதிலும் மெள்ள அத்திரையின் முனையை சற்றுத்தூக்கி உள்ளே எட்டிப் பார்க்க விரும்பினேன்.

சஹிக்கக்கூடாத அம்மாலைக் காலத்தின் மௌனம் திடீரென்று வந்த ஒரு பெருங்காற்

3649

றினுல் கலேக்கப்பட்டது. அந்தக் காற்றில் சுஸ்தா நதியின் அமைதியும் கலேவுற்றுக் குழம்பி ஒரு அப்சரஸ்ஸின் கூந்தலேப்போல அலேதந்தது. அந்தியிருளால் மூடப்பட்டிருந்த வனத்திடையினின்றும் அவை ஓர் இருண்ட கனவிலிருந்து விழித்தெழுந்தாலென்ன ஒரு வித மர்மர த்வனி அதே சமயத்தில் வந்தது. அது கனவோ அல்லது நனவுதானே! இருநூற் றைம்பது வருஷத்திற்கு முன்னிருந்த ஒரு பழைய உலகத்தினின்றும் ஒரு நிமிஷநேரம் பிரதிபிம்பித்துக் காட்டப்பட்ட அவ்வழகிய காக்ஷி கானல் நீரென மறுகணம் மறைந்து விட்டது: ஊரத்த குரலற்ற நகையுடனும் கடிய செலவுடனும் கண்ணிற்படாத பாதங்களால் என்னேக் கடந்து சென்று நதியில் வீழ்ந்தாடிய அம்மாயா உருவங்கள் நனேந்த தம் புடைவை களேப் பிழிந்துகொண்டு திரும்பிப்போகவில்லே. காற்றினுல் கொண்டு செல்லப்பட்ட மணம் போலே சாத்காலத்து ஒரு சிறுமூச்சிலே அவர் கள் ஓடிவிட்டார்கள்.

என் தனிமையைத் தனக்கு அநுகூலமாகக்கொண்டு கவிதாதேவி தான் இம்மாதிரி என்னை மோசம் செய்துவிட்டாளோ என்று வெகுவாக நான் பயந்துவிட்டேன். அந்த சூனியக்காரி ஒருவேளை பஞ்சுவரித் தண்டலால் வயிறுவளர்க்கும் என்போன்ற ஏழையை வேண்டுமென்றே தொந்திரவுக் குள்ளாக்கவந்திருக்கலாமென்றே நம்பினேன். இன்று நன்ருக சாப்பிடுவதெனத் தீர்மானித்துவிட்டேன். காய்ந்த வயிறே இத்தகைய வியாதிகளுக்கு ஏற்ற ஆவாசம் ஆதலால். என் சமையற்காரனைக் கூப்பிட்டு மசாலை சாமான்களும் நெய்யும் நிரம்பப்பெய்து கனமான 'மொகலாயி' உண்டியொன்று தயாரிக்கும்படி உத்தரவிட்டேன்.

மறு நாட்காலை இச் சம்பவம் முழுவதும் வேடிக்கையானதொரு பிராந்தி என்று எனக்குத் தோன்றியது. சந்தோஷ சித்தனுய் துரைமாரைப்போலே ஒரு 'ஸோலா' டொப்பியை அணிந்துகொண்டு என் வேலையைப் பார்க்க வேண்டி வண்டியிலேறிச் சென்றேன். அன்று

நான் என் மும்மாத 'ரிப்போர்ட்டை' முடிக்க வேண்டியவ ஞதலால் நேராஞ்சென்றே வீட்டிற்கு வருவதாக இருந்தேன். ஆனுல் இருளாகும் முன்னமேயே—எதனுலேயோ தெரியவில்லை—நான் என் வீட்டண்டை இழுக்கப்பட்டேன். அவர்கள் யாவரும் எனக்காகக் காத்திருப்பதாகவும், நான் இதற்குமேல் தாமதிக்கக் கூடாதெனவும் எனக்குத் தோன்றியது. என் 'ரிப்போர்ட்'டை முடிக்காமலே எழுந்தேன். தொப்பியைப் போட்டுக்கொண்டேன். என் வண்டியின் சத்தத்தினுல் இருண்ட சஞ்சாரமற்ற தனிவழியை ஒலிக்கச் செய்து கொண்டே குன்றுகளின் கோரமான சாரலில் நின்ற என் மாளிகையைச் சென்றடைந்தேன்.

முதன்மாடியில் அந்தப் படிகள் மூன்று வரிசைத் தூண்களின்மீது நின்ற சித்திரவேலை நிரம்பிய கமான்களின்மீது பாவிய விதானத்தையுடையதாய், இரவும் பகலும் தனது பாரிய தனிமையைத் தாங்கா தரற்றி நிற்கும் ஓர் விசாலமான மண்டபத்திற்குக் கொண்டுவிட்

டன. அப்பொழுது தான் பகல் ஒடுங்கிற்று. தீபங்கள் இன்னமும் ஏற்றப்படவில்லை. நான் கதவைத்திறந்ததும், அங்கு கூடியிருந்த ஜனங்கள் யாவரும் தப்பியோடக் கருதி கலவரத்துடன் பிரிந்து கதவுகள் ஜன்னல்கள் தாழ்வாரம் அறைகள் முதலியவற்றின் வழியாகப் பறந்து செல்வது போன்றதொரு பெரிய சப்தம் கேட்டது.

ஒருவரையும் அங்கு காணாமையின் நான் திகைத்து நின்றேன். மிஞ்சியதொரு களிப்பினால் என் மெய் மயிர்க்கூச் செறிந்தது. கால இடையால் தேய்ந்தழிந்த மெல்லியதொரு அத்தரின் மணமும், மற்றைய வாசனைத் திரவியங்களின் நறுநாற்றமும் என்நாசியில்நின்றது. விசாலமான, மக்கள் வழக்கற்ற அந்த மண்டபத்திலே, அந்த பழைய கல்தூண்களின் வரிசையில் இடையே இருட்டிலே நின்றுகொண்டு கவனித்தேன். சலவைக்கல் தரையில் யந்த்ர தாரையின் வழியாக நீர் ததும்பி வீழும் சப்தமும், வீணையில் நின்ற புதியதொரு குரலும், ஆபரணங்களின் கலகலப்பும், சதங்கைகளின்

கலீர் கலீரொன்ற ரவமும், நேரத்தைத் தெரிவித்துக் கொண்டிருந்த மணிகளின் ஓசையும், தூரத்திலிருந்துவந்த 'நகபத்' தின் முழக்கமும், காற்றி லசைந்த கண்ணுடி லஸ்தர்களாலுண்டாகிய மெல்லிய நாதமும், தாழ்வாரங்களில் தொங்கி நின்ற கூடுகளிலிருந்த 'புல்புல்' களின் இனிய கானமும், துறவுகளினின்று நாரைகள் அகவி நிற்கும் இறுமென் குரலும், யாவும் என்னைச் சுற்றிலும் திவ்யமானதொரு இன்னிசை பாடிநின்றன.

பின்னர் கைக்கும் கருத்திற்கும் கிட்டாத அலௌகிகமான இக்காக்ஷியே இவ்வுலகத்தில் சாசுவதமானதென்றும் எஞ்சிய யாவும் வெறும் கனவே என்றும் கருதும்படி அவ்வளவாக நான் அதன் மந்திரசக்தியில் மயங்கிவிட்டேன். அதாவது காலஞ்சென்ற இன்னூர் மூத்தகுமாரரான ஸ்ரீஜத் இன்னூர் அவர்கள் பஞ்சுவரித் தண்டலதிகாரியாக வேலை பார்த்து ரூபாய் சுஙo சம்பளம் பெற்று தினமும் குறுகிய சட்டை கரிய டொப்பி முதலி

யன வணிந்து என் குதிரைவண்டியில் என் அலுவலிடத்திற்குச் சென்று கொண்டிருந் தேன் என்ற இவையாவும் மிகவும் நகைப்புக் குரியதாக எனக்குப்பட்டது. அந்த மௌன மண்டபத்தில் இருட்டிலே நின்று குதிரை கனைப்பது போலே கடகட வென்று சிரித் தேன்.

அந்தசமயத்தில் என் வேலைக்காரன் ஒரு மண்ணெண்ணெய் விளக்கை யேற்றிக்கொண்டு அங்கே வந்தான். அவன் எனக்குப் பைத்தி யம் பிடித்துவிட்டதென நினைத்துவிட்டான் போலும். ஆனால் நான் உண்மையில் காலஞ் சென்ற இன்னார் குமாரர் ஸ்ரீஜத் இன்னார் தான் என்றும், இவ்வுலகிற்கு உள்ளேயோ அல்லது வெளியிலேயோ கண்ணிற்படாத யந்த்ரதாரை கள் நீர் பொழியவும், கண்ணிற்படாத விரல்கள் திவ்ய வீணையின் நரம்புகளை இசைக்கவும், எழு கின்றதோர் நித்ய கீதம் திகழும்பிரதேசம் உள் ளதோ இல்லையோ என்பது நம் பெரியகவிகளும் சிறியகவிகளுமே சொல்ல வல்லாராயினும், நான்

"பரீச்" நகரத்தில் பஞ்சுவரித் தண்டல் மேற் கொண்டு மாதம் ரூபாய் சரு0 சம்பளமாகப் பெற்றுவந்தேன் என்பது மாத்திரம் உண்மை யென அறிந்தேன். மண்ணெண்ணெய் விளக்கு எரிந்து நின்ற எனது விடுதியில் மேஜைமீ திருந்த சமாசாரப் பத்திரிக்கையை வாசித்துக் கொண்டிருந்தவன் இந்த ஆச்சரியமான மாயா விலாசத்தை நினைத்துச் சிரித்தேன்.

பத்திரிகையைப் படித்து முடித்ததும், என் "மொகலாயி" சாப்பாட்டை உட்கொண்டு விளக்கை நிறுத்திவிட்டு பக்கத்திலிருந்த என் படுக்கையிற்போய் படுத்தேன். ஆல்லி மலைக்கு மேலே, மரங்களின் இருண்ட நிழலின் வழியே ஒரு பிரகாசமான நக்ஷத்திரம் திறந் திருந்த சாளரத்தின் வழியாக லக்ஷக்கணக் கான மைல்களுக் கப்பாலிருந்து எளியதொரு ஜமாபந்தி மெத்தையில் படுத்திருந்த 'கலெக் டர்' துரையவர்களை வெறித்து நோக்கிற்று. விந்தைக்குரிய இந்த சிந்தையில் விழுந்த நான் எப்பொழுது நித்திரை கொண்டேன் என்று

வது அல்லது எவ்வளவு நாழிகைத் தூங்கினேன் என்றாவது அறியமாட்டேன். திடீரென்று ஒருவித சம்பிரமத்துடன் எழுந்தேன். யாதொரு சப்தமும் என்செவியிற் படவில்லை. வேற்று மனிதனையும் அங்கு காணோம். குன்றத்தின்மேல் நின்ற அந்த வாலிய விண்மீன் மாத்திரம் மறைந்துவிட்டது. புதிதாக வந்த சந்திரனின் தண்ணொளி தனது நடத்தையைக் கண்டு தனக்குள்ளாக வெட்கமுறுவதுபோலே திருட்டுத்தனமாகத் திறந்து நின்ற ஜன்னல் வழியே வந்துகொண்டிருந்தது.

விழித்துப் பார்த்தேன் ஒருவரும் கண்ணிற் படவில்லை. ஆனால் யாரோ ஒரு ஸ்திரி என்னை மெள்ள எழுப்புவதாக எனக்குத்தோன்றிற்று. நான் விழித்துக்கொள்ளவே அவள் ஒருவார்த்தையும் சொல்லாது மோதிரங்கள் செறிந்த தனது ஐந்து விரல்களாலும் என்னை ஜாக்கிரதையாகப் பின் வரும்படி அழைத்தாள். நான் சத்தப்படுத்தாமல் எழுந்திருந்தேன். அந்தப் பாழடைந்த மாளிகையிலே துயிலும் ஒலியும்

எழும் மாறொலியும் வதியும் அதன் எண்ணில்லாத அறைகளிலே என்னையன்றி வேறொருவரும் இல்லையாயினும், நான் எடுத்துவைக்கும் ஒவ்வொரு அடியிலும் யாரேனும் விழித்துக் கொள்வார்களோ என்று அஞ்சினேன். அந்த மாளிகையின் அறைகள்யாவும் மூடப்பட்டே இருந்தன. அவற்றின் ஒன்றனுள்ளாவது நான் சென்றதில்லை.

எங்கே என்று சொல்லமுடியாது மூச்சுக் கூடவிடாமல் மெதுவாக நடந்து என் உருவற்ற வழிகாட்டியைப் பின் தொடர்ந்தேன். எல்லையற்ற இருண்ட குறுகிய வழியாகவும், நீண்ட தாழ்வாரங்களின் வழியாகவும், நிச்சப்தமான பேட்டி யறைகள் வழியாகவும், நெருங்கிய மறைவான இருட்டறைகள் வழியாகவும் நான் சென்றேன்.

என் அழகிய வழிகாட்டியை நான் கண்ணுற் காணமுடியாது போயினும் அவள் உருவம் என் மனக்கண்ணுக்குத் தோன்றாதிருக்கவில்லை அவள் ஓர் அராபிச்சிறுமி,பளிங்குபோலே

வண்மையும் மழமழப்பும் பொருந்திய கைகள் அவளது தளர்ந்த அங்கியி னுள்ளேயிருந்து வெளிவந்தன. அவள் அணிந்திருந்த குல்லா யிலிருந்து விழுந்தது ஓர் மெல்லிய முகதிரை. இதோடு அவள் இடையில் ஒரு வளைவான கத்தியைச் செருகியிருந்தாள். கற்பனு லோ கத்திலிருந்து அரபிக்கதைகள் ஆயிரத்தொன்ற னுள் ஒன்று எனக்காகத் தவழ்ந்து வந்தது போலேயும், அன்று நள்ளிரவிலே அபாயத் தோடுங் கூடியதொரு சங்கேத இடத்திற்குத் தூங்கிநின்ற பாக்தாதின் இருண்ட சிறிய தெருக்களினூடே என்வழியே நான் நடப்பது போலேயும் தோன்றியது எனக்கு அவளைக் கண்டதும்.

கடைசியாக, என் அழகிய வழிகாட்டி ஒரு கருநீலத் திரையின் முன்னே திடீரென்று நின்ருள். கீழிருந்த ஒன்றைச் சுட்டிக்காட்டி ருள். அங்கு உண்மையில் ஒன்று மில்லை. ஆனுல் பயத்தினுல் நான் திடுக்கிட்டேன். என் நாடியில் ரக்தம் உறைந்து போய்விடும்போ

விருந்தது. அந்தத் திரையினடியிலே தரையிலே பயங்கரமான "நீக்ரோ" ஜாதிய அலி ஒருவன் பட்டுடை பூண்டு உருவிய கத்தியொன்றைத் தொடைமீது வைத்தபடியே கால் நீட்டி யுறங்குவதாக நான் நினைத்தேன். என்னுடன் வந்த அழகி சத்தப்படுத்தாமல் அவன் காலைத் தாண்டிச்சென்று ஜவனிகையின் ஒருபுறத்தை எனக்காகத்தூக்கிநின்றாள். பாரசீகக் கம்பளம் விரிக்கப்பட்ட அறையின் ஒரு பாகம் மாத்திரம் க்ஷணநேரம் நான் காணக்கூடியதாயிருந்தது. ஒரு மெத்தையில் யாரோ ஒருத்தி உட்கார்ந்திருந்தாள். நான் அவளைப் பார்க்கமுடியவில்லை. கிச்சிலிவர்ணமான பட்டு ஜமக்காளத்தின்மேல் தளர்த்தியான குங்கும வர்ணம் வாய்ந்த பைஜமாக்களின் வழியே வெளிவந்த ஜோடணிந்த இரண்டு அழகிய பாதங்களைமாத்திரம் நான் கண்டேன். ஒரு பக்கத்திலே நீலநிறக் கண்ணாடித்தட்டிலே சில இலந்தை, பேரி, கிச்சிலி முதலிய கனிகளும் ஏராளமான கொடிமுந்திரிக் குலைகளும், இர

ண்டு சிறு கிண்ணங்களும், பொன்னிறமான நீர் இறுக்குங் குழாய் ஒன்றும் விருந்தாளி ஒருவனை எதிர்பார்த்தவாறு நின்றன. உள்ளே எறிந்த தூபத்திரவியங்களினின்றும் எழுந்த வாசனை மிகுத்த மயக்கந் தரும் புகை என் உணர்ச்சியைப் பறிகொண்டது.

நடுக்கமுற்ற நெஞ்சத்தோடே அக்காவலாளனது நீட்டிய காலைக்கடந்து செல்ல நான் முயன்றபோது அவன் திடீரென்று விழித்தெழுந்தான். அவன் தொடையிலிருந்த வாள் சலவைக்கல் தரையிலே சப்தித்துக் கொண்டு விழுந்தது.

கோரமானதொரு கூச்சல் என்னைத் தூக்கி வாரிப்போட்டது. என்மீது வெயர்வை வழிய எனது ஜமாபந்திக் கட்டிலில் நான் உட்கார்ந்திருப்பதாக உணர்ந்தேன். பிறைச் சந்திரன் காலையொளியில் இராத்தூக்கமில்லாத நோயாளியின் தோற்றம்போலே வெளிறிய முகத்துடன் தோன்றினன். காலையில் அந்தத் தனி வழியே நடந்து செல்லும் நம் பைத்தியக்கார

'மேஹர் ஆலி' தன் வழக்கப்படி "எட்டிப் போ! எட்டிப்போ!" என்று கூச்சலிட்டுக் கொண்டிருந்தான்.

இந்தமாதிரி அவசரமாகமுடிவுற்றது என் அரபிக்கதைகளுள் ஒன்று. எனினும் ஆயிர இரவின் கதைகள் எஞ்சி நின்றன.

அன்று முதல் என்னுடைய பகற்பொழுதும் இராப்பொழுதும் தம்முள் மாறுகொள்ளத் தொடங்கின. பகலில், மாயக்காரியான இரவையும், அவள் விளைவிக்கும் வீண் கனவுகளையும் கடிந்துகொண்டே அலுப்புற்று என் வேலையிற் புகுவேன். ஆனால், நிசாமுகம் சமீபித்ததும், வேலையால் பிணிப்புண்ட என் வாழ்க்கைமுறை சிறுமையுற்றதாயும், பொய்யாகவும், பரிகசிக்கத்தக்கதாகவும் தோன்றும்.

இரவு தாழ்ந்ததும் ஓர் புதிய மயக்குவலையிற் பிடிபட்டு வெல்லப்பட்டவன் ஆனேன். அப்பொழுது பண்டைக்காலத்திலே எழுதப் படாததொரு சரிதையிலே என்பாகத்தை நடிப்பவனாக ஏதோ ஒரு பெரிய மனுஷ்யனாக மாறி

விடுவேன். என் குறுகிய ஆங்கிலச்சட்டை பிடிப்பான நிஜார் இவைகள் எனக்கு ஏற்றவை யாகத் தோன்றவில்லை. தலையில் சிகப்பு 'வெல் வட்டி'னுலாகிய குல்லாய், தாராளமான பைஜ மாக்கள், சரிகை வேலைப்பாடமர்ந்த மார்பு மூடிச் சட்டை, சுற்றிலும் காற்றில் தவழ்ந்து வந்த பட்டினுலாகிய தொரு மேலங்கி, அத் தர் மணமேறிய பன்னிறப் பட்டுக்குட்டைகள் இவைகளால் எனது அலங்காரத்தை முடித்துக் கொண்டு மெத்தையிட்ட என் நாற்காலியில் உட்கார்ந்து என் 'சிகரெட்'டைமாற்றி அநேக சுற்றுகள் கொண்டதும், பனிநீரினுல் நிரப்பப் பட்டதுமான 'நார்க்கிலே'யைக் கைக்கொண்டு என் இனியாளை திடீரென்று அங்கே காண எதிர்பார்த்தவன் போலே வீற்றிருப்பேன்.

இரவின் இருள் மிகுத்ததும் என்முன் விளக்கமாகும் விந்தைகளை வருணிக்க எனக்கு நாவன்மை போதாது. அந்த விசாலமான கட் டிடத்திலே, அதன் குதூகலம் விளைவிக்கும் அறைகளிலே, நான் சிறிதுதூரம்பற்றிச் செல்

லக்கூடியதும், ஆனுல் முடிவுவரை கண்டறியக் கூடாததும் ஆகியதொரு அழகிய கதையின் துண்டுகள் சரத்காலத்துத் தவழும் காற்றிலே கலந்து இழைந்து பறந்து செல்வதாக எனக் குத் தோன்றியது. அது காற்றிற் கரைந்ததே யாயினும் இராமுழுதும் அதனைப் பின்தொடர்ந்து அறை யறையாகத் தேடி யலுத்தேன்.

இந்த கணத் துணுக்குகளின் சுழற்சியின் இடையே, சாமந்தியின் மணத்தும் வீணையின் இன்னிசையினும் இடையே, மணமிகுத்த பனிநீர்த் துளிகளோடும் இழைந்து அலைக்கும் காற்றின் இடையே ஒரு க்ஷணநேரம் அதி சௌந்தர்யமானதொரு ரமணியின் உருவம் என் முன் மின்னொளியின் வீச்சுப்போலே தோன்றும். புகைநிறப் பைஜமா, வளைந்த விரல்களுடன் கூடிய பொன்சரிகை ஜோட்டி விட்டிருந்த வெண்மையான மென்சீரடிகள், பொன்னோடும் நெய்த இறுகிய இரவிக்கைகள், அவளது பனிநிறப் புருவத்தும் கன்னத்தும் மறைத்துநின்ற முகதிரை, தொங்கிய சிகப்புக்

குல்லாய் முதலிய யாவும் கொண்ட அவள் என்முன் மறுபடியும் தோன்றுவாள்.

அவள் என்னைப் பைத்தியக்கார னாக்கி விட்டாள். அவளைத் தொடர்ந்து நித்திரை யாகும் கீழுலகத்திலே மாயையால் நிர்மிக்கப் பட்ட ஸ்வப்ன ப்ரதேசத்தின் திகைப்பூட்டும் சந்துகளில் பாதைபாதையாகவும், வீடுவீடாக வும், அறை யறையாகவும் நான் தேடியலைந் தேன்.

சில சமயங்களில் மாலைப்பொழுதில் இரு புறமும் மெழுகுவர்த்திகள் எரிந்து நின்ற பெரிய கண்ணாடியின் முன்னே ஒரு அரசிளங் குமாரனைப்போல நான் உடுத்தி நிற்கும் காலங் களில் அந்தப் பாரசீக அழகி என் அண்டை யில் நிற்பதாகக் கண்ணாடியில் தோன்றும். வேகமாகத் திரும்பும்போது கழுத்தில் தோன் றும் ஒருவளைவு, மிகுந்தகாதலையும் மனவருத் தத்தையும் விளக்கும் அவளது நீண்ட கரிய விழிகளிலிருந்து வெளிவரும் குதூகலத் துடன் கூடிய கூரிய பார்வைகள், அவள் அழ

கிய செவ்விதழ்களிற் றோன்றும் பேசுவது போன்ற சந்தேகமானதொரு தோற்றம், அவள் அணியணியாக நடந்து செல்லும் நடையில் எடுத்துக் காட்டியதுபோலே விளங்கியதோ ரெழில், பூத்த கொடிபோலே யெளவனத்தி னால் முடிசூட்டப்பட்ட மெல்லிய அழகிய உரு வம், துயரத்தையும் ஆர்வத்தையும் பெரும் களிப்பையும் தெரிவிக்கும் கண்பரித்துச் செல் லும் மின்வீச்சுப் போன்றதொரு கடைக்கண் பார்வை, ஒரு புன்சிரிப்பு ஆகிய இவை ஒவ் வொன்றாக என்முன் தோன்றித் தோன்றி மறையும். குன்றிலும் வனத்திலும் உள்ள வாசனை யாவற்றையும் சுமந்து வரும் ஒரு பெருங்காற்று என் விளக்கை அவித்துவிடும். நானும் என் உடுப்பைக் கழற்றிவிட்டு கண்ணை மூடிக்கொண்டு களிப்பினால் பதறும் உடலு டன் என் மெத்தையில் படுத்துக்கொள்வேன். என்னைச் சுற்றிலும் தவழும் காற்று காதலன் காதலியரிடையில் நிகழும் பலவித ஆலிங்கனங் களையும், அநேக சும்பனங்களையும், அநேக

மெல்லிய காஸ்பர்சங்களையும், என் நாசிக்கினிய மலையவும் நிலத்தவுமான பல மலர்களின் நறுமணத்தையும் எனக்காகக் கலந்துவீசும். அல்லது நன்றாக வாசனையிடப்பட்டதொரு பட்டுக்குட்டை என் கன்னப்பக்கத்தில் பரப்பதாக எனக்குத் தோன்றும். பிறகு மெள்ள மெள்ள ஒரு மாயாசர்ப்பம் நான் மூச்சுவிடக்கூடாதபடி என்னைச் சுற்றிலும், தன் கட்டுக்களால் என்னை யிறுகப் பிணிக்கும். பெருமூச்செறிந்துகொண்டு உணர்வழிந்து ஆழ்ந்ததொரு நித்திரை கொள்வேன்.

ஒருநாள் மாலையிலே வெளியே சவாரி போவதாகத் தீர்மானித்துவிட்டேன். யாரோ தெரியவில்லை என்னை அங்கேயே நிற்கும்படி வேண்டினார்கள். ஆனால் அன்று நான் யார் சொல்லையும் கேட்பதாக இல்லை. என்னுடைய ஆங்கிலச்சட்டையும் சோலா டோப்பியும் மாக்கட்டையிலே தொங்கிற்று. நான் எடுத்துப் போட்டுக்கொள்ள இருந்தேன் சுஸ்தா நதிமணலினாலும் ஆரல்லி மலையில் காய்ந்துகிடந்த

சருகுகளாலும் மகுடமிட்டு வந்ததோர் சுழற்காற்று அவற்றைக் கவர்ந்து சுற்றிச் சுற்றியடித்து சென்றது. அதேசமயத்தில் இன்ப யாழின் நரம்புகளை இழைத்துக்கொண்டே சந்தோஷச் சிரிப்பின் உரத்தசத்தம் ஒன்று விண்ணகத்தே உயர்ந்து உயர்ந்து சென்று இறுதியிலே சூர்யாஸ்தம லோகத்தைச் சென்றடைந்து தேய்ந்து இறந்தது.

அன்று நான் சவாரிசெய்யச் சரிப்படவில்லை. மறுநாள் என் பரதேசிச் சட்டை டொப்பி முதலியன அணிவதையே நிறுத்திவிட்டேன்.

மறுபடியும், அதே நாள், நடுநிசியிலே, என் படுக்கையின்கீழே தரைக்குக்கீழே, அந்த பிரம்மாண்டமான மாளிகையின் அஸ்திவாரக் கற்களின்கீழே, ஓர் இருண்ட குளிர்ந்த சமாதியின்கீழேயிருந்து என்னைப் பரிதாபகரமான குரலில் மன்றாடிக் கேட்டுக்கொள்வதுபோலே, யாரோ ஒருவர் விம்மி விம்மி யழும் இதயத்தைப் பிளக்கும் குரல் ஒன்று என் செவியிற்

பட்டது "ஐயோ! என்னை விடுவி! இக்கொடிய மாயையின் கதவைத் தகர்த்து, இந்த சாக்காடு போன்ற உறக்கம், வீண் கனவுகள் முதலியன விடுத்து, குதிரையின்மேலே உன் பக்கத்திலே என்னை ஏற்றி, உன் மார்போடென்னை யணைத்துக்கொண்டு, குன்றம் கானம் நதி முதலியன கடந்து சூர்ய கிரணங்களால் துலக்கப்பட்டு இன்பமான ஒளியுமிழும் உன்மேலறைகளுக்கு எடுத்துச்செல்!" என்று அது அரற்றியது.

நான்யார்? உன்னை எப்படி நான் காப்பாற்றக்கூடும்? நீரில் வீழ்ந்த எந்த அழகி அவள்—மோகமே உருவெடுத்து வந்ததுபோன்றவள் யார் இந்தக்கனவின் பெருஞ்சுழற்சியினின்றும் நான் கரைசேர்க்கவேண்டியவள் எவள்? சௌந்தர்யத்தின் திவ்யஉருவே! எங்கே எப்பொழுது நீ வளர்ந்தாய்? எந்த குளிர்ந்த அருவியின் பக்கத்திலே எந்த ஈச்சந்தோப்பின் நிழலிலே நீ பிறந்தாய்? பாலைவனத்திடையே வசதியற்று அலையும் எந்த யாத்ரீகன் வயிற்றிலே நீ பிறந்தாய்? அடர்த்துப்படர்ந்த கொடியகத்திருந்து

பறித்த அன்றலரும் மலர்போலே உன் அன்னை யின் காத்திலிருந்து பிடுங்கி, மின்னலைப் போன்ற வேகம்பொருந்திய தன் குதிரைமீ தேற்றி, எரிமணற்பாலைகடந்து, இராஜதானியி லுள்ள அடிமைகளை விலைகூறும் கடைத்தெரு விலே கொண்டுசென்ற பேடியின் கள்வன் அவன் யாவன்? அங்கே பூத்துநிற்கும் மடப் பத்தோடுங்கூடிய உன் இளமையின் பெருமை யைக்கண்டு பொன்னால் உன்னைக் கொண்டு, பொன் பல்லக்கிலேற்றி தன்னிறைவனது அந் தப் புரத்திற்கு ஓர் அணியென அளித்த பாது ஷாவின் உத்தியோகஸ்தன் தான் யாவன்? அடே! அந்த இடத்தின் பெருமைதான் என்னே! என்னே! சாரங்கத்தின் இனிய குரலும், சதங்கைகளின் கிலுகிலுப்பும், விஷம் போலே திகழும் "ஷிராஸ்" நகரத்து மதுவும், அந்த ஊடுருவிச் செல்லும் வாள் வீச்சுப் போன்ற கடைக்கண் பார்வைகளும்! என்ன அளவற்ற பெருமை! என்ன எல்லையில்லாத பணிவு! உன் வலது புறத்திலும் இடது புறத்

திலும் உன் அடிமைப்பெண்கள் தம் வளையல் களிலிழைத்திருந்த வைரங்கள் ஒளிவீச உனக்குச் சாமரம் வீசினர்! மன்னர் மன்னனாகிய பாதுஷா அணிகள் திகழ்ந்த உன் பனிநிறம் வாய்ந்த தாள்களின்கீழ் மண்டிபோட்டுவிழுந்து கிடந்தான். வெளிப்புறத்திலே ஒரு விண்ணவன்போலே உடைதரித்து, யமதூதன்போலே கோரமான பார்வையுடன் ஒரு அபிசீனியா நாட்டுக் காவற்காரன் கையில் உருவிய கத்தியுடன் நின்றான். பாலையிடைப்பூத்த மலரே! பின் சூழ்ச்சியாகும் மறைந்தமலைகளும், புதைமணற்றிட்டுர், பொறாமையாம் நுரையும் வாய்ந்த உதிரந்தோய்ந்த மனத்தைப்பறிக்கும் சிறப்பென்னும் கடலால் விழுங்கப்பட்டு சாக்காடு விளைக்கும் எந்தக் கரையிடத்தே நீ ஒதுக்கப்பட்டாய்? அல்லது வேறு எந்த சிறப்பும் கொடுமையும் வாய்ந்த நாடு சென்றடைந்தாய்?

இந்த சமயத்தில் திடீரென்று அந்தப்பித்தன் மேஹர் ஆலி கூவினான். "எட்டியிரு! எட்டியிரு! எல்லாம்பொய்! எல்லாம்பொய்!"

நான் கண்ணைத்திறந்து, விடிந்து வெகு நேரமா யிற்று என்பதைக் கண்டேன். என் 'சப்ராஸி' என்னிடம்வந்து என் கடிதங்களைக் கொடுத் தான். சமையற்காரனும் என் உத்தரவை வேண்டி சலாமிட்டு நின்றான்.

'இல்லை! இனியொரு கணமும் என்றால் இங்கே தங்கமுடியாது!' என்று நான் சொல்லி விட்டேன். அன்றையதினமே என் சாமான் கள் யாவற்றையும் மூட்டைகட்டிக் கொண்டு என் கச்சேரிக்குப்போய்ச்சேர்ந்தேன். கிழவன் கரீம்கான் என்னைக்கண்டதும் சிறிதுபுன்னகை கொண்டான் எனக்கு அதுசுருக்கென்றுதைத் தது. ஆனால் ஒன்றும் சொல்லாமல் என்வேலை யிலே ஆழ்ந்தேன்.

சாயங்காலம் சமீபித்ததும் எனக்கு மறதி அதிகரித்தது. நான் கொடுத்த சங்கேதப்படி யாரையோ ஒருவரைப் பார்த்தாகவேண்டும் போல என்மனம் பதறிற்று. பருத்திக்கணக்கு களை சரிபார்க்கும் வேலை முழுவதும் நிஷ் பிரயோஜனமாகத் தோன்றிற்று. நைஜாம்

அவர்களது 'நைஜாமாத்து'க் கூட அவ்வளவு சிறந்ததாகப் படவில்லை. இப்பொழுது நிகழும் யாவும், சோற்றிற்காக அலைவதும் நடப்பதும் வேலை செய்வதும், அற்பமாகவும் நிரர்த்தகமாகவும் இகழ்ச்சிக் குரியதாகவும் நான் கருதலானேன்.

என் எழுதுகோலை தூர எறிந்தேன். கணக்குப் புஸ்தகங்களை மூடினேன். என் வண்டியிலேறிச் சென்றேன். சரியாக சந்தியா காலத்தில் சலவைக்கல் மாளிகையின் வாயிலில் என் வண்டி தானாகவே நிற்பதை கவனித்தேன். வேகமாகப் படிக்கட்டுகளின் வழியே ஏறி என்னறையுட் புகுந்தேன்.

ஒரு கனத்த நிச்சப்தம் உள்ளே குடியிருந்ததும். அதன் இருண்ட அறைகள் என்மீது கோபம் கொண்டதுபோலே நின்றன என் இதயத்தில் பச்சாத்தாபம் உண்டாயிற்று. ஆனால் என் மனதிலிருந்ததை வெளியிட்டு மன்னிப்புபெறவோ ஒருவரும் அங்கே இல்லை. சூன்யமான மனதுடன் அந்த இருளடர்ந்த

அறைகள் வழியே ஓடினேன். "ஓ! திக்கடவுளே! உன்னிடமிருந்து வீணிலே ஓடிச் செல்ல முயன்ற அந்த எளிய விட்டிற்பூச்சி உன்னிடம் திரும்பிவந்து விட்டது. இந்த ஒரு தடவைமட்டும் அதை மன்னித்துவிடு. அதன் சிறகுகளை எரித்து உன் அழலில் அதனை இரையாக்கு!" என்று அந்த அருபிக்குப் பாட வேண்டி ஒரு வீணையை வெகுவாக நான் விரும்பினேன்.

எங்கிருந்தோ மேலிருந்து என் நெற்றியில் இரண்டு கண்ணீர்த்துளிகள் வீழ்ந்தன. அன்று அரால்லி மலையின் மேற்புறத்தை கரிய மேகப்படலங்கள் சூழ்ந்திருந்தன. இருளடைந்த கானமும், சுஸ்தா நதியின் கலங்கிய நீரும், சகிக்கவொண்ணாத ஆத்திரத்துடனே கோரமானதொரு மௌனத்துடன் எதையோ எதிர்பார்த்து நின்றன. திடீரென்று மண்விண் நீர் யாவும் குழம்பின. புயற்காற்று ஒன்று தன் தளையினின்றும் விடுபட்டதொரு பேயன் போலே தன் மின்னலாகிய பற்களைக் காட்டிக்

கொண்டு தூரவிருந்த பாதையற்ற கானத்தின் வழியே அலறிக்கொண்டு வந்தது. பாழடைந்த அந்த மாளிகையின் அறைகளும் தம் கதவுகளை உடைத்துக்கொண்டு தம் துக்கமேலீட்டினால் போல ஓலமிட்டழுதன.

வேலைக்காரர் யாவரும் கச்சேரியி லிருந் தார்கள். இங்கு விளக்கேற்ற ஒருவரும் இல்லை. வானம் மேகத்தால் இருண்டும் நிலவற்றும் இருந்தது. அந்தக் கன இருட்டிலே உள்ளே படுக்கையின் கீழே ஜமக்காளத்தின்மீது தன் கரிய நீண்ட கூந்தலைப் பிய்த்துக்கொண்டு ஒரு சிறுமி கீழ்நோக்கிப் படுத்திருப்பதாக எனக்கு நன்றாகப்பட்டது. அவள் அழகிய நெற்றியி லிருந்து ரக்தம் சொட்டிக் கொண்டிருந்தது. அவள் ஒருநிமிஷம் குரூரமான வற்றிய இன்ப மற்ற குரலில் நகைத்துக்கொண்டும் மறு நிமி ஷம் உடலைப் பிழிந்திழுப்பதுபோலே தேம்பி யழுதுகொண்டும், தன் ரவிக்கைகளைக் கிழித் துக்கொண்டும், திறந்த தன் மார்பிற் புடைத் துக்கொண்டும் இருந்தாள். திறந்திருந்த ஜன்

னல் வழியே காற்று உறுமிச்சென்றது. மழையும் வெள்ளமாகப்பெய்து அவளை முழுதிலும் நனைத்து விட்டது.

அன்று இரவு முழுவதும் அந்த புயலாவது சோகக்குரலாவது நிற்கவில்லை. அந்த இருட்டில் அறை யறையாக வீண் துயரத்துடனே நான் திரிந்தேன். பக்கத்தில் ஒருவருமில்லாதபோது யாரைத்தேற்ற? அளவுகடந்த இந்தசோகம் யாருடையது? எங்கிருந்து எந்த காரணத்தால் உண்டாகியது இந்த ஆற்றவொண்ணுத துக்கம்? ஒன்றேனும் விளங்கவில்லை.

மறுபடியும் அந்தப் பித்தன் கூவினான், "எட்ட நில்! எட்டநில்! எல்லாம் பொய்! எல்லாம் பொய்!"

பொழுது விடிந்து விட்டதென்று நான் கண்டேன். மேஹர் ஆலி அந்த கொடிய புயலிலே அவனது வழக்கப்பிரகாரம் கூச்சலிட்டுக் கொண்டே மாளிகையைச் சுற்றிச் சுற்றிச் சென்றுகொண்டிருந்தான். திடீரென்று எனக்

குத்தோன்றியது, ஒருவேளை அவனும் அங்கே முன்பு வசித்திருக்கலாம்; அதனாற்றான் வெறி பிடித்திருந்த இப்பொழுதும் அந்த சலவைக் கற்பசாசு அவன்மீது கொண்டிருந்த மாந்திரீக சக்தியின் வன்மையினாலே அதைச் சுற்றிலும் தினமும் அவன் அலைந்து கொண்டிருந்தான்; என்று.

காற்றையும் மழையையும் கவனியாமலே அவனிடம் ஓடிக்கேட்டேன். “ஏடா! மேஹர் அலி! எதுபொய்?”

அவன் ஒன்றும் பதில் சொல்லவில்லை. ஆனால் பாம்பின் படத்தினால் மனம் கவரப்பட்டுப் பாயும் ஒரு பறவைபோலே கிரீச்சிட்டுக் கத்திக்கொண்டே என்னிடமிருந்து தன்னை விடுவித்துக்கொண்டு ஓடினான். “எட்டநில்! எட்டநில்! எல்லாம் பொய்! எல்லாம் பொய்!” என்று கூவித் தன்னை எச்சரிக்கை செய்து கொள்ள வெகுவாக முயன்றான்.

அந்தக்கல்மழையிலே நான் வெறிகொண் டவன்போல என் கச்சேரிக்கு ஓடிச் சென்று

"இது என்ன இது! சொல்" என்று கரீம்கானைக் கேட்டேன்.

அவன் சொல்லியதிலிருந்து, அந்த மாளிகையில் ஒருகாலத்தில் வளர்ந்ததீராதகாமமும், திருப்தியடையாத ஆவலும், மட்டில்லாது எரிந்து பொங்கிய இன்பப் பெருக்கின் கோரமான தழல்களும் இன்னமும் அதனை எரித்து நின்றன என்றும், எல்லோருடைய மனக்கொதிப்பும், உடைந்த ஆசைகளும் தந்ததொரு சாபத்தால் அதன் கற்கள்கூட எதிர்நேர்ந்த எவனையும் விழுங்கக் காத்திருக்கும் ஒருபசாசு போல தாகமும் பசியும்கொண்டதாக ஆகிவிட்டதென்றும், தன் சித்தத்தை அதனாலே இழந்த மேஹர் ஆலியைத்தவிர மூன்று இரவுகள் அடுத்து அங்கே தங்கிய வேறு எவரும் அதன்கொடிய வாயினின்றும் தப்பியதில்லை என்றும் நான் ஒருவாறு தெரிந்து கொண்டேன்.

நான் கேட்டேன் "நான் இதனின்றும் தப்புவிக்க வேறுவழி ஒன்றும் இல்லையா?"

அந்தக் கிழவன் சொன்னான் "ஒரே ஒருவழி தான் உண்டு. அதுவும் வெகு சிரமமானது. அது இன்னதென்று உனக்குச்சொல்லுவேன். ஆனால் ஒருகாலத்தில் அந்த இன்பவிடுதியில் தங்கிய ஒரு பாரசிக யுவதியின் சரித்திரத்தை நீ கேட்கவேண்டும். இதைவிட விந்தைக்குரிய, இதைவிட சோகமயமான சரிதை இந்த லோகத்திலே நடைபெறவில்லை—"

அந்த சமயத்தில் வண்டி வந்துகொண்டிருக்கிறது என்று கூலிக்காரர்கள் கூவினார்கள். வண்டி புகைவிட்டுக்கொண்டே 'ஸ்டேஷனு'ள் வர நாங்கள் அவசரம் அவசரமாக எங்கள் சாமான்களை எடுத்துக்கொண்டோம். ஆங்கில கனவான் ஒருவன் அப்பொழுதே தூங்கி விழித்தவன் ஒரு முதல்வகுப்பு வண்டியிலிருந்து ஊர் பெயரைத் தெரிந்துகொள்ள விரும்பி வெளியே நோக்கிக்கொண்டிருந்தான். அவன் நம் கூடவிருந்த கதைக்காரனைக் கண்டதும், கூவியழைத்துத் தன்வண்டியில் ஏற்றிக்கொண்டான். நாங்கள் ஒரு இரண்டாவது வகுப்பு

வண்டியில் ஏறிக்கொண்டதால் அந்த மனுஷ்யன் யார் என்பதையாவது அவன் கதையின் முடிவு எப்படி என்பதையாவது நாங்கள் அறியக்கூடவில்லை.

"அவன் நம்மை மதியற்றவரென்று கருதி விளையாட்டாக நம்மை ஏமாற்றி விட்டான்.. முதலிலிருந்து இறுதிவரை அந்தக் கதை வெறும்கற்பனையே" என்று நான்சொன்னேன். பின் நேர்ந்தவாதம் எனது 'தியஸாபிகல்' உறவினனுக்கும் எனக்கும் இடையில் தீராததொரு விரோதத்தில் கொண்டுவிட்டது.

க்ஷூதித பாஷாணம்

அல்லது பசிகொண்டகற்கள் என்னும் கதை

முற்றிற்று.

ஸ்மாப்தி.

அபூர்வன் பீ. ஏ. பட்டம்பெற்றுத் தனது கிராமத்துக்குத் திரும்பினான். அந்த கிராமத்தருகே ஒரு சிற்றாறு போகிறது. கோடை முழுதும் வற்றிக்கிடந்த அவ்வாற்றில் ஆடி மழையால் வெள்ளம் வந்து இருகரையும் நிரம்பிப் பாய்ந்தது.

அபூர்வன் வந்ததோணி படித்துறையைச் சார்ந்தது. அங்கிருந்து பார்த்தால் நெருங்கிய மரக்கிளைகளின் இடையே அவன்வீட்டுக்கூரை தெரியும். அவன் வரப்போகிறசெய்தி யார்க்கும் தெரியாதாகையால் அவனை எதிர்கொண்டழைக்க யாரும் கட்டத்துக்கு வரவில்லை. அவனுடைய மூட்டையைத் தோணிக்காரன் சுமந்து வருவதாகச் சொன்னான். வேண்டிய

தில்லையென்று அபூர்வன் அதைத் தானே தூக்கிக்கொண்டு தோணியிலிருந்து கரைமீது குதித்தான். கரை வழுக்கலாக இருந்தது. மண் படித்துறையின்மீது சடேலென்று மல் லாந்து விழுந்தான் மூட்டை ஸஹிதமாக.

அங்ஙனம் அவன் விழுந்த வுடனே எங் கிருந்தோ கல கல, கல கல, என்று அலை யலை யாகச் சிரிப்பின் பேரொலி எழுந்தது. அது கேட்டுப் பக்கத்து மரங்களிலிருந்த பக்ஷிகள் கலைந்தன. அபூர்வன் எழுந்து தன்னை இயன்ற வரை சாந்திப்படுத்திக் கொண்டான். பிறகு திரும்பிப் பார்த்தபோது அங்கே சரக்குத் தோணி யொன்றிலிருந்து இறக்கிப்போட் டிரு ந்த செங்கல் குவியலின்மேல் உட்கார்ந்து ஒரு கன்னிகை விலா வெடிக்க நகைத்துக்கொண் டிருந்தாள். அவள் தனது பக்கத்து வீட்டுப் பெண் ம்ருண்மயி என்று கண்டான். ஆதி யிலே அந்தப் பெண்ணுடைய குடும்பத்தார் தொலையிலே குடியிருந்தார்கள். பின்பு நதி இடம் பெயர்ந்ததிலிருந்து அந்தவீட்டைவிட்டு

கிராமத்தில்வந்து குடியேறினர். கிராமத்துக்கு அவர்கள் வந்து இரண்டு வருஷங்களாயின.

ம்ருண்மயிபேச்சுத் தான் கிராமமுழுதும். ஆண்மக்கள் அவளைப் 'பிச்சி' என்பார். அவளுடைய அடங்காப் பிடாரித் தன்மையைக் கண்டு குடும்பத்துத் தாய்மார் தீராத கவலைப் படுவர். அவள் விளையாட்டெல்லாம் ஆண் பையன்களோடுதான். தனது வயதுப் பெண்களைக்கண்டால் துச்சமாகப் பாராட்டுவாள். தந்தைக்குச் செல்வக்குமாரி யாதலால் இப்படி வணங்காமுடியாகி விட்டாள். அவளுடைய தாய் தன் தோழிகளிடம் தனது கணவன் பெண்ணைக் குட்டிச்சுவ ராக்குவதாக முறையிட்டு வருத்தப்படுவாள். எனினும் பெண் கண்ணீர் விடக்கண்டால், தந்தை மனம்பொறுக்கமாட்டா ஞதலால், அவள் தன் கணவனைக் கருதி மகளை தண்டிப்பதில்லை.

ம்ருண்மயி முகத்தைப் பார்த்தால் பெண் சாயல் கிடையாது, ஆண்சாயல். அவளுடைய சுருண்டமயிர்கள் குஞ்சம்குஞ்சமாகக் கழுத்து

அ

வளை தொங்கின. அவளுடைய பெரிய கருங் கண்களில் அச்சமும் நாணும் எப்போதும் காணப்படா. அபூர்வன் அந்த கிராமத்து ஜமீந் தார். அவன் வந்திறங்கியபோது மற்றவர்கள் பார்த்து பயந்தயாகிரி இவள் பயப்படவில்லை. தனது சுருள் சுருளான கூந்தலை அசைத்து, நிர்வாணமான ஒரு குழந்தையைக் கையில் எடுத்துக்கொண்டு, எல்லாருக்கும் முன்னே வந்து ஜமீந்தார் என்ற விநோத ஜந்துவின் மாதிரிகளைப் பார்வையிட்டாள்.

ஏற்கெனவே இதற்கு முன்பு அபூர்வன் ஒரிருமுறை இந்தப்பெண்ணைப் பார்த்ததுண்டு. வேலை நீர்ந்திருந்த காலங்களிலும், வேலை செய்துகொண்டிருக்கும்போதும் அவனுக்குப் பலமுறை அவளுடையஞாபகம் வந்ததுமுண்டு. ஆகலால், அவள் இங்ஙனம் நகைப்புடன் அவனை வரவேற்றது அவனுக்கத்தனை ரஸப்பட வில்லை; அந்த நகைப்பில் இன்னிசை கலந்து நின்றதே தாயினும்.

அபூர்வன் மூட்டையைத் தோணிக்காரனிடம் கொடுத்துவிட்டுத் தன்வீட்டை நோக்கி மிக விரைவுடன் சென்றான். நடந்த விவகார முழுதும் வரிசையாகக் காவியம் மாதிரியாகவே இருந்தது. ஆற்றங்கரை; தோப்புநிழல்; காலை வெயில்; பறவைகளின் பாட்டு; அவனுடைய இருபதாட்டை யிளமை. அந்தச் செங்கற் குவியல் மாத்திரந்தான் ஷை கவிதா சித்ரத்துடன் நன்கு பொருந்தவில்லை. ஆனால் அக் குவியலின்மீது வீற்றிருந்த பெண் எல்லாக் குறைகளுக்கும் மாற்றாக விளங்கினாள்.

உ

அபூர்வனுடைய கைமைத்தாய், எதிர்பாராமல் தன்மகன் வந்தானென்று வரம்பில்லா மகிழ்ச்சி கொண்டாள். பாலும், தயிரும், மீனும் வாங்கிக்கொண்டு வரும்படி கிராமத்தில் நான்கு சந்திற்கும் ஆள் விடுத்தாள். கிராம முழுதும் இவ்வேதார் ஆரவாரமாயிற்று. மத்யாஹ்ந போஜனம் கழிந்தபின் தாய் அபூர்வனிடம் விவாகஞ்செய்து கொள்ளும்படி நினைப்

பூட்டினன். இங்ஙனம் அவள் சொல்வாளென் பதை அபூர்வன் எதிர்பார்த்திருந்தான். முன் பலமுறை அவள் இந்த வார்த்தை சொல்லிய துண்டு. அப்போதெல்லாம் அவன் பரீக்ஷை யை ஒரு முகாந்தரமாகக் காட்டிக் கடத்தி விட்டுக் கொண்டுவந்தான். இப்பொழுதோ பெரிய பரீக்ஷை தேறிவிட்டது. இனிமேல் போக்குச்சொல்லவாயில்லை. எனவே அவன் சரியான பெண் அகப்பட்டால் மணம் புரிய நிச்சயிக்கலாம் என்றான்.

சரியான பெண் அகப்பட்டாய் விட்டதென்றும், ஆதலால் இனியோசனைக்கிடமில்லையென்றும் தாய் சொன்னாள். இருந்தாலும் யோசித்தே செய்யவேண்டுமென்றும் மணம் செய்ய இணங்கு முன் தான் ஒருமுறை பெண்ணைப் பார்க்கவேண்டுமென்றும் அபூர்வன் சொன்னான். அது அநாவசியமாகத் தோன்றினும் தாய் அதற் குடம்பட்டாள்.

மறுநாள் அபூர்வன் பெண்ணைப்பார்க்கப் போனான். பெண்வீடு அவர்கள் வீட்டிற்கு

ஸமீபந்தான். புறப்படுமுன் அபூர்வன் உடுப்பையெல்லாம் வெகுஜாக்ரதையாக கவனித்துக் கொண்டான். தனது புதிய பட்டு நிஜாரையும், சட்டையையும் மாட்டினான். கல்கத்தாவில் அப்போது வாடிக்கையிலிருந்த புதுமாதிரிப் பாகையைத் தலையில் அணிந்தான். முதல்தரமான பதன் தோற்செருப்பு, பட்டுக்குடை இவற்றையும் தரித்தான். உத்தேச மாமனார் வீட்டில் போனவுடன் அங்கே அவனுக்கு உபசாரம் பலம். அந்தச் சிறிய பலி — அதாவது உத்தேசப் பெண்டாட்டியாகிய கன்னிகை—யைக் குளிப்பாட்டிப்பூசி, மெழுகிக் கயிறுகட்டி நகைபோட்டு, அபூர்வன் முன்னே கொண்டு வந்து நிறுத்தினார்கள். அவள் ஒரு மூலையிலே போய் உட்கார்ந்து கொண்டாள். மோவாய்க் கட்டை கூடவெளியே தெரியாமல் முக முழுதும் திரை மூடியிருந்தது. தலைகுனிந்து முழந்தாள் மேலே இடித்தது. பின் புறத்தில் ஒரு தாதிக்கிழவி யிருந்து தேறுதல் சொல்லிக் கொண்டிருந்தாள். அவளுடைய தம்பி பக்கத்

திலே இருந்து அபூர்வனையும்,—அவன் தலைப் பாகையையும், கடிகாரச் சங்கிலியையும், புதிதாக அரும்பும் மீசையையும் — பார்த்துக் கொண்டிருந்தான்.

அபூர்வன் ஆழமான தொனியிலே அந்தப் பெண்ணை நோக்கி:—"என்னென்ன பாடப் புஸ்தகங்கள் பள்ளிக்கூடத்தில் வாசிக்கிறாய்?" என்று கேட்டான். வர்ணப்பட்டிலே புதைத்து வைத்திருந்த நுணை மூட்டைபோன்ற அப் பெண்ணிடமிருந்து மறுமொழி பிறக்கவில்லை. இவன் கேள்வியைப் பலமுறை திரும்பிச் சொல்லி, மேலும் பின்னே நின்றதாகி அநேக முறை முதுகைப் பிசைந்ததற் கப்பால் அப் பெண் ஒரே மூச்சில் தன்பாடசாலைப் புஸ்தகங்கள் அனைத்தின் பெயரையும் ஒப்புவித்தாள்.

அதே க்ஷணத்தில் வெளியே ஆள் ஓடி வரும் அடியொலி கேட்டது. பெருமூச்சு வாங்க ஓடிவந்து ம்ருண்மயி திடீரென்று உள்ளே பாய்ந்தாள். அபூர்வனை அவள் கவனிக்கவேயில்லை. உத்தேச மணப் பெண்ணு

டைய தம்பியாகிய 'ராகால்' என்பவனைக் கைப் பற்றி வெளியே இழுத்தாள். ராகால் தனது பார்வைப் புலனைத் தீட்டிக்கொண் டிருந்தானையால், அசைய மாட்டேனென்று விட்டான். காதி தனது குரலை நியத ஸ்தாயிக்கு மேலே போகாமல் அடக்கி வைத்துக்கொண்டு ம்ருண்மயிமீது சினந்துரை பேசினாள். அவ்வூர்வன் தன்மனதைச் சிதறாமல் நிறுத்திக்கொண்டு அசையாமல் இருண்ட முகத்துடன் வீற்றிருந்தான். விரல்களால் கடிகாரச் சங்கிலியை உருவலானான்.

ராகால் சலிக்கமாட்டான் என்று தெரிந்தவுடனே ம்ருண்மயி அவன்கன்னத்தில் ஓரறை படீலென்று விட்டாள். உத்தேச மணப்பெண்ணுடைய முகத்தினின்றும் முன்றானையைப் போக்கினாள். ஒரு குட்டிப் புயற்காற்றைப் போலே சாடி வெளியே பாய்ந் தோடினாள். காதி உறுமி முணுமுணுத்தாள். தன் ஸஹோதரியின் முகத்திரை திடீரென்று விலகியதை நினைத்து நினைத்து ராகால் அஸாத்யமாகச் சிரிக்

கத்தொடங்கினுன். தனக்கு விழுந்த அறையை அவன் ஒரு பொருளாகக் கருதவில்லை. அவ்விருவருள் அடி யுதை விஷயம் அன்றுடம் பற்று வரவு கணக்குண்டு. பூர்வத்திலே மருண் மயிக்குக் கூந்தல்நெடிதாய் இடுப்புவரை தொங்கும். ஆகால் ஒருநாள் அவள் தலைமயிரைக் கத்திரியால் வெட்டினுன். அவள் கோபத்துடன் அவன் கையிலிருந்த கத்திரிக்கோலைப் பிடுங்கித் தானே மிச்சத்தையும் கத்திரித்துப்போட்டாள். தரைப்புழுதியின்மேல் அவளுடைய குழற்சுருள்கள் கரிய கொடிமுந்திரிக் கொத்துப்போலே கிடந்தன.

இந்த பூகம்பத்துக் கப்பால், அபூர்வன் தனது பெண் பரீக்ஷையைத் துடுமென்று நிறுத்திவிட்டான். மணப்பெண் ஆஸனத்தை விட்டெழுந்து, துன்பவளையமாக இருந்தவள் நேர்க்கோடுபோலே நின்று தன் அறைக்குள் அந்தர்த்தானம் பண்ணிவிட்டாள். அபூர்வன் மீசையைத் திருகிவிட்டுக் கொண்டெழுந்தான். அவனுடைய முதல்தரப் பதன் தோற்செருப்

டைக்காணவில்லை. பிரமாதமாகத் தேடிப் பார்த்தார்கள். ஓரிடத்திலும் அகப்பட வில்லை. வீட்டு யஜமானனிடமிருந்து இரண்டு பழைய நாட்டுச்செருப்பை வாங்கி மாட்டிக்கொள்ளும் படி நேர்ந்தது. அவனுடைய மற்ற அலங்காரங்களுக்கு அந்தச்செருப்புப்பொருந்த வில்லை.

கிராமத்துத் தடாகத்தின் பக்கத்திலுள்ள சந்து திரும்பினவுடனே அபூர்வனுடைய செவியில் முதல்நாள்கேட்ட நகைப்பின் இடித்தல்கேட்டது. அவன்முகம் வெள்கித் திகைத்து நிற்கையிலே, அங்கொரு மறைவினின்றும் ம்ருண்மயி ஓடிவந்து அவன்முன்னே அவனுடையபதன் தோற்செருப்பை வீசியெறிந்துவிட்டுத் தப்பியோட முயன்றாள். இவன் தாவிப்போய் அவள்கையைப் பிடித்துக்கொண்டான். ம்ருண்மயி சுருண்டாள்; திருகினாள்; கையைப் பிடுங்க முடியவில்லை. அவளுடைய குறும்பு முகத்தின்மேல் ஒரு ஸூர்யகிரணம்,- தலைமீது செறிந்தளாவிய கிளைகளின் சிறிய இடைவழியே வந்து,—வீழ்ந்தது. அபூர்வன்

அவளுடைய கண் பாவையை உற்றுநோக்கினான். பாய்ந்தோடும் நீரோடையொன்றின் ஸ்படிக துல்யமான ஜலத்திற்குள்ளே பருக்கைக்கற்களை நோக்கும் ஒரு வழிப்போக்கனைப் போன்றான். தனது மனக்கொள்கையை நிறைவேற்றுவதில் தியக்கமடைந்தவன்போல் நின்றான். பிறகு அவள்கையை நெகிழ்த்தான். சிறையை விடுதலை செய்துவிட்டான். அபூர்வன் தனது கன்னத்தில் ஓங்கி யடித்திருந்தால் அந்தப்பெண் அதை ஸஹஜமாக பாவித்திருப்பாள். இந்தக் குறைத்தண்டனை அவளுக்கு இயற்கை விரோதம்போலே பட்டது.

ரு

கேவலம் இந்தச் சிறுகிராமத்துப் பெண்ணிடம் மஹா வித்வானாகிய அபூர்வனொத்த இளைஞன், தனது மதிப்பைக் காண்பிக்கும் பொருட்டு இத்தனை சிரமம் எடுத்துக்கொண்டதன் காரணம் நமக்குத் தெளிவாகப் புலப்படவில்லை. அவளுடைய அஞ்ஞானத்தினால் இவனைப் புறக்கணித்து, அந்த மூடப்பையனாகிய

ராகாலேத் தோழனுக்கிக் கொள்வதனால் இவ னுக்குக் கஷ்டம் என்ன உண்டாகும்? அபூர் வன் என்னசெய்தான் என்று கேட்டால், அந் தப்பெண்ணிடம் தான் 'விசுவதீபம்' என்ற மாஸப் பத்திரிகைக்கு வ்யாஸம் எழுதி யிருப் பதாகவும், தன் பெட்டிக்குள் வாஸனை சீசாக் கள், வர்ணக் காயிதங்கள், ஹார்மோனியம் பாடங்கள் இவற்றுக்கெல்லாம் கீழே ஒருபெரிய புஸ்தகம், தான் கையெழுத்துப்பிரதி தயார் செய்து வைத்திருப்பதாகவும், விரைவில் அச் சிடப்போவதாகவும் வெகுசிரமப்பட்டு ருஜூப் படுத்தினான்.

மாலையில் அபூர்வனுடைய தாய் அவனை நோக்கி:— "பெண் உனக்கு ஸம்மதந்தானா?" என்று கேட்டாள்.

கொஞ்சம் தியங்கிப் பின்பு: "ஆமாம்; அந்தப் பெண்களுக்குள்ளே ஒருத்தியைக் கல் யாணம் பண்ணிக்கொள்ள ஸம்மதம்" என்றான் அபூர்வன்.

"பெண்களிலே ஒருத்தியா? என்னடா சொல்லுகிறாய்? அர்த்தமென்ன?" என்று தாய் கேட்டாள்.

நெடுநேரம் குறுக்கு விசாரணை செய்த பிறகு பிள்ளை ம்ருண்மயியை மணம் செய்ய வேண்டுகிறா னென்று தெரிந்து கொண்டாள். அவள் இதைத் தெரிந்தமாத்திரத்திலே பீ. ஏ. பட்டத்தில் தனக்கிருந்த மதிப்பைப் பெரிதும் இழந்துவிட்டாள். பிறகுதாய்க்கும் மகனுக்கும் இதைப்பற்றிப் பலநாள் போராட்டம் நடைபெறறது. கடைசியாகத் தாய் ம்ருண்மயியைச் சீர்திருத்துதல் அஸாத்யமில்லை யென்று நிச்சயித்துக்கொண்டாள். அந்தப்பெண் முகம் கொஞ்சம் அழகுதான் என்றும் யோசிக்கலானாள்; அப்போது சுருட்டைமயிர் ஞாபகம் வந்தது. அதில் வெறுப்புற்றாள். இருந்தாலும் மனித இயற்கையைத் திருத்துவதைக் காட்டிலும் கூந்தலைத் திருத்துதல் சுலபம் என்றெண்ணி, மனதைத் தேற்றிக் கொண்டாள். நிச்சயதாம்பூலம் நடந்தது.

ம்ருண்மயி தந்தைக்குஸமாசாரம் கிடைத்தது. அந்தமனிதன், தொலேயிலே ஒரு சிறிய நதிக்கரை ஊரில், புகைக்கப்பல் கச்சேரியில், குமாஸ்தாவேலே பார்த்தான். நாள் முழுதும் மூட்டை ஏற்றுவதும், இறக்குவதும், சீட்டு விற்பதும் அவனுக்குத் தொழில் அங்கொரு தகரக் கூரைபோட்ட சிறு குடிசையில் குடியிருந்தான். பெண்ணுக்குக் கல்யாணமென்ற கடிதம் வந்தவுடன் அவன் கண்கள் ஆனந்த பாஷ்பம் சொரிந்தன. அதில் ஆனந்தம் எவ்வளவு துயரம் எவ்வளவென்பதை வகுத்துக் கூறுதல் அரிது. அவன்பெயர் ஈசானன்.

ஈசானன் கல்கத்தாவிலுள்ள தலேக் கச்சேரிக்கு ரஜா வேண்டுமென்று மனுப் போட்டான். அந்தக் கச்சேரித் தலேவன் ஓர் ஆங்கிலேயன். "நிச்சய தாம்பூலம் போதாத காரண" மென்று சொல்லி அவன் மனுவைத் தள்ளிப் போட்டான். ஈசானன் இலேயுதிர் காலத்துப் பெரிய ரஜாவரை விவாகத்தை ஒதுக்கி வைத்துக்கொள்ளும்படி ஊருக்கெழுதினன். நடப்பு

மாஸத்துக் கடைசிவாரத்திலே தான் வருஷ முழுமைக்கும் அதிமங்களமானலக்நம் இருப்பதாகவும் அப்போது மணம்செய்து தீரவேண்டுமென்றும் பிள்ளையின் தாய் சொல்லிவிட்டாள். என்ன செய்வான் ஈசானன்? இரண்டு பக்கத்திலும் இவனுடைய விண்ணப்பம் தள்ளுபடி. பொறுக்க முடியாத துக்கத்துடன் சீட்டு விற்பதும் மூட்டை யேற்றுவதும் இறக்குவதும் புரியலாயினன். இதன்பிறகு, ம்ருண்மயியுடைய தாயும், கிராமத்து மற்றத்தாய்மாரும் அந்தப் பெண்ணுக்குக் குடும்ப தர்மங்களைப் பற்றிப் பலவித உபதேசங்கள் செய்தனர். விளையாட்டில் பிரியம், ஓட்டம் சாட்டம், உரத்த சிரிப்பு, ஆண் சிறுவர் தோழமை, உண்ணும்போது அபர்கை யில்லாமை — இவையெல்லாம் மாமியார் வீட்டுக்குப்போனபின் கட்டோடு நிறுத்தவேண்டுமென்று போதித்தனர். விவாகம் செய்தால் பின் தனதுயிரை விலங்கிட வேண்டுமென்ற எண்ணம் அவள்மனதில் பதியும்படி செய்துவிட்டனர். ஆகவே விவாகமாவது ஜன்

மக் கடுங்காவலென்றும் கடைசியிலே தான் தூக்குப் போடுவார்களென்றும் அவள் மனதில் பட்டது. வசப்படுத்த முடியாத சிறு மட்டக் குதிரைபோல், அவள் கடிவாளத்தைப் பல்லினல் இறுகக்கடித்துக்கொண்டு:—"நான் விவாகம் செய்துகொள்ள மாட்டேன்" என்றாள்.

ச

ஆனால் அவளுடைய இஷ்டப்படி நடக்கவில்லை. கல்யாணம் பலாத்காரமாயிற்று. அப்போது—விவாகம் நடந்தபிறகு—அவளுடைய புதிய பாடங்கள் படிக்கலானாள். அவளுக்கு அகிலமெல்லாம் மாமியார் வீட்டு நான்கு சுவர்களுக்கிடையே வந்து சுருங்கிவிட்டது. மாமியார் சீர்திருத்தங்களை உடனே தொடங்கி விட்டாள். "இதோ, பார், பெண்ணே, நீ குழந்தையில்லை. உன்னுடைய ஆசாரமெல்லாம் இந்தக் குடும்பத்துக்கு உதவாது. அமர்ந்து நட" என்று மாமியார் முகத்தைக் கடுமையாக்கிக்கொண்டு சொன்னாள். இதிலிருந்து மருண்மயி அந்த இடம் தனது வாஸத்துக்குத் தகா

தென்று தீர்மானம் செய்து கொண்டாள். அன்றுமாலையில் ஆளேயே காணவில்லே. பல இடங்களில் அவளேத் தேடினர்கள். அகப்படவில்லே. கடைசியாக அவளுடைய தோழன் ராகால் துரோகியாய் அவள் மறைந்திருந்த இடத்தைக் காண்பித்துவிட்டான். பூர்வத்தில் அந்த கிராமத்து தேவதையை காற்றுக் குடிக்கக்கொண்டு சென்றதாகிய, உடைந்த பழைய பாழடைந்த மரத்தேருக்குள்ளே பதுங்கிக் கொண்டிருந்தவளே இழுத்து வீட்டிலே சேர்த்தனர். பிறகு மாமியார் வீட்டுக் கொடுமை ஸஹிக்க முடியாமல் போய்விட்டது. இரவில் மழைவந்தது.

அபூர்வன் தனது படுக்கையில் ம்ருண்மயிக்கு மிகவும் ஸமீபத்தில்வந்து:—“மிருணி, என்னிடம் காதல்கொண்டிலேயோ?” என்று காதோடு கேட்டான்.

“ஒருபோதும் உன்னே விரும்ப மாட்டேன்” என்ருள் மிருணி.

"நான் உனக்கு அப்படி என்ன தீங்கு செய்தேன்?" என்று அபூர்வன் வினவினான்.

"என்னை ஏன் மணந்தாய்?" என்றாள்.

இந்தக் கேள்விக்கு ஜவாப் கஷ்டம். எனினும் அபூர்வன் தனதுள்ளத்தின் கண்ணை இந்த அடங்காதநெஞ்சினளை இறுதியில் வெல்லுவேன் என்றொருமுடிவுகட்டிக்கொண்டான்.

மறுநாள் மாமியார் இந்தப்பெண்ணுடைய சிடுசிடுப்பைக் கண்டு அதற்கு தண்டனையாக அவளை ஓர் அறைக்குள் அடைத்துப் பூட்டினாள். ம்ருண்மயிக்கு வெளியேற வழியில்லை. கோபமிஞ்சிப் பற்களினால் படுக்கையைக் கந்தை கந்தையாகக் கிழித்தெறிந்துவிட்டுத் தரையிலே கிடந்து புரண்டாள். கோவென் றழுதாள். "அப்பா, அப்பா" என்று கூவினாள்.

அப்போது அவளருகே ஒருவன் வந்து உட்கார்ந்தான். அவள் புரளுகையிலே அவளுடைய கலைந்த கூந்தலைக் கையால் தடவி நோக்கினான். அவள் சினத்துடன் அவன் கையைப் புறத்தே எற்றினாள். அந்த மனிதன்

யாரென்றால், அபூர்வன். அவன் அவளுடைய காதோரமாகத் தலையைச் சாய்த்துக்கொண்டு மெதுவான குரலில்: — "நான் ரஹஸ்யமாகக் கதவைத் திறந்து வைத்திருக்கிறேன். பின்—வாயில் வழியே ஓடிப்போய் விடலாம். வா" என்றான்.

ம்ருண்மயி தனது தலையை உக்ரமாக அசைத்து: "மாட்டேன்" என்றாள். அபூர்வன் அவளுடைய மோவாயைப்பிடித்து மெதுவாகத் தூக்கி:—"அதோ யார்வந்திருக்கிறார்கள் பார்!" என்றான். ராகால்வந்து கதவோரத்தில் பேதை போலே நின்றுகொண்டு ம்ருண்மயியை நோக்கினான். அவனையே அபூர்வன் அவளுக்குக் காட்டினான். அவளோ முகத்தை உயர்த்தாமல் அபூர்வனுடையகையைத் தள்ளிவிட்டாள்.

"ராகால் உன்னுடன் விளையாட வந்திருக்கிறான். நீ வாராயோ?" என்றான் அபூர்வன்.

"மாட்டேன்" என்றாள். ராகால் இந்தக் காட்சியைவிட்டுத் திருப்தியுடன் ஓடிப்போய் விட்டான்.

அபூர்வன் மௌனமாக அசைவின்றி வீற்றிருந்தான். ம்ருண்மயி விடைத்து விடைத்து அழுதாள். அந்த சிரமத்தினால் தூங்கி விட்டாள். பின்பு அபூர்வன் பேசாமல் எழுந்து கதவைச் சார்த்திக்கொண்டு வெளியே போய் விட்டான்.

மறுநாள் ம்ருண் மயிக்குத் தந்தையிடமிருந்து ஒரு கடிதம்வந்தது. தந்தை தன தருமைக் குமாரியின் விவாகஸமயத்தில் தான் வந்திருக்க இடமில்லாமல்போனதுபற்றி வருத்தப்பட்டெழுதி யிருந்தான். ஆசீர்வாதங்கள் பண்ணி முடித்திருந்தான். ம்ருண்மயி மாமியாரிடம் : — "எங்கள் அப்பாவைப் பார்க்கப் போகிறேன்" என்றாள்.

மாமியார் திட்டத்தொடங்கினாள்:—"உங்களப்பா! அவனுக்குக் குடியிருக்க வீடில்லை. தகரக் குடிசையில் இருக்கிறான். நீ அவனிடம் போய் என்ன செய்வாய்?" என்றாள்.

ம்ருண்மயி மனமுடைந்து தன் அறைக்குள்வந்து அழத்தொடங்கினாள் : — "ஐயோ,

அப்பா, என்னை வந்து கூட்டிக்கொண்டு போக மாட்டாயா? இங்கே என்னிடம் ஒருவருக்கும் அன்பில்லையே! இங்கிருந்தால் செத்துப் போவேனே!" என்று புலம்பினாள்.

நள்ளிரவில், கணவன் உறங்குகையிலே, அவள் மெதுவாகக் கதவைத் திறந்துகொண்டு வெளியே ஓடிப்போய் விட்டாள். மேகமூட்டமாக இருந்தது. இருந்தாலும் அவளுக்கு வழி தெரியத்தக்க நிலா வீசிற்று. தகப்பனூருக்குப்போக ரஸ்தா அவளுக்குத் தெரியாது. தபால் ஓட்டக்காரன் ஓடும் பாதை வழியேபோனால் பூமண்டலத்திலுள்ள ஸமஸ்த மனிதரின்மேல் விலாஸங்களும் அகப்படும் என்பது அவள் மனதின் கொள்கை.

அவ்வழியே போனாள். பொழுது புலருமுன் மிகவும் களைத்துவிட்டாள். முன்னே எழும் பறவைகள் உதயத்தைநாடி ஐயுறவுடன் ஒலித்தன. ம்ருண்மயி நதியோரத்திலுள்ள பெரியரஸ்தாவின் இறுதிக்கு வந்தாள். அங்கே பெரிய பஜார். அப்போது தபால் "ரன்ன"

ருடைய இரும்பு வளையத்தின் சத்தம் கேட்டது. ஆவலுடன் அவனருகேபோய் எய்த்த குரலில்:—"குஷீகஞ்ச் பட்டணத்தில் எங்கள் அப்பா இருக்கிறார். அங்கே என்னைக் கூட்டிக் கொண்டுபோ" என்றாள்.

குஷீகஞ்ச் எந்த லோகத்தில் இருக்கிறதென்ற விஷயமே தனக்குத் தெரியாதென்று தபால்காரன்சொன்னான். அடுத்த க்ஷணத்தில் அவன் தபால்தோணி மீகானை எழுப்பித் தோணியிலேறிப் போய்விட்டான். இரக்கத்துக்கும் விசாரணைக்கும் அவனுக்கு நேரமில்லை. மருண்மயி படித்துறையில் இறங்கித் தோணிக்காரனைக் கூப்பிடும்போது, பொழுதுவிடிந்து, நதிக் கரையும் ரஸ்தாவும் நன்கு கண்விழித்துக் கொண்டன. தோணிக்காரன் ஜவாப்சொல்லு முன்னே பக்கத்துத் தோணியிலிருந்த ஒருவன்: — "ஹோ, ஹோ, மிருணு! நீ இங்கே எப்படி வந்துசேர்ந்தாய்?" என்று கூவினான். கூவினவன் பெயர் வனமாலி. இவன் ஒரு செம்படவன். அவளுடைய கிராமத்தான்.

மிருண்மயியின் வசப்படாத் தன்மையெல்லாம் தெரிந்தவன்.

அவள் ஆத்திரத்துடன்:—"அடே, வனமாலீ; குஷீகஞ்சுக்கு என்பிதா இருக்குமிடத்துக்குப் போகிறேன். என்னை உன்தோணியில் ஏற்றிக்கொண்டு போ" என்றாள்.

அவன்:—"தகப்பன் வீட்டுக்குப் போகிறாயா? சரி. வா" என்றான். மிருண்மயி அவனுடைய தோணியில் ஏறினாள். மேகங்கள் திரண்டன. மழை சோனைசொரிந்தது. நதியில் வெள்ளம். தோணி ஆடி ஆடிக்கொண்டு போயிற்று. மிருண்மயி தூங்கி விட்டாள். அவள் கண்விழித்தபோது தான் பழைய மாமியார் வீட்டில் தனது படுக்கையறையில் கிடத்துண்டிருப்பது கண்டாள்.

இவள் விழித்ததைக் கண்டவுடனே வீட்டுத்தாதி வையத் தொடங்கினாள். பிறகு மாமியாரும் வந்துசேர்ந்தாள். மிருண்மயி கண்களைப் பாக்கத்திறந்து மாமியார் முகத்தை

மவுனமாக உற்று நோக்கினாள். எனினும், மாமியார் செய்த உபந்யாஸத்தினிடையே ப்ருண்மயியுடைய குடும்பத்தின் ஒழுக்கத் தவறு பற்றிய அம்சம் வந்தபோது இவள் அறையைவிட்டு வெளியே பாய்ந்து மற்றோர் அறைக்குள் புகுந்து கதவை உள்ளே தாள் இட்டாள்.

அபூர்வன் தாயிடம் வந்து: — "அம்மா, அந்தக் குட்டியைப் பிறந்தகத்துக்குச் சிலநாள் அனுப்பினாலென்ன?" என்று கேட்டான்.

"வாயை அசைத்தால் எத்தனையோ சரியான பெண்கள் கிடைத்திருக்குமே, மகனே! இந்தப் பிடாரியைப்போய்க் கொண்டாயே!" என்றுசொல்லித் தாய் அஸாத்யமாகக் கோபித்துக் கொள்ளலானாள்.

ரு

நடுநிசி. அபூர்வன்வந்து பெண்டாட்டியை எழுப்பினான். "உங்களப்பா வீட்டுக்குக் கூட்டிக்கொண்டு போகிறேன். வருகிறாயா?" என்

ளுன். அவள் அவனுடைய கையை இறுகப் பிடித்துக்கொண்டு, "சரி" என்ருள்.

அபூர்வன்:—"அப்படியானல் வா. இங்கிருந்து ஓடிப்போய் விடுவோம். துறையிலே தோணி தயார்செய்து வைத்திருக்கிறேன்" என்று ரஹஸ்யமாகச் சொன்னுன்.

மிருண்மயி தனது கணவன் முகத்தை நன்றியறிவுடன் நோக்கினுள். எழுந்துடுத்து வெளியேபுறப்பட யத்தனம் செய்தாள். அபூர்வன் தனது தாய்க்கு ஒருகடிதம் எழுதிவைத்தான். இருவரும் கைகோத்து வெளிப் பட்டனர்.

தன்னையறியாமலே அன்பின் காவலை வேண்டிக் கணவன் கையை இப்போதுதான் முதல்தடவை மிருண்மயி பற்றிக்கொண்டாள். ஆழ்ந்த இருளில் தனிமையான பாதைவழியே இருவரும் சென்றனர்.

படித்துறைக்குவந்து தோணியில் ஏறினர். மிருண்மயி தனது அடங்காமகிழ்ச்சியை

யும்மீறித் துயில்கொண்டாள். மறுநாள் ஆஹா! என்ன விடுதலை! எத்தனை பேசொணாத ஆநந்தம்! எத்தனையோ கிராமங்கள், சந்தைகள், வயல்கள், கட்டடங்களுக்கருகே நின்ற தோணிக் கூட்டங்கள், இவற்றையெல்லாம் கடந்து சென்றனர். மிருண்மயி அற்ப விஷயங்களுக் கெல்லாம் கேள்விகள் சொரிந்தாள். ‘அந்தத்தோணிகள் எங்கிருந்து வருகின்றன? அவற்றில் என்னமூட்டை ஏற்றி யிருக்கிறார்கள்? அதோ, அந்த கிராமத்தின் பெயரென்ன?’ இங்ஙனம், அவளுடைய கேள்விகளுக்கு அவன் கலாசாலையில்படித்த புஸ்தகங்களில் உத்தரமில்லை. அபூர்வன் சொல்லிய உத்தரங்கள் பெரும்பாலும் பொய். எள்ளு மூட்டைகளைக் காட்டிக் கடுகு மூட்டை என்றான். கச்வாடு கிராயத்துக்குப் பெயர் ராயநகரம் என்றான். ஜில்லா கலெக்டர் கச்சேரியைக்காட்டி ஜமீந்தாருடைய கச்சேரி என்றான். என்ன உத்தரம் கிடைத்த போதிலும் அவள் ஸந்தோஷப்பட்டாள். பொய் என்ற ஸம்சயம் அவள்மனதில் பிறக்கவில்லை.

மறுநாள் தோணி குஷீகஞ்ஜ் கிராமத்துக்கு வந்தது. ஈசானன் தனது குடிசையில் ஒரு முக்காலிபோட்டு உட்கார்ந்திருந்தான். சதுரமான எண்ணெய் விளக்கெரிந்து கொண்டிருந்தது. மேஜைமேல் பெரிய பதிவுப் புஸ்தகம் விரித்துப்போட்டுக் கிடந்தது. அவன் கணக்கில் முழுகிக் கிடந்தான். அப்போது இளையவர் இருவரும் அங்கு சென்றனர்.

"அப்பா!" என்று ம்ருண்மயி கூப்பிட்டாள்.

அந்தத்தகரக்குடிசையில் அந்தச்சொல்லை அத்தனை இனியகுரலில் எப்போதுமே கேட்டதில்லை. குழந்தைக்கு எப்படி நல்வரவு கூறுவதென்று தெரியாமல் ஈசானன் ஊமைபோலேயிருந்து கண்ணீர்விட்டான். சணல் மூட்டைகளும், தஸ்தாவேஜ் கட்டுக்களும் ததும்பிக் கிடப்பதாய்த் தனது படுக்கையறையும் ஆகிய அக்குடிசையில் புதுமணப் பெண்ணுக்கும் மாப்பிள்ளைக்கும் எப்படி இட ஸௌகர்யம் செய்து கொடுப்போமென்று ஈசானன் தியங்கி

ஞன். அப்பால் போஜன விஷயம்! அவன் தனக்குமாத்திரம் ஏதோ சொற்பமாகச் சமையல்பண்ணி வைத்திருந்தான். இவர்களுக்கு அதை எப்படிக் கொடுப்பது?...... "அப்பா, நான் சமையல்பண்ணுகிறேன்" என்று மிருண்மயி சொன்னாள்.

அபூர்வனும் இந்த வார்த்தைகேட்டுப் பூரித்தான். மனுஷ்ய வாஸத்துக்கும், போஜனத்துக்கும் சற்றேனும் இடம் போதாத இந்தச் சிறிய அறைக்குள் அவர்களுடைய ஆநந்தம் முழுமையாகித் ததும்பிற்று. ஊற்று வாயின் குறுக்கத்துக்குத்தக்கபடி அதிக உயரம் பாயும் நீர்த்தாரைப்போலே.

இங்ஙனம் மூன்றுநாள் கழிந்தன. பகல் முழுதும் கட்டத்தில் புகைக்கப்பல்கள் வந்து நின்று பெரிய அமளியாக இருக்கும். மாலையானவுடன் ஆற்றங்கரையில் ஆளோசையிராது. அந்தநேரத்தில்—ஆ, என்ன விடுதலை! பகலிலே தெரிந்தும் தெரியாமலும் சமையல் பண்ணும் தொழில்—எத்தனை வேடிக்கை! தேலி

களும், மருண்மயிக்கு நேரே வீட்டுத்தொழில் தெரியவில்லை யென்பதிலிருந்து வேடிக்கைச் சண்டைகளும், பலவிதமான பொழுதுபோக்கு! கடைசியில் இந்தக் காண்டம் முடிவு பெற்றது. சொல்லாமல் வந்துவிட்டதை யெண்ணி, இன்னும் நெடுநாள் மீளாதிருந்தால் தாய் கவலைப் படுவாளென்று அபூர்வன் அஞ்சினான். திரும்பிப் போவதே நியாயமென்று ஈசானனும் சொன்னான்.

சூ

குற்றவாளிகள் வீட்டுக்குத் திரும்பின போது தாய் பேசவேயில்லை. ஏன் போனீர்களென்று கேட்டாலும் ஒருவிதமாக உத்தரம் சொல்லி முடிக்க இடமுண்டு. அவளுடைய மவுனம் ஸஹிக்கமுடியாததாயிற்று. அபூர்வன் கல்கத்தாவுக்குத் திரும்பிப்போய் வக்கீல் பரீக்ஷைக்குப் படிக்கவேண்டு மென்றான். உன் பெண்டாட்டி ஸங்கதி என்ன?" என்று தாய் கேட்டாள்.

"அவள் இங்கே இருப்பாள்" என்றான் அபூர்வன்.

"கூடாது, கூடாது, கூடாது. நீ அவளை அழைத்துக்கொண்டுபோ" என்றாள் தாய்.

அபூர்வன் ஹிம்ஸைகொண்டவனாய் 'சரி' என்றான்.

அவர்கள் கல்கத்தாவுக்குப் போவதற்குரிய ஆயத்தங்கள் நடைபெற்றன. புறப்படும் நாளுக்கு முந்திய இரவில், அபூர்வன் படுக்கையிலே ம்ருண்மயி அழுதுகொண்டுகிடப்பதைக் கண்டான். மனம் புண்பட்டு:—

"ம்ருணு; என்னுடன் கல்கத்தாவுக்குவர உனக்கு ஸம்மதமில்லையா?" என்று கேட்டான்.

"இல்லை" என்றாள். "உனக்கு என்மேலே பிரியமோ, இல்லையோ?" என்று கேட்டான். உத்தரம்கிடைக்கவில்லை. சில ஸமயங்களில் இப்படிப்பட்ட கேள்விகளுக்கு ஜவாப்சொல்லுதல் மிகவும் எளிது. வேறு சில ஸமயங்களில் சிறு பெண்களுக்கு இத்தகைய வினாக்கள் மிகவும் சிக்கலாகத் தோன்றுகின்றன.

அபூர்வன்:—"ஏன்? உனக்கு ராகாலைப் பிரிந்துவர மனமில்லையோ?" என்றான். "மன

மில்லை" என்றாள் மிருண்மயி. பி. ஏ. பட்ட மிருப்பதுபற்றிச் செருக்குற்றிருந்த அவ்விள மகன் இதனைக்கேட்டபோது பொறாமையாகிய ஊசி அவன் நெஞ்சின் ஆழத்திலே குத்திற்று.

"நான் திரும்பிவர இன்னும் எத்தனையோ காலம் ஆகும்" என்றான்.

மறுமொழி யில்லை.

"இரண்டு வருஷமாகும். அதிகமானாலும் ஆகும்" என்றான்.

அதற்கு மிருண்மயி:— 'அப்படியானால் திரும்பி வரும்போது ராகாவுக்கு மூன்றலகு போட்ட சீமைக்கத்தி ஒன்று வாங்கிக்கொண்டு வா" என்றாள்.

அபூர்வன் எழுந்துட்கார்ந்து:—"அப்படி யானால் நீ இங்கிருக்கத்தான் உத்தேசமோ?" என்றான்.

"தாய்வீட்டில் போய் இருப்பேன்" என்றாள் மிருண்மயி.

அபூர்வன் பெருமூச் செறிந்து:—

"சரி. நீ என்னைவரச் சொல்லிக் கடிதம் எழுதும்வரை நான் திரும்பிவர மாட்டேன். உனக்கு மிக, மிக ஸந்தோஷம் தானே?" என்றான்.

இந்த வினவுக்கு விடை வேண்டியதில்லை யென்றெண்ணி மிருண்மயி தூங்கத் தொடங்கினாள். அன்றிரவு அபூர்வன் துயில் புரியவில்லை.

பொழுது புலருநேரத்திலே அபூர்வன் மிருண்மயியை எழுப்பி:— "மிருணு, போக நேரமாய்விட்டது. உன்னை உனது தாய் வீட்டில் கொண்டு விடுகிறேன் வா" என்றான்.

அவள் படுக்கைவிட் டெழுந்த வுடனே அவளுடைய இரண்டு கைகளையும் பிடித்துக் கொண்டு அபூர்வன் சொல்லுகிறான்:— "நான் உன்னிடம் ஒரு ப்ரார்த்தனைசெய்து கொள்ளுகிறேன். உனக்குப் பல ஸமயங்களில் உதவி செய்திருக்கிறேன். இப்போது உன்னிடம் கைம்மாறு வேண்டுகிறேன்" என்றான். மிருண்மயி வியப்புற்று:-"யாதுகைம்மாறு?" என்றாள்.

"ம்ருணு, சுத்தமான காதலுடன் எனக்கொரு முத்தங்கொடு" என்றான் அபூர்வன்.

இந்த விசித்திரமான பிரார்த்தனையையும் கேட்டு, அவனுடைய ஆழ்ந்த முகக்குறிப்பையும் பார்த்தவுடனே ம்ருண்மயி கலீரென்று நகைத்தாள். சிரிப்பு முடிந்தபின் முகத்தை முத்தமிடக் காட்டினாள். மறுபடியும் சிரிக்கத் தொடங்கினாள். கடைசியில் அவளாலே சிரிப்பை அடக்கி முகத்தை நேரே காட்ட முடியாதென்று முடிந்தது. அபூர்வன் மெதுவாக அவள் காதைக்கிள்ளினான்.

எ

ம்ருண்மயி தாய் வீட்டுக்குவந்து பார்த்த போது முன்னத்தனை சுகமாகப் பொழுதுபோக வில்லை. நேரம் பெரிய பாரமாயிற்று. இந்த வட்டகையிலேயே ஏதோ குறைகிறது! என்றெண்ணலானாள். பிறகு திடீரென்று அவள் மனதில் வீடும் கிராமமும் பாழாகத் தோன்றின. கல்கத்தாவுக்குப் போகவேண்டுமென்று விரும்பலுற்றாள். அந்தக் கடைசி யிரவிலேயே

தனது குழந்தைப்பெண் ஸ்வபாவம் மாறியிருந்ததை அவள் அறியவில்லை. தனது பழமைச் சுற்றங்களை, மரம் இலைகளை உதிர்ப்பதுபோல், உதிர்த்து விட்டுச் சென்றிருக்கலாம். விதி தனது மந்திரவாளால் அவள் குழந்தைப்பருவத்தையும், இளமையையும் இரண்டு துண்டாக வெட்டிய ஸூக்ஷ்மத்தில், வெட்டு விழுந்த பின்னும் அவை ஒட்டிக் கொண்டிருந்தன. அவள் கொஞ்சம் அசைந்தாள். சிசுப்பருவம் கீழே விழுந்தது. அதனைக் கண்டு வியப்புற்றாள். தாய் வீட்டில் பழைய கட்டிலில் ஸந்தோஷத்துடன் படுத்துக் கொண்டிருந்த குழந்தை மாறிப் போயிற்று. அவளுக்கு மற்றொரு படுக்கை யறையில் மற்றொரு கட்டிலைப் பற்றிய ஞாபகம் அடிக்கடி வந்து தொல்லை செய்தது. ம்ருண்மயி வீட்டைவிட்டு வெளியேறுவதை நிறுத்திவிட்டாள். அவளுடைய நகைப்பில் ஒரு புதிய தொனி காணப்பட்டது. ராகால் அவளைக் கண்டு பயப் படத் தொடங்கினான். அவளுடன் விளையாடும் யோசனையை அறவே விட்டு விட்டான்.

ஒரு நாள் ம்ருண்மயி தாயிடம்வந்து :—
"அம்மா என்னை மாமியார் வீட்டிலே கொண்டு
விடு" என்றாள்.

இதன் பிறகு ஒரு காலையில் மாமியார்
தனது பாதத்தில் வந்து ம்ருண்மயி நமஸ்காரம்
செய்யக்கண்டு வியந்தாள். உடனே எழுந்து
மருமகளைத் தழுவிக் கொண்டாள். அவர்க
ளுடைய ஸம்யோகம் ஒரு க்ஷணத்தில் ஸம்
பூர்ண மாயிற்று. அஸூயை மேகம் படர்ந்
திருந்த வானத்தில் அது நீங்கிக் கண்ணீர்
மழை தளதள வென்று மின்னிக் கொண்டிருந்
தது.

மிருண்மயியின் உடம்பிலும் உணர்விலும்
பெண்மை ஆழ்ந்து வளம்பெற்று நிரம்பிய
போது, அவள் மனதில் பெரிய நோவுண்டா
யிற்று. வரியிலே வீழ்ந்த மழை நிழல்போலே
கண் கலுழ்ந்தது. தன் மனதிற்குள்ளே புரு
வுனை நோக்கிப் பின்வரும் கேள்விகள் கேட்க
லானாள் :— "எனக்குத்தான் உன்னை விரை
விலே தெரிந்துகொள்ள முடியவில்லை. நீ ஏன்

என்னை அறியாது போயினை? நான் கல்கத்தாவுக்கு வரமாட்டேனென்று சொல்லியபோது என் பணிவின்மையை நீ ஏன் க்ஷமித்தாய்?" என்று புலம்பினாள்.

மேலும் ம்ருண்மயி, அன்றொரு நாட்காலை, குட்டத்துக்கருகே, அபூர்வன் தனது கையைப் பற்றிப் பின் நெகிழ்த்த காலத்தில் அவன் பார்த்த பார்வையின் பொருளை இப்போது தான் ஆழங் கண்டறிந்தாள். பின் அவன் விடைபெற்றுப் போகையிலே முத்தமிட முயன்று வீணானதை எண்ணி, நீர்விடாய் கொண்ட பக்ஷிபோல், அதனைத் திரும்ப வேண்டி வருந்தினாள். 'உன்னிடமிருந்து கடிதம் கிடைத்தாலன்றி மீண்டு வாரேன்" என்று கணவன் சொல்லிப் போனதை நினைத்துக் கடித மெழுதத் தொடங்கினாள். ஓரங்களில் தங்க முலாம் பூசிய கடிதத் தாள் அவளுக்குக் கணவன் கொடுத்திருந்தான். அவற்றில் ஒன்றை யெடுத்து, விரல்களெல்லாம் மையாகப் பெரிய பெரிய எழுத்துக்களில் எழுத

லானுள். ஆரம்பத்தில் முன்னிலே விளி இல்லாமல் துடுபென்று விஷயத்திலே பாய்ந்தாள்:—

"நீ ஏன் கடிதம் போடவில்லை? நீ க்ஷேமந்தானு? சீக்கிரம் புறப்பட்டு இங்கே வா."

இவ்வளவுதான் மேலே பதங்கள் கிடைக்கவில்லை. முக்யமான விஷயம் சொல்லியாய் விட்டாலும், இடம் நிரப்ப வேண்டாமா? என்ன செய்வாள்? மண்டையை உடைத்துப் பதங்கள் தேடினுள். பிறகு பின்வரும் வாக்யங்களைச் சேர்த்தாள்:—

"இந்தத் தடவை கடிதமெழுத மறக்காதே, உன்னுடைய உடம்பு நேரே இருக்கிறதா, வீட்டுக்குத் திரும்பிவா; உன்தாயாரும் க்ஷேமம் நம்ம வீட்டு மான் நிறப் பசுவும் நேற்றிராத்திரி கன்றுக் குட்டியைப் போட்டது" இவ்வளவுதான். இதற்குமேல் எழுத ஸாத்யப் படவில்லை. கடிதத்தை உறைக்குள் போட்டாள். "ஸ்ரீயுத பாபு அபூர்வ கிருஷ்ண ராய்" என்று தன் கணவன் பெயரை உறை மேல் எழுதும்போது அந்த நாமத்தின்மீது

தன் காதலை யெல்லாம் சிந்தினாள். பெயர் மாத்திரம் எழுதினால் மேல் விலாஸத்துக்குப் போதுமென்று நினைத்துக் கொண்டிருந்தாள். காயிதம் போய்ச் சேரவில்லை. தபால் அதிகாரிகளின்மீது குற்றம் சொல்லவும் இடமில்லை.

அ

ரஜாக்காலம் வந்தது. அபூர்வன் வீட்டுக்குத் திரும்பவில்லை. தாய், தன்மீதே அவன் சினந்திருக்கிறான் என்று நினைந்தாள். மிருண்மயி தனது கடிதத்தின் வக்கணை அவனுக்குத் திருப்திப்படவில்லை, அதனாலேதான் அவன் வரவில்லை யென்று துணிவு கொண்டாள். கடைசியாகத் தாய் மருமகளை நோக்கி, ஒரு நாள்:— "அபூர்வன் நெடுங் காலமாக வரவில்லை. அவனைப் பார்க்கும் பொருட்டு நான் கல்கத்தாவுக்குப் போகிறேன். நீயும் வருகிறாயா?" என்று கேட்டாள்.

மிருண்மயி ஆகட்டுமென்று தலையை அதிவேகமாக அசைத்தாள். அறைக்குள்ளே புகுந்து உள்ளே தாளிட்டுக் கொண்டாள்

படுக்கை மேலே போய் விழுந்தாள். தலையணையை மார்பிலே அழுத்திக் கொண்டாள். தன் ஆத்திரத்தை நகைப்பிலும் புரட்சியிலும் சமனம் பண்ணிக் கொண்டாள். இந்த வெறி முடிந்தவுடன் விசன மேலிட்டவளாய் எழுந்துட்கார்ந்து வாயைத் திறவாமல் சல சல வென்று கண்ணீர் உதிர்த்தாள்.

அபூர்வனிடம் தெரிவிக்காமலே இவ்விரண்டு ஸ்த்ரீகளும் அவனிடம் மன்னிப்புக் கேட்கக் கல்கத்தாவுக்கு வந்து சேர்ந்தனர். பெரியவளுக்குக் கல்கத்தாவிலே ஒரு மாப்பிள்ளை வீடிருந்தது. அதில் வந்திறங்கினர்கள். அன்று சாயங்காலமே அபூர்வன் தனது சபதத்தை மறந்து ம்ருண்மயிக்கு ஒரு கடிதமெழுதலானன். அவளிடம் தனக்குள்ள காதலைத் தெரிவிக்கத் தகுந்த ஆசைச் சொற்கள் தனது தாய்ப் பாஷையில் இல்லாமை பற்றி அதனிடம் வெறுப்புற்றான். இப்படியிருக்கையில் அவனுக்குத் தன் மைத்துனன், (அதாவது தங்கை புருஷன்) ஒரு காயிதம்

அனுப்பினான். அதில் "உன் தாயார் வந்திருக்கிறாள். போஜனத்துக்கு இங்கேயேவந்துவிடு" என்றெழுதி யிருந்தது. தாமஸமின்றி ஸஹோதரி வீட்டுக்கு வந்து சேர்ந்தான்.

தாயைக் கண்டவுடனே முதலாவது கேள்வி:— "அம்மா, வீட்டில் எல்லாரும் ஸௌக்கியந் தானே?" என்று கேட்டான்.

அவள்:— "ஆம் உன்னை வீட்டுக்கு அழைத்துச் செல்ல வந்தேன்" என்றாள்.

அபூர்வன்:—"இதற்காக இவ்வளவு சிரமப்பட்டு வரவேண்டுமா? என்னால் இப்போது ஊருக்கு வரமுடியாது. எனக்குப் பரீக்ஷை வருகிறது......" என்று பல பல வார்த்தைகள் சொன்னான்.

தங்கை புருஷன் அங்கிருந்து வந்து புன்னகை செய்து:— "அவனுடைய பெண்டாட்டியை நான் வந்து பார்க்கக் கூடாதாம்! அவனுக்கு என் விஷயத்தில் கொஞ்சம் பொறாமை. அதனாலேதான் இப்போது கிராமத்துக்குப்

போக வேண்டாமென்று சொல்லுகிறான். அதுதான் உண்மையான காரணம். மற்றதெல்லாம் வீண் முகாந்தரம்" என்று பரிஹாஸம் பண்ணினான்.

அப்போது தங்கை:—"உன்விஷயத்தில் பயந்தான். ஆக்ஷேபமென்ன? உன் மூஞ்சியைப் பார்த்தால் அந்தப் பெண் பயந்து நடுங்கிப்போகும்" என்றாள்.

இங்ஙனம் சிரிப்பும் பரிஹாஸங்களும் மலிந்தன. அபூர்வன் பேசாதிருந்தான். மருண்மயிலைக் கூட்டி வாராதது பற்றித் தன் தாயை மனதுக்குள்ளே பலவாறு வைது கொண்டிருந்தான். பிறகு, ஒரு வேளை தாய் மன்றாடி அழைத்தும் அந்தப் பெண்ணுக்கு வர ஸம்மதமில்லையோ என்னவோ என்று யோசனை பண்ணினான். அதைப் பற்றித் தாயிடம் கேள்வி கேட்க அஞ்சினான். இந்த உலகமே பிழைமயமென்று அவன் புத்தியில் புலப்பட்டது.

போஜனம் முடிந்தது. மழை ஆரம்பித்தது. தங்கை சொன்னாள்:— "அண்ணா, நீ இங்கேயே இன்று படுத்திருந்து போ" என்றாள். அபூர்வன்:—"எனக்கு வேலை யதிகம். நான் போகவேண்டும் என்றான்." தங்கை புருஷன்:— "அட, அஸம்பாவிதமே! நீ வாவில்லையென்று அங்கே யார் அடிக்கப் போகிறார்கள்? பயப்படாதே, இங்கே இரு" என்றான். அப்போது தங்கை அபூர்வனிடம் ஒரறையைக்காட்டி:— "அந்த அறையிலே போய்ப் படுத்துக் கொள். மிகவும் களைத்திருக்கிறாய்." என்றாள். அபூர்வன் அவ்வறைக் குள்ளே சென்றான். அது இருண்டு கிடந்தது. "விளக்கு வேண்டுமா?" என்று தங்கை கேட்டாள். வேண்டியதில்லை யென்று சொல்லிவிட்டான். கையாலேதடவிக் கட்டிலைக் கண்டுபிடித்து அதிலே படுக்கப் போனான். அப்போது மெல்லிய இரண்டு கைகள் பொன் வளைகள் குலுங்க அவனைத் தழுவின. இரண்

டிதழ்கள் கண்ணீரோடு கலந்து அவனை மூச்சுத் திணறும்படி முத்த மிட்டன.

ஆரம்பத்திலே பையன் திடுக் கிட்டுப் போனான். பிறகு பார்க்கையிலே முன்பு சிரிப்பினாலே தடைப்பட்ட முத்தங்கள் இப்போது கண்ணீரால் பரிஸமாப்தி பெற்றமை கண்டு மகிழ்ந்தான்.

"ஸமாப்தி" என்ற கதை

முற்றிற்று.

புதுவை. சைகோன் சின்னையா அச்சுக்கூடம்.